# வளை ஓசை

2012



வெளியீடு:
பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம்,
கண்டாவளை,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி நகர் கண்ணகை அம்மன் நல்லாசியுடன்
“வளை ஓசை” மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்.





ஆலய பரிபாலன சபையினரும்,
அங்கத்தவர்களும்,
கண்ணகிநகர்,
புன்னைநீராவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம்-கண்டாவளை

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය කණ්ඩාවලෙයි

-1989-

DIVISIONAL SECRETARIAT, KANDAWALAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவை

பண்பாடு வளம்பெற கரம் இணைப்போம்

பிரதேச செயலகம் கண்டாவளை.

DIVISIONAL SECRETARIAT,KANDAWALAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல்திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!

பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்துடைக்கினும் ஓர்
எல்லை அறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதிரத்து எழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துமே.

ஆக்கம்:
மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரப் பேரவைக் கீதம்

**பல்லவி**

வளம் கொழிக்கும் கண்டா வளை வாழ்கவே - எம்
வாழ்வினில் வற்றாத ஊற்றாகவே - என்றும்

(வளம்)

**அனுபல்லவி**

உளம் களிக்கும் கூத்துக் கலை செழிக்கும் - எம்மை
உயர்த்தும் ஆலயந்தொறும் பொங்கலும் பூசையுமாய்

(வளம்)

**சரணங்கள்**

நெல் வயற் பசுமை நம் கண்களை நிறைக்கும்
நெய்தலின் மீன்வளம் செல்வங்கள் கொழிக்கும்
கல்வியை வளர்க்கின்ற கூடங்கள் எங்கும்
கைத்தொழில் ஓங்கிடும் அற்புதம் எங்கும்

(வளம்)

எளிமையும் நேர்மையும் அணியெனப் பூண்பார்
இறையடி தொழுவதில் பேரின்பம் காண்பார்
உழுதுண்ணும் வாழ்க்கையின் மகத்துவம் உணர்வார்
ஓய்வறியார் எங்கள் உயிர்களில் வாழ்வார்.

(வளம்)

(ஆக்கம் : சோ.ப.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழு

**திரு. த. முகுந்தன்**
கலாசாரப் பேரவையின் தலைவரும்,
பிரதேச செயலரும்,
கண்டாவளை.

**திரு. சி. அருட்செல்வன்**
உதவித் திட்டமிடல் பணிப்பாளர்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

**திரு. த. அமலதாஸ்**
கலாசாரப் பேரவையின் செயலாளரும்,
கலாசார உத்தியோகத்தரும்,
கண்டாவளை.

**திரு. தி. பிரபாகரன்**
அபிவிருத்தி உதவியாளர்,
பிரதேச செயலகம்,
கண்டாவளை.

**திரு. செ. ஆறுமுகம்**
உப செயலாளர்,
பிரதேச கலாசாரப் பேரவை,
கண்டாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே...


தமிழ்த்தாய் வாழ்த்து
பேரவைக் கீதம்
மலர்க்குழு விபரம்

| | | |
|---|---|---|
| 1. | ஆசிச்செய்திகள் | ix-xiii |
| 2. | வாழ்த்துச் செய்திகள் | xiv-xviii |
| 3. | வளையோசை ஓர் வாழ்வியல் தடம் | xix |
| 4. | கண்டாவளைப் பிரதேச வரலாற்று தொன்மை | 01 |
| 5. | நிழல்களே நிஜங்கள் | 05 |
| 6. | நாய்க்குட்டி குஞ்சு | 07 |
| 7. | தன்னிகரற்ற தமிழின் தனித்தன்மைகள் | 08 |
| 8. | ஒரு கிராமத்தின் கதை | 14 |
| 9. | விந்தை மனிதன் | 18 |
| 10. | கண்டாவளைப் பிரதேசம் சார்ந்ததான நூலாக்க முயற்சிகளும் அவற்றின் அடைவுகளும் ஒரு நோக்கு | 19 |
| 11. | கலவெட்டித்திடல் ஆதி (பழைய) கண்ணகி அம்பாள் ஆலயச் சூழலும் ஆகமம் சாராத வழிபாட்டு முறைகளும் | 26 |
| 12. | மீண்டும் துளிர்விடும் கொழுந்து புலவுக்கிராமம் | 31 |
| 13. | கைபேசிக் காதல் | 34 |
| 14. | 116ஆவது நிறைவைக் காணும் கிளி/கண்டாவளை மகா வித்தியாலயம் | 35 |
| 15. | பண்பான தமிழ்ச்சமூகம் இப்படியும் சீரழிவதா? | 40 |
| 16. | விமோசனம் | 42 |
| 17. | தங்கத்தமிழ் | 44 |
| 18. | தெளிவு | 45 |
| 19. | நங்கை நீ | 48 |
| 20. | "மலேசியா" ஓர் அனுபவப் பகிர்வு | 50 |
| 21. | "மாயை" | 53 |
| 22. | தொழில்நுட்ப வளர்ச்சியால் தொலைந்துபோகும் எமது வாழ்வு | 56 |
| 23. | பிரமந்தனாறு | 58 |

**பின்னிணைப்புக்கள்**

i. 2012 ஆண்டின் "கலை ஒளி" விருது பெறுவோர்
ii. பிரதேச கலை மன்ற செயற்குழுக்கள் (படங்கள்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச்செய்தி

வளம் கொழிக்கும் வன்னி மண்ணின் முத் தமிழின் சித்திரமாய் விளங்கும் கிளிநொச்சி மாவட்டத்திலே கலை கலாசார சடங்கு சம்பிரதாய பண்பாட்டு வாழ்வியல்களைப் பிரதிபலிக்கின்ற இடமாகத் திகழ்கின்ற கரைச்சி கண்டாவளைப் பிரதேசத்தின் பிரதேச செயலர் பிரிவின் கலாசாரப் பேரவையினரால் வெளியிட்டு வரும் "வளை ஓசை" மலரானது சென்ற வருடத்தைப் போன்று, இவ்வருடமும் "வளை ஓசை" (நாதம் - 02) ஆக மலரவிருக்கும் இச் சிறப்பு மலருக்கு கரைச்சி புளியம்பொக்கணை ஸ்ரீ நாகதம்பிரான் திருவருள் துணைகொண்டு எனது ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஒரு நாட்டின் ஒரு பிரதேசத்தின் தனித்துவத்தினை எடுத்துக்காட்டுவதில் அந்நாட்டின் அப்பிரதேசத்தினது கலை கலாசாரப் பண்பாட்டு மரபு வழிகளே முக்கியத்துவம் பெறுகின்றன. அவ்வகையில் துரிதமாக வளர்ச்சியடைந்துவரும் இந்த நவநாகரிக உலகில் இவ்வாறான மலர் வெளிவருவது மிகவும் பொருத்தப் பாடுடையதாகும். ஓர் ஆலயத்திலே அதிகாலையில் ஓசையெழுப்பப் படும் காண்டாமணியோசையானது மக்கள் மனங்களில் சேர்ந்து அவர்களைத் துயில் எழுப்பி பக்திப் பரவசம் அடையச் செய்கின் றதோ அதேபோன்று மக்களிடையே தொலைந்துபோன கலை கலாசாரப் பண்பாடுகளில் இருந்து மக்களை துயில் எழச் செய்ய வளை ஓசை மலரானது வெளிவரவிருக்கின்றது. இவ்வாறான பண்பாட்டு மரபுகளை மக்களிடையே ஒன்று சேர்த்து, நெறிமுறை தவறா மானிடனாக இவ்வையகத்தில் திகழ மலர் வழிசமைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகையில் "வளை ஓசை" மலரானது நித்தம் நித்தம் மலரும் புத்தம் புதிய மலராகவே என்றும் எல்லோர் மனதிலும் மலரவும், சிறப்பு மலராக வெளிவரவிருக்கும் இம் மலருக்கும் இதனை வெளியிடவிருக்கும் பிரதேச செயலர் பிரிவின் கலாசாரப் பேரவை யினருக்கும், இந்நூல் வெளியீட்டு விழா சிறப்புற நடைபெறவும் எல்லாம்வல்ல நாகதம்பிரான் திருவருளை வேண்டி எனது பரிபூரணமான நல்லாசிகளை வழங்கிப் பெருமகிழ்வடைகின்றேன்.

**சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள்**
நாகதம்பிரான் கோவில்,
புளியம்பொக்கணை,
பரந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி



கண்டாவளைப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் சென்ற ஆண்டுமுதல் பிரதேச கலாசார விழாவையும், அதனை முன்னிட்டு, பிரதேசம் சார்ந்த படைப்பாளிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கும் வகையில் "வளை ஓசை" எனும் ஆண்டு மலரினையும் வெளியிட்டு வருவது குறித்து மகிழ்வுறுகின்றேன். இரண்டாவது நாதமாக இவ்வாண்டும் இம்மலர் வெளிவருவது குறித்து மேலும் மகிழ்ச்சியடைவதுடன், பிரதேச கலை, கலாசார விழுமியச் செய்திகளையும்; கலை ஆக்கங்களையும் தாங்கிவரும் இந்நூல் அனைவர்க்கும் பயன்பெற வேண்டுமென்று இறையாசி கூறி நிற்கின்றேன்.

**அருட்திரு எ. செபஸ்ரியன்**
பங்குத்தந்தை,
புனித அந்தோனியார் ஆலயம்,
பரந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

"வளை ஓசை சிறப்பாக ஒலிக்கட்டும்"

ஆடலும், பாடலும் எழுத்தும் இலக்கியமும் மனித வாழ்வை வளப்படுத்துவன. மனிதர்களின் மனப்பாங்கிலும், அவர்களுடைய எண்ணங்களிலும் புதிய வளத்தை உருவாக்குவன. அத்துடன், மனிதர்களை ஆற்றுப்படுத்தவும் அவர்களை மகிழ்வூட்டி உற்சாகப்படுத்தவும் கலை பெரும் பங்களிப்புச் செய்கிறது. எனவேதான் கலைக்கு உலகெங்கும் முதன்மை யிடம் வழங்கப்பட்டுள்ளது. இதனால், அனைத்துச் சமூகத்தினரும் கலையைப் போற்றுகின்றனர்.

சமூகத்தைப் பண்படுத்தி, அதை வளப்படுத்துவதில் கலை, இலக்கியங்கள் பெரும்பங்கை வகிக்கின்றன. விஞ்ஞானம், அறிவியல், தொழில்நுட்பம், அரசியல், பொருளாதாரம் என மனித வாழ்வுக்கு அத்தியாவசியமான பிற துறைகளுக்கு நிகராகக் கலையும், இலக்கியமும் உள்ளன.

தமிழ் மக்களின் வாழ்விலும், பண்பாட்டிலும்கூட கலையைச் சிறப்பாகப் போற்றும் மரபுண்டு. கிராமியக் கலைகள் தொடக்கம், நவீன கலைகள் வரையில் தமிழர்கள் அதைச் சிறப்பாகவே வளர்த்தும் போற்றியும் வருகின்றனர்.

இந்தவகையிற் கண்டாவளைப் பிரதேசத்திலும் கலை, இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சியை நோக்கி மக்கள் செயற்பட்டு வருகின்றனர். இந்தப் பிரதேசத்திற் பாரம்பரியக் கலைகள் தொடக்கம் இன்றைய நவீன இலக்கிய முயற்சிகள் வரையில் இந்தச் செயற்பாட்டை நாம் அடையாளம் காணலாம்.

இதை மேலும் ஊக்கப்படுத்தும் வகையிற் கண்டாவளைப் பிரதேச செயலகம் இந்த ஆண்டும் கலாசார விழாவை முன்னெடுத்து "வளை ஓசை" என்ற மலரையும் வெளியிடுகின்றது. இந்த விழாவும், மலர் வெளியீடும் கண்டாவளைப் பிரதேசத்தின் வரலாற்றையும், வளத்தையும் மக்களின் வாழ்க்கையையும் பேசப்போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய அருஞ்செயல்களை முன்னெடுக்கும் பணி வரவேற்கவும், பாராட்டப்படவும் வேண்டியது. போரினால் அழிவுற்று நலிவடைந்த எங்களின் சமூகத்துக்கு இத்தகைய விழாவும் வரலாற்றுப் பதிவுகளும் மீக அவசியமானது. எனவே, இதை நாம் ஊக்கப்படுத்துவோம். அனைவருமாக இணைந்து இந்த முயற்சியை நாம் வளர்த்தெடுப்போம்.

பிரதேசத்தின் கலைஞர்களுக்கும், பிரதேச செயலகத்துக்கும் இணைந்து பணியாற்றும் பிரதேச செயலகப் பணியாளருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

நன்றி

**கௌரவ. முருகேசு சந்திரகுமார்**
பாராளுமன்ற உறுப்பினர்,
பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் கலாசார விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் "வளை ஓசை" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். பச்சைவயல்களும், பசியகாடுகளும் பரந்த எம் கிளிநொச்சி மாவட்டத்தின் எழில் நிறைந்த இடமாக விளங்குவது கண்டாவளைப் பிரதேசம். முல்லையும், மருதமும், நெய்தலும் கலந்து வளஞ்சேர்க்கும் இப்பிரதேச மக்கள் கடின உழைப்புக்கும், கலைநயத்துக்கும் பெயர்போனவர்கள். தமது உன்னத உழைப்பால் மண்ணையும் பொன்னாக்கிய இவர்கள் தம் ஓய்வுநேரத்தில் சிறப்பாகக் கலைகளையும் பேணிப்பாதுகாத்து வந்திருக்கிறார்கள்.

அவர்களது கலைப்படைப்புக்களை ஆற்றுகைப்படுத்துவதை நோக்காகக் கொண்டு கலாசார விழாவும், ஆவணப்படுத்துவதை நோக்காகக் கொண்டு "வளை ஓசை" எனும் சஞ்சிகையும் வெளியிடப்பட்டு வருகின்றது. அவ்வகையில் கடந்த ஆண்டும் இப்பிரதேச கலாசாரப் பேரவையால் சிறப்பாகக் கலாசார விழாவும், "வளை ஓசை" நாதம் ஒன்றும் வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இவ்வாண்டும் கலாசார விழாவும், வளை ஓசை நாதம் இரண்டும் வெளியிடப்படுவது மிகவும் பாராட்டத்தக்க செயலாகும்.

எனவே, இதுபோன்ற கலாசார அடையாளங்களைப் பேணிப் பாதுகாக்கும் சிறப்பான பணியினைக் கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவையும், கண்டாவளைப் பிரதேச செயலகமும் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும் எனக்கூறி, இப்பிரதேசத்தின் கலைத்துவத்தை வெளிக்கொணரும் கலாசார விழாவும், வளை ஓசை இதழும் எம் பிரதேச கலைகளையும், கலைஞர்களையும் ஊக்குவித்து வளர்க்கவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திருமதி றூ. கேதீஸ்வரன்,**
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

எம் பண்பாடு, வாழ்வியல் ஆகியவற்றைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய தலையாய பொறுப்பு எமக்குரியதே. இப்பணியில் எம்மைப் பூரணமாக ஒப்படைக்காது இவை தேய்வடைந்து செல்கின்றன எனக் கூக்குரலிடுவதில் யாது பயனும் இல்லை. ஆகவே, இவ் அளப்பெரும் பணியில் இனியேனும் எம்மை நாம் முழுமையாக அர்ப்பணிப்போமாக! இவற்றை வளர்த்தெடுக்கும் நோக்குடன் கண்டாவளைக் கலாசாரப் பேரவையினரும், பிரதேச செயலகமும் இணைந்து "வளை ஓசை" எனும் மலரினைச் சென்ற ஆண்டுமுதல் வெளியிட்டு வருகின்றார்கள். ஓசையின் நாதம் இரண்டாவது தடவையாக இவ் ஆண்டில் ஒலிக்கிறது. இந் நாதம் வெற்றிநாதமாக ஒலித்திடவும், முத்தமிழையும் வாழவைக்கும் உன்னத பணியின் பொருட்டுத் தொடர்ந்து வெளிவந்திடவும் வாழ்த்துகின்றேன்.

**செ. ஸ்ரீநிவாஸன்**<br>
மேலதிக அரசாங்க அதிபர்,<br>
மாவட்டச் செயலகம்,<br>
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பண்பாட்டு விழா ஆவண மலராம் வளை ஓசை சிறப்பாக அமைந்திட மாவட்டக் கலாசார உத்தியோகத்தரது மனம் திறந்த வாழ்த்துக்கள்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கேற்பப் பண்பாட்டு விழுமியங்களை பரம்பரைத் தொடுப்பினை - கையளிப்பினை மேற்கொண்டுவரும் செயற்பாடுகளிற் பிரதேச செயலகங்கள் தோறும் கலாசாரப் பேரவைகளினால் முன்னெடுத்து வருகின்ற பண்பாட்டு விழாக்களும் அதனோடிணைந்த நூல் வெளியீடுகளும் பிரதான வகிபங்கினைக் கொண்டுள்ளன என்பது வெள்ளிடைமலை. கலையும் வாழ்வும் பின்னிப் பிணைந்திருந்த போதிலும் மனித வாழ்வினை அர்த்தமுள்ளதாக மாற்றுவது கலையும் பண்பாடுமென்றால் அதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. எனவே, இத்தகைய செயற்பாடுகளை முன்னின்று செயற்படுத்தி வருகின்ற அமைப்புக்களையும், அதில் பின்புலமாக நின்று செயற்படுத்தும் செயல் வல்லாளர்களையும் மனதாரப் பாராட்ட வேண்டியது நம் அனைவரது கடமை மட்டுமல்ல; அவர்களுக்கு ஊக்கத் தூண்களாகவும் முன்னிற்க வேண்டும். அந்த வழியிற் கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவையின் பண்பாட்டு விழாவும், அதனோடிணைந்த கண்டாவளையோசையாம் வளை ஓசையும் சிறப்புற அமைய எனது நெஞ்சம் நிறைந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனம் நிறைவடைகின்றேன்.

**மா. அருள்சந்திரன்**
மாவட்டக் கலாசார உத்தியோகத்தர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளை ஓசை ஓர் வாழ்வியல் தடம்



எமது கண்டாவளைப் பிரதேச கலாசார விழுமியங் களை ஆவணப்படுத்தும் முயற்சியின் இன்னோர் தடமாக வளை ஓசை - நாதம் -2 வெளிவருகின்றது. இந்நூல் வெறுமனே காகிதக் கட்டுக்களாலான ஓர் ஆவணமல்ல. இது ஒரு கலாசார இருப்பின் கல்வெட்டு.

தமிழும், தமிழர் தம் வாழ்வும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கலாசார செழுமையைக் கொண்டது. அத்தகைய இனக்குழுமத்தின் பிரதிநிதிகளாய் இருக்கும் நாம் எமது கலாசார அம்சங்களைப் பேணிப்பாதுகாத்து இன்னும் பல வருடங்கள் எம் சந்ததிக்காய் வாழவைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அத்தேவையின் ஓர் துளியைத்தானும் நிறைவுசெய்ய வேண்டுமெனும் எம் எண்ணத்தின் விளைவே வளை ஓசை.

கண்டாவளை ஒரு கவினுறு சிற்றூர். இங்கு அழகும், செழுமையும், பண்பாட்டுப் பெருமையும் கொட்டிக்கிடக்கின்றது. அவ்வூரின் கலைத்துவத்தை இவ்வேடு கொஞ்சமேனும் செப்ப முயன்றிருக்கின்றது. இவ்வேட்டின் அனைத்துப் பக்கங்களும் இம்மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதர்களின் உணர்வுப் பகிர்வுகளாகவே இருக்கின்றது. இவை வெறும் அலங்கார ஆக்கங்களல்ல. படைப்பிலக்கியம் எனும் ஊடகத்தினூடே கண்டாவளையின் கவினுறு கலைகளும் பண்பாட்டு இருப்பும் எடுத்தியம்பப்பட்டிருக்கின்றது. இந்நூல் எம் இருப்பை, வாழ்வை, வழித்தடத்தை இன்னும் பலநூற்றாண்டுகள் விளம்பிநிற்கும் எனும் நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு. இந்நூலாக்கத்திற்கு உழைத்த அனைவருக்கும் எம் நன்றிகள்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்துபாயுது காதினிலே
எம் தந்தையர் நாடெனும் பேச்சினிலே ஓர் சக்தி பிறக்குது மூச்சினிலே"

- மஹாகவி பாரதி-

**த. முகுந்தன்**
பிரதேச செயலாளர்,
கண்டாவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளை பிரதேச செயலக ஊழியர் அணி



**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்):**
திரு.ந. அம்பிகைபாகன் (G.S.), திரு.கோ. சேகர் (G.S.), திரு.க. நாகேந்திரன் (G.S.), திரு.த. நந்தகுமார் (G.S.), திரு.சி.வீரசிங்கம் (G.S.), திரு.ச. சந்திரன் (G.S), திரு.ஆ. ஆனந்தரூபன் (A.O.), திரு.த. முகுந்தன் (D.S.), திரு. சி. அருட்செல்வன் (A.D.P.), திரு.சி. பரமதாஸ் (G.S.), திரு.ம. இராஜரட்ணம் (G.S.), திரு. சு. ஜெயானந்தராசா (S.S.O.), திரு.சி. பத்மசிறி (R.D.O.), திரு. த. அமலதாஸ் (C.O.), திருமதி வி. சுரேஸ் (P.O.)

**நிற்பவர்கள் 1ஆம் வரிசை:**
திருமதி ஆ. சாந்திகிருஷ்ணா (G.S.), திருமதி ஜெ. சாரதகலா (M.A.), திருமதி இ. யசிகலா (G.T.), செல்வி.வி. சுரேதினி (G.T.), திருமதி கோ. சுமதி (G.T.), திருமதி பி. சுரேந்தினி (G.T.), செல்வி கி. லக்ஷ்மிகுமாரி (G.T.), செல்வி ச. சௌமியா (Volunteer), செல்வி க. சுரேகா (G.T), திருமதி பு. லதா (G.T), திருமதி த. கலையரசி (M.A.), திருமதி ந. சர்மிளா (P.A.), திருமதி பா. குமுதினி (G.T.), திருமதி கு. மதிவதனி (G.T.), செல்வி சி. சிந்துஜா (M.A.), திருமதி ப. குகாசினி (C.O.), செல்வி ப. விஜயசாந்தினி (G.T.), திருமதி சு. கவிதா (Volunteer), திருமதி பி. நிசாந்திகிருஸ்ணா (M.A.), செல்வி. ச. ஜெனித்தா (M.A), திருமதி சு. நிர்மலா (M.A), செல்வி ஜ. கஜந்தினி (F.I.), திருமதி அ. பவதாரணி (C.O.), செல்வி க. செஞ்சுடர் (M.A.), திருமதி லோ. ஜெனட்டிலானி (M.A.), திருமதி க. ரஜிவதனா (Volunteer), செல்வி ஞா.வதனரூபி (ERPA), திருமதி. கு. கணேஸ்வரி (W.T.), திருமதி பி. விஜயராணி (M.A), செல்வி த. மல்லிகா (Volunteer), திருமதி லோ நாகநந்தினி (G.T.), செல்வி பி. விசோதா (G.T.), திருமதி சி. சிவசோதி (C.C.), திரு. தே. ஸ்ரீபன் ரஞ்சித் (D.A.)

**நிற்பவர்கள் 2ஆம் வரிசை:**
திருமதி ச. லோகப்பிரியா (G.T.), செல்வி க. தேனுகா (G.T.), செல்வி இ. கலைமதி (G.T.), திரு. சி. பிரதீபன் (G.T.), திரு. ஆ. பாலச்சந்திரன் (O.E.S.), திரு. கு. சிறிக்குமரன் (O.E.S.), திரு. அ. ஜெயகரன் (H.O.), திரு. வை. மாதவன் (S.O.), திரு. வே. சிவனேசன் (S.O.), திரு. யோ. உதயனன் (Acct. Manager), திரு. க. சண்முகலிங்கம் (M.A.), திரு. ந. கருணாகரன் (Counseller), திரு. ப. சுரேந்திரன் (P.A.), திரு. செ. விமலகாந்தன் (C.O.), திரு. து. விஜயராசா (O.E.S), திரு. சி. நீலமேகா் (O.E.S.), திரு. இ. அபராஜிதன் (G.T.), திரு. அ. பிரபாகரன் (G.T.), திரு. த. பிரபாகரன் (D.A.), திரு. இ. நவரூபன் (P.A.), திரு. சி. சிவச்செல்வன் (D.A.), திரு. ஜ. சூரியகுமார் (Driver), திரு. சி. சிவச்செல்வன் (P.A.), திரு. கா. சுதாகரன் (G.T.), திரு. பார்த்தீபன் (G.T.), திரு. ப. விமல்ராஜ் (Volunteer), திரு. மா. ஜெயராசா (O.E.S.).

**சமூகமளிக்காதோர்:**
திரு.ப. ஜூரேந்திரன் (Act. Accountant), செல்வி மு. நிசாந்தினி (F.A.), திருமதி சோ. சுகந்தினி (P.A), திருமதி த. துஷாளினி (P.A.), திரு.வே. தங்கநாதன் (O.E.S.), திருமதி சு. அருள்பாலினி (G.T.), திருமதி சு.கமலராணி (N.W.I.), திரு.க. நிதிகரன் (watar Board).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாவளை பிரதேச கலாசாரப் பேரவை உறுப்பினர்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளைப் பிரதேச வரலாற்றுத் தொன்மை

சி. பரமதாஸ்
கிராம அலுவலர், புளியம்பொக்கணை, கல்மடுநகர்.

கண்டாவளைப் பிரதேசமானது வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தையும் நெய்தல் நிலத்தையும் கொண்ட அழகிய பிரதேச மாகும். இப்பிரதேசத்தின் தொன்மை யான சிறப்புக்களையும் அதன் வளர்ச்சிகளை யும் ஆராய்வோமானால் மூன்று பிரிவுகளாக பிரித்து ஆராயப்பட வேண்டும். அதாவது ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட காலம், ஐரோப்பியர் ஆட்சிக்காலம், 1948ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட காலம் எனப் பிரித்துப் பார்க்கமுடியும்.

ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட காலத்தில் இலங்கை மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்டு முடியாட்சி நடைபெற்று வந்தது. கோட்டை இராச்சியம், கண்டி இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் என வகுக்கப்பட்டு ஆட்சி நடைபெற்று வந்தன. யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பிரிவாக வன்னி இராச்சியம் அமைந்திருந்தது.

கண்டாவளைப் பிரதேசமானது முற்று முழுதாக வன்னி இராச்சியத்திற்கு உட்பட்ட பிரதேசமாகவே அமைந்திருந்தது. கண் டாவளையையும் அதனை அண்டிய பகுதி களையும் காக்கையன் என்ற மன்னனும் புலிங்கன் முறிப்பு, ஊரியான், முரசு மோட்டை போன்ற ஏனைய பகுதிகளைப் புலிங்கதேவன் என்னும் சிற்றரசனும் வேறு பல பகுதிகளை வேறு சில சிற்றரசர்களும் ஆண்டு வந்தார்கள். கமரிக்குடா தொடக்கம் கொழுந்துப்புலவு வரை 29 கிலோமீற்றரை கிழக்கு எல்லையாகவும் காக்கையன் ஆண்ட ஆனையிறவு கடலேரியை வடக்கு எல்லை யாகவும் பழைய வட்டக்கச்சியைத் தெற்கு எல்லையாகவும் கொண்ட இப்பிரதேசத்தின் மையப்பகுதியாகக் கண்டாவளை அமைந் திருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி செல்லும் பழைய கண்டி வீதியும் வன்னியி லிருந்து யாழ்ப்பாணம் செல்லும் கொம்படிப் பாதையும் கண்டாவளையில் அமைந்திருந்த மையால் இப்பிரதேசத்தின் முதன்மை நகராகக் கண்டாவளை விளங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. கண்டி, யாழ்ப்பாண மன்னர்களின் ராஜதந்திர உறவுகள் வன்னி மன்னர்களின் போக்குவரத்துக்கள் என்பன இப்பாதை ஊடாகவே நடைபெற்றன. சில வேளைகளில் இவர்களின் படையெடுப்புகள் கூட இப்பகுதியில் நடைபெற்று இருக்கின்றன. கண்டாவளைப் பிரதேசத்தின் ஒவ்வொரு கிராமமும் மிகவும் சிறந்த செல்வாக்குடன் திகழ்ந்துள்ளமை அக்கிராமம் கொண்டி ருக்கும் பெயர்களைக்கொண்டு ஓரளவுக்கு உணரமுடிகிறது. கண்டி வீதியில் நடைபெற்ற நிகழ்வுகளை தருணம் பார்த்து முரசறைவத னால் முரசுமோட்டை என்றும் புலிங்கதேவன் ஆட்சிபுரிந்தமையினால் புலிங்க முறிப்பு என்றும் பல மன்னர்களினதும் சிவத்தலங் களின் வரலாறுகள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் காணப்பட்ட மையினால் கல்வெட்டுத்திடல் நாளடைவில் கலவெட்டுத் திடலாகவும் செல்வாக்குமிக்க விவசாயப் பயிர்களையும் விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்யும் இடம் கொழுந்துப்புலவு எனவும், வன்னிப் பகுதியிலிருந்து பெருமளவு யானையை ஊரியான் கொம்படிப் பாதை ஊடாக யாழ்ப்பாணம் கொண்டு சென்ற இடம் ஆனையிறவு எனவும் ஆனையிறவுச் சந்தைக்கு எமது பிரதேசத்திலிருந்து புறப் பட்டுச்சென்று தங்கி உணவருந்திச் சென்ற இடம் தட்டுவன் கொட்டி என்றும் அழைக்கப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1505 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றியபோது யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயரின் கைவசம் ஆனது. அந்தவேளையில் சங்கிலி மன்னனின் பெருமளவு பெறுமதிமிக்க திரவியங்களையும் படைத் தளபாடங்களையும் சில படைகளையும் கோப்பாய் கோட்டையிலிருந்து கண்டாவளையை ஆட்சி புரிந்த மன்னன் காக்கையனின் உதவியுடனும் ஏனைய வன்னிச் சிற்றரசர்களின் உதவியுடனும் பத்திரமாகக் கொண்டு வந்து காக்கையனின் அரண் மனையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டது. இவ்விடம் காத்ததீவு எனக் அழைக்கப்பட்டு இன்று காக்கைதீவு என கண்டாவளையில் காணப்படுகின்றது. இதனால் போர்த்துக்கேயர் வன்னி அரசின் மீதும் பல படையெடுப்புக்களை மேற்கொண்டனர். எனினும் வன்னி சிற்றரசர்களின் மிகுந்த ஒற்றுமையும் போர்த்திறனுக்கு முன்னால் அவை எதுவும் பயனளிக்கவில்லை.

போர்த்துக்கேயருக்குப் பின்வந்த ஒல்லாந்தர்கள் பெருமளவு போர் எடுப்புக்களை விரும்பவில்லை. அவர்கள் இங்குள்ள கனிய வளங்களைத் தங்கள் நாட்டுக்குக் கவர்ந்து செல்வதையும் தங்களது மதமான புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்புவதிலேயும் குறியாக இருந்தார்கள். இறுக்கமான பிணைப்புள்ள சமூகமாக எமது பிரதேச மக்கள் இருந்தமையினால் அவர்களது மதப்பரம்பல் தோல்வியிலேயே முடிவுற்றது. வன்னி அரசரோடு சுமூகமாகப் பேசி பழைய கண்டி வீதி ஊடாகவும் கொம்படி ஊரியான் படகுச்சேவை ஊடாகவும் வணிக நடவடிக்கையில் ஈடுபட்டனர். இக்காலகட்டத்தில் தான் பனிக்கல் நாராயணன் குழுவினர் முத்தயன்கட்டுப் பகுதியிலிருந்து கொண்டு வந்து முரசுமோட்டையில் தங்கி ஊரியான் பாதை ஊடாக ஆனையிறவு சென்று யாழ்ப்பாணத்தில் ஆனைகளை ஒல்லாந்தரிடம் விற்று இருக்கின்றார்கள். முரசு மோட்டையில் ஆனை தங்க வைத்த இடம் இன்றும் "ஆனைக் காலன் தறை" என அழைக்கப்படுகின்றது. இதன்பின் ஒல்லாந்தரை விரட்டிவிட்டு இலங்கையைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் பழைய கண்டி வீதியையும் கொம்படி ஊரியான் படகுச் சேவையையுமே பாவித்தனர். இவர்கள் வன்னியை ஆண்ட பண்டார வன்னியன் மீது பலமுறை படையெடுப்புக் களை மேற்கொண்டனர். எனினும் அவ்வளவு இலகுவாக கைப்பற்ற முடியவில்லை. இதே போன்று கண்டி இராச்சியத்தையும் கைப்பற்றுவது இலகுவாக முடியவில்லை. கண்டி வீதியின் ஊடாகப் பயணம் செய்யும் வெள்ளைக்காரப் படைகள், படை அதிகாரிகள் மீதும் பண்டாரவன்னியனின் படைகள் அடிக்கடி கெரில்லா தாக்குதல் மேற்கொண்டனர். இதேபோன்று கண்டி மன்னனின் படைகளும் இவ்வாறான தாக்கு தலைத்தொடுத்தனர். இது ஆங்கிலேயருக்குப் பெரிய தலையிடியாகவே, காக்கைவன்னியனின் உதவியோடு நயவஞ்சகமான முறையில் பண்டாரவன்னியனைத் தோற்கடித்து வன்னி முழுவதையும் கைப்பற்றினர். இதுபோன்று பியதாச என்ற முதலமைச்சரின் உதவியோடு கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றினர். வன்னிப் போரின்போது கண்டாவளைப் பிரதேசம் பெருமளவு அழிவைச் சந்தித்தது. வன்னிப் போரின் போதும் அதற்கு முற்பட்ட காலங்களிலும் யாழ்ப்பாணத்திலும் கண்டா வளைப் பிரதேசத்தின் கமரிக்குடா போன்ற பகுதிகளில் இருந்தும் ஆனையிறவு கடல் நீரேரி வழியாகக் கண்டாவளை படகு விட்ட வாய்க்கால் வழியே படகுத்துறை அமைத்து சுண்டிக்குளம் சமுத்திரம் வழியாக முல்லைத் தீவைச் சென்று அடைந்திருக்கின்றார்கள். இதன் ஊடாகத் தமிழனுக்கென்றொரு தனியான கடற்படை இருந்திருக்கின்றது என்பது புலனாகின்றது. இவ்வாய்க்கால் இன்றும் கண்டாவளையில் "படகுவிட்ட வாய்க்கால்" என அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் பல புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. அதன் விளைவாகப் பல புதிய நிர்வாக அலகுகள் ஆங்கிலேயரால் கொண்டு வரப்பட்டன. 1850 ஆம் ஆண்டளவில் எமது மக்களிடம் சில பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. அந்த வகையில் இப்பிரதேசத்தின் உடையாராக திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் திரு. ஹென்றி என்பவரினால் நியமிக்கப்பட்டார். இப்பிரதேசத்தின் முதலாவது உடையார் நிர்வாகம் கண்டாவளைப் பிரதேசத்திலே நடை பெற்றது. ஊரியான், உப்பாறு, முரசுமோட்டை, புலிங்கன் முறிப்பு, வெளிக் கண்டல், பன்றிமோட்டை, கோரக்கன்கட்டு முரசுமோட்டை, இரணைமடு, புதுக்குளம். உப்பாற்றுக்கண்டல், பன்றிசுட்டான், வட்டக் கச்சி, பெரியகுளம், புளியம்பொக்கணை, கொழுந்துப்புலவு, கலவெட்டித்திடல் போன்ற 17 கிராமங்களுக்குப் பொறுப்பாக இவ்வுடையார் நிர்வாகம் நடைபெற்றது. உடையார் நிர்வாகம் என்பது மக்களின் தேவைகளை அரசிடமிருந்து பெற்றுக் கொடுத்தல் மக்களிடையே எழும் பிணக்குகளைத் தீர்த்து வைத்தல் அரச சொத்துக் களைப் பாதுகாத்தல் அரச காணிகளை விற்கும் அதிகாரம் கூட உடையாரிடம் காணப்பட்டது. இன்னும் சொன்னால் தற்போது பிரதேச செயலருக்கு உள்ள அதிகாரம் அப்பொழுது உடையாருக்கு இருந்தது எனலாம். இக்காலப் பகுதியில் அழிந்துபோன மக்களின் வாழ்வாதாரம் உயர்நிலையை அடைந்துள்ளது எனலாம். ஆங்கிலேய அதிகாரிகள் பழைய கண்டி வீதியைத் தங்கள் தேவைக்குப் பயன்படுத்தியமையினால் ஆனையிறவு வாடியிலிருந்து புறப்பட்டு கண்டாவளைப் பாடசாலையடி தங்கள் குதிரைகளைக் கட்டிச் செல்லும் இடமாக இருந்தது. இதனால் ஆங்கிலேய உயர் அதிகாரிகள் எமது மக்களின் நிர்வாக உயர் அதிகாரிகளை இங்கு சந்தித்துக் கலந்துரையாடிச் செல்வது வழக்கமாக இருந்தது. இப்பிரதேசத்தின் இரண்டாவது உடையாராக திரு.க.வேலாயுதம்பிள்ளை என்பவர் 1926ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். இவர் பழைய வட்டக்கச்சியைச் சேர்ந்தவர் எனலாம். மூன்றாவது உடையார் நியமனம் 1940ஆம் ஆண்டு கண்டாவளையைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை என்பவரிடம் ஒப்படைக் கப்பட்டது. கால ஓட்டத்தில் பழைய கண்டி வீதிக்குப் பதிலாக A9 பாதை திறக்கப்பட்டது. இதே போன்று A35 பாதையும் எமது பிரதேசத்தை ஊடறுத்து முல்லைத்தீவை நோக்கிச் சென்றது.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததும் பல மாற்றங்கள் ஏற்பட்டு புதிய புதிய நகரங்கள் உருவாகின. இந்த நிலையிலும் இப்பிரதேசம் தனது செல்வாக்கை இழந்துவிடவில்லை. இலங்கையில் வருமானத்தை தரக் கூடிய இரண்டு தொழிற்சாலைகள் இங்கு அமைந்துள்ளமை எமக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அவையாவன, கடல்நீரிலிருந்து குளோறினையும் ஏனைய வேதியல் பொருட்களையும் பிரித்தெடுக்கும் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனமும் ஆனையிறவு உப்பளமுமாகும். எனினும் இப்பிரதேசத்தின் நிர்வாக அலகுகள் மெல்லக் கைநழுவிப் பல புதிய நகரங்களோடு இணைக்கப்பட்டன. பச்சி லைப்பள்ளிப் பிரதேச செயலகமாக இருந்த போது குஞ்சுப்பரந்தன், ஆனையிறவு, கண்டாவளை ஆகிய மூன்று கிராமசேவையாளர் ஊடாகவே இப்பிரதேசத்தின் நிர்வாகம் நடைபெற்றது. கிளிநொச்சி யாழ் மாவட்டத்தோடு இணைந்திருந்தமையால் இப்பிரதேசம் கரைச்சி பிரதேசசெயலர் பிரிவோடு இணைக்கப்பட்டிருந்தது. 1980ஆம் ஆண்டளவில் அப்போதைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சி தனி மாவட்டம் ஆக்கப்படவேண்டும். யாழ் மாவட்டத்தோடு இணைந்திருப்பதால் அதன் அபிவிருத்தி என்பது கானல் நீராகவே இருக்கின்றது என்று பலமுறை வாதாடியதன் பலனாக 1984ஆம் ஆண்டு தனிமாவட்டம் ஆக்கப்பட்டு கிளிநொச்சி கச்சேரி ஆரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்கப்பட்டது. அதன்பின்னர் அன்று கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி என மூன்று உதவி அரசாங்க அதிபர் பகுதிகள் காணப்பட்டன. பின்னர் கரைச்சி உதவி அரசாங்க அதிபராக இருந்த செங்கையாழியான் என்றும் புனைபெயரைக் கொண்ட க.குணராசா என்பவர் முயற்சிகளின் பலனாக 1987ஆம் ஆண்டு கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் உப அலுவலகமாக ஆரம்பித்த கண்டாவளை உதவிஅரசாங்க அதிபர் பணிமனை 1989ஆம் ஆண்டு நிரந்தர உதவி அரசாங்க அதிபர் பணிமனையாக மாற்றம் கண்டது. இதற்கு முதல் உதவி அரசாங்க அதிபராக திரு. எஸ். சந்திரராசா அவர்கள் கடமையாற்றினார்.

கண்டாவளை தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாக உருவாக்கப்பட்டதால் கண்டாவளைப் பிரதேச மக்கள் நிர்வாக ரீதியாக பல்வேறு அனுகூலங்களை பெற்றுக் கொள்ளமுடிந்துள்ளது. தங்களுடைய தேவைகளை மக்கள் இலகுவாகத் தங்களுடைய பிரதேசத்திலேயே பெறமுடிந்தமை மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமே.

கண்டாவளை தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாக மாற்றம் கண்டதன் பின் பின்வருவோர் உதவி அரசாங்க அதிபர்களாக கடமையாற்றி உள்ளனர்.

1. திரு. க. சந்திரராஜா
2. திரு. சதா. தனபாலசிங்கம்
3. செல்வி. தெ. து. விஜயலட்சுமி
4. திரு. இ. ஐயாத்துரை
5. செல்வி. கு. அன்னமயில்
6. திரு. பி. கா. மத்தியாஸ்
7. திரு. சீ. சிவசொரூப நாதபிள்ளை
8. திரு. சி. சத்தியசீலன்
9. திரு. த. முகுந்தன் (தற்போதைய பிரதேச செயலர்)

உதவி அரசாங்க அதிபர் காரியாலயமாக இருந்த கண்டாவளை அலுவலகம் 30.04.2011 முதல் பிரதேச செயலகமாகத் தரம் உயர்த்தப்பட்டமை நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைய வேண்டிய ஒன்றே. அதிகாரங்களை மக்களிடம் கொண்டுசெல்ல வேண்டும் எனும் நோக்கில் 1992இல் இலங்கையில் பல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் பிரதேச செயலகமாக தரம் உயர்த்தப்பட்டபோதும் எமது கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் பிரதேச செயலகங்களாகத் தரம் உயர்த்தப்படாது இருந்தது. எனினும் அவை இப்போது பிரதேச செயலகங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளமையால் மக்கள் தங்கள் தேவைகள் பலவற்றை பிரதேச செயலகங்களூடாக நிறைவேற்ற முடிகின்றது.

ஆயினும் கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்கென ஓர் சிறந்த கட்டடம் அமைக்கப்படாமை பெருங்குறையாக உள்ளது. வரலாற்றுப் பெருமையையும் பண்பாட்டுத் தொன்மையும் கொண்ட எம் பிரதேசத்தில் ஓர் அழகிய பிரதேச செயலகம் அமைய வேண்டும் என்பது எம் மக்களின் பெரு விருப்பம். எனவே கண்டாவளைப் பிரதேச செயலகபிரிவில் வாழும் மக்கள் அனைவரும் வேற்றுமைகளை களைந்து ஒற்றுமையுடன் தொன்மையும், பூர்வீகப் பெருமையும் மிக்க எம் மண்ணில் ஓர் பிரதேச செயலகம் நிமிர்ந்து நிற்க உழைக்க வேண்டும் என்பதே எம் எல்லோரதும் பெருங்கனவாக உள்ளது.

◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல்களே நிஜங்கள்

பரந்தனூர் து. மோகனஸ்ரீ

என் ஊரின் தெருக்கள் தோறும்
தினமும் நடக்கின்றேன் - என்
நினைவுகளைச் சுமந்த
ஓர் நடைப்பிணமாய்...

நிஜங்களின்
பிரதிகளைச் சுமந்தபடி
தினமும் எனைக் கடக்கின்றன
மனித மாஜைகள்...

என்னுடன் ஒன்றுமே இல்லை
என்
நினைவுகளின்
நிழல்களைத் தவிர...

நினைவுகளை அழித்துவிட
நிஜங்களின் போராட்டம்
காதோரம் செல்போனாய் ஒன்று,
காபற் வீதிகளாய்
காலடியில் இன்னொன்று,
தடையில்லா வாகனங்களாய் ஒன்று,
பலமொழியில் கிளுகிளுப்பாய்
திரைப்படமாய் மற்றொன்று,
அடிச்ச விலையில் அதிவிஷேசம்,
அடிக்கொரு கள்ளுக்கடை,
வெளியே சொல்லமுடியாக்
கேவலங்கள் இன்னும் இன்னும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகளை அழித்துவிட

நிஜங்களின் போராட்டம்...

நான்

நிஜங்களை வெறுக்கிறேன் - ஏனெனில்

என் நினைவுகளை நிஜமாக்க

இவற்றால் முடியுமா???

கைக்குத்தரிசிச் சோற்றுக்கும்,

கண்டங்கத்தரி வதக்கலுக்கும்,

காத்தவராயன் கூத்துக்கும்

காவடி ஆட்டத்திற்கும் - ஏன்

தமிழ்மணக்கும் தாலட்டுக்கும்

இணையாக ஏதும் உண்டோ?

என் நினைவுகளை

அடித்துச் செல்ல

எவற்றாலும் முடியாது...

அவை,

நொறுங்கிய கட்டங்களாய்,

நொய்ந்துபோன ஊர்திகளாய்,

குழிவிழுந்த வீதிகளாய்,

குடியில்லா இருப்புக்களாய்,

மொட்டைப் பனைகளாய்,

சரிந்த நீர்த் தாங்கிகளாய் - இன்னும்

சாய்ந்த எம் உறவுகளாய்,

என்றும்

வாழும் என்னுள்

இன்னும் இன்னும்

என்றும்...!

◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்க்குட்டிக் குஞ்சு

க. சஞ்சிகா
கிளி/கண்டாவளை மகா வித்தியாலயம்.
A/L (2014)

அம்மா நாய்க்குப் பத்துக்குட்டிகள். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து என்ன இது? பத்தாவது குட்டிக்கு இறகுகள் உள்ளனவே? ஆனால் நாய்களுக்கு இறகுகள் இல்லையே? நாய்க்குட்டிக் குஞ்சு! நாய்க்குட்டிக் குஞ்சு! என மற்றைய நாய்க்குட்டிகள் அதனைக் கேலி செய்தன. இது என்னுடைய வீடு இல்லையா? என்றது பத்தாவது நாய்க்குட்டி ஜீனோ.

அதன் கேள்விக்கு யாருமே பதில் சொல்லவில்லை. எல்லாம் விளையாடுவதற்கு முற்றத்திற்கு ஓடின. ஜீனோ கவலையுடன் வீட்டை விட்டுப் பறந்துபோனான். இந்த இடம் எனக்குரியதில்லை என்று யோசித்துக் கொண்டு வேறுநாய்க்குட்டிக் குஞ்சுகளைச் சந்திக்கும் நோக்குடன் பறந்து சென்றான். ஜீனோ அவன் ஒவ்வொரு இடமாகப் பறந்து சென்றான். ஆனால், நாய்க்குட்டிக் குஞ்சுகள் எங்குமே இல்லை. எல்லாம் நாய்க்குட்டி களாகவே இருந்தன. களைத்துப் போய் மரக்கிளை ஒன்றின் மீது அமர்ந்தது, அது. அப்போது சிட்டுக்குருவி ஒன்று கோபத்துடன் வெளியே வந்து நீ யார்? என்னுடைய கிளையில் இருப்பது, என்று கத்தியது. நான் நாய்க்குட்டிக் குஞ்சு. என்று ஜீனோ பதில் சொல்லிவிட்டு தூரப் பறந்துபோனது. களைத்துப் போன ஜீனோ பழங்கள் நிறைந்த புதருக்குள் நித்திரை கொள்வதற்குச் சென்றது. ஆனால், ஓநாய் ஒன்று அவனைக் கண்டு விட்டது. ஹலோ! நீர் யார்? உமக்கு இங்கே என்ன வேலை? என்றது. அந்த ஓநாயின் உறுமலும் மஞ்சள் நிறக் கண்களும் ஜீனோவுக் குப் பயத்தினை உண்டு பண்ணியது. அதன் உடல் நடுங்கியது. "நான் தான் நாய்க்குட்டிக் குஞ்சு" என்று கூறிவிட்டு அங்கிருந்து பறந்து சென்று விட்டது ஜீனோ.

ஓநாயிடம் இருந்து தப்ப உதவியது எனது சிறகுகள். அவை அற்புதமானவை. எனவே நான் பெரியவன் என்று எண்ணியது ஜீனோ. ஆனாலும் வேறு நாய்க்குட்டிக் குஞ்சுகளைக் காணவில்லையே என்ற கவலை யுடன் ஜீனோ மேலும் கொஞ்சத் தூரம் பறந்து ஒரு நகரை அடைந்து அப்பொழுது ஒரு மனிதன் அதனைக்கண்டு விட்டான். ஆ... ஆ... ஆ... பறக்கும் நாய்க்குட்டி! என்று கத்தியபடி ஜீனோவைப் பிடிக்க வலையுடன் துரத்தி னான். ஆனால், ஜீனோ பிடிபடவில்லை. அது அந்த மனிதனின் வலையில் இருந்து தப்பி விட்டது. ஜீனோ நீண்ட தூரம் பறந்து சென்று கொண்டேயிருந்தது. அப்பொழுது பல நாய்க் குட்டிகள் தரையில் விளையாடிக் கொண்டி ருப்பதை அது கண்டது.

நாய்க்குட்டிக் குஞ்சுகளா? எங்கே பார்த்து விடுவோம் என்று நினைத்துக் கொண்டு தரையில் இறங்கியது ஜீனோ! ஜீனோ! என்று அந்த நாய்க்குட்டிகள் ஓடிவந்து அவனை அன்புடன் அரவணைத்துக் கொண்டன. நீ இவ்வளவு நாளும் எங்கே போய் இருந்தாய்? நீ இல்லாமல் நாங்கள் எவ் வளவு நாள் கவலைப்பட்டோம் தெரியுமா? என்று அவனை நக்கி நக்கி அன்பைச் சொரிந்தன. வந்து விட்டாயா? எனது அன்பு மகனே! என்றவாறு அம்மா நாய் ஓடிவந்து உடல் முழுவதும் தனது நாவினால் தடவி தடவி தனது அன்பைச் சொரிந்தது. இறகுகள் அற்புதமானவை. ஆனால், என் உறவுகள் அதனைவிட அற்புதமானவை என்று தன்னுள் எண்ணிக் கொண்டது ஜீனோ.

◆◆◆

(இவ் ஆக்கம் 2012 ஆம் ஆண்டின் பிரதேச மட்டதேசிய கலைஇலக்கியப் போட்டியில் திறந்த பிரிவில் சிறுவர்கதையாக்கத்தில் முதலிடம் பெற்றது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னிகரற்ற தமிழின் தனித்தன்மைகள்

திரு. ராஜா செல்வநாதன்
ஆசிரியர், முரசுமோட்டை.

தமிழுக்கு வளமுண்டு; தனித்துவமான பண்புகளுண்டு; எதையும் உள்வாங்கி முன்னேறும் ஆற்றலுண்டு. தமிழரை வெறுப்ப வரும் தமிழை வெறுப்பதில்லை. தமிழின் செழுமை அத்தகையது. இலண்டன் Oxford English Dictionary யில் உள்ள Anicut, Katamaran, rice, cash ஆகிய பதங்கள் முறையே அணைக்கட்டு, கட்டுமரம், அரிசி, காசு ஆகியன தமிழ்ப் பதங்களேயாகும்.

அணைகட்டி, நீர்ப்பாசனம் செய்தவர்களும், மரங்களை ஒன்றாகக் கட்டிக் கடலிற் போட்டுத் தெப்பமாக்கியவர்களும், ஆதி காலத்தில் அரிசியை விளைவித்தவர்களும், பணத்தினைப் பயன்படுத்திக் கொடுக்கல் வாங்கல் செய்தவர்களும் தமிழர்களாவர். முதன் முதலாகக் கடலோடிகளாகவும், முதன் முதலாக "லிபி" எழுத வகை செய்தவர்களும் ஆகிய அழிந்துபோய்விட்ட பீனிசிய மற்றும் மீனோவன் நாகரிகங்களுக்கும், தமிழர்களுக்கும் தொடர்புண்டு என விபுலாநந்த அடிகளும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் "நாவாய்" என்ற தமிழ்ச் சொல்லும் Navigation மற்றும் Navy என்ற சொற்களும் ஆராய்ச்சிப் பண்பினதாயுள்ளன.

தென்னமெரிக்கப் பெரு (Peru) நாட்டில் இருந்த "மாயா" நாகரிகத்துக்குரியவர்களின் நேர்த்தியான வர்ண ஓவியங்கள் "National Geographic" சஞ்சிகையில் விளக்கமான முறையில் வெளியாகியிருந்தன. அவற்றின் வனப்பு: தற்கால ஓவியங்களையே விஞ்சும் தன்மை கொண்டது.

பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்து - பசுபிக் ஆழ்கடலினூடாகப் பயணம் செய்து அப்பகுதிகளிற் குடியேறியவர்களும், அவுஸ்திரேலியா ஆதிக்குடிகளான மாஓரி, முண்டா முதலிய இனத்தவர்களும் ஆதித் திராவிடரே என்பதை "வாழும் கலை" ஆன்மிக அமைப்பின் சுவாமிகளும் தெரிவித் துள்ளார். யப்பானிய மொழியிற் காணப்படும் 500க்கு மேற்பட்ட சொற்கள் தமிழுடன் நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்படுவதனையும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

அவுஸ்திரேலியா, பொலினீசியா ஆகிய பிரதேசங்களில் ஆங்கிலேயர் குடியேறி ஒரு சில நூற்றாண்டுகளே ஆகின்றன. அங்கு காணப்படும் காரிநாய், கங்காரு மற்றும் பூமராங் (Poomerang) என்பன ஆராய்ச்சிக்குரிய சொற்களாகும்.

காஞ்சிபுரத்துப் பல்லவ இளவரசன் ஒருவன் பௌத்தமதத் துறவியாகி, சீனதேசம் சென்று அம்மக்களின் அபிமானத்தை வென்று, அம்மக்களின் அன்புக்கு அடிமை யாகி, சீனாவின் பல இடங்களிலும் ஹொங் கொங்கிலும் தெய்வமாக "போதி தர்மர்" என்ற பெயரில் வழிபடப்படுகிறார்.

தமிழர்களின் தற்காப்புக் கலையான "வர்மக் கலையும்" நோக்கு வர்மமும் சீனா சென்றடைந்து "கராட்டி" "குங்பூ"வாக மாற்ற முற்றது. நந்திவர்மன், நரசிம்மவர்மன், மகேந்திரவர்மன் முதலான காஞ்சிப் பல்லவ சக்கரவர்த்திகளுக்குரிய "வர்மன்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுக்கும், "வர்மம்" என்ற சொல்லுக்கும் தொடர்பு இருக்கத்தான் வேண்டும்.

தற்போது வியட்நாம், லாவோஸ், கம்போடியா, தாய்லாந்து ஆகிய இந்தோ சீனம் முன்பு இந்தியாவின் செல்வாக்குக்கு உட்பட்ட பகுதியாக இருந்தது.

கம்போடியாவில் "ஸ்ரீ மாற வல்லபன்" என்ற பாண்டிய மன்னனின் கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உலகிலேயே மிகப்பெரிய கோயிலாகக் கூறப்படுவதும் சூரியவர்மன் என்ற மன்னனாற் கட்டப்பட்டதுமான "அங்கோர் வாட்" இங்கேயே உள்ளது.

தற்போது உலகின் மிகப்பெரிய இஸ்லாமிய நாடாக இருப்பதும், 20 கோடிக்கு மேற்பட்ட குடித்தொகையைக் கொண்டதும், ஆழிப்பேரலைகளால் அடிக்கடி அவதியுறுவதுமான இந்தோனேசியாவில் சுமாத்ரா, யாவா, பாலி, சம்பா முதலியனவும்; திமோர் முதலிய தீவுக் கூட்டங்களும் முன்பு இந்து மத "ஸ்ரீ சைலம்" என்ற பேரரசின் கீழ் ஜடாவர்மன் முதலான சைலேந்திர மன்னர்களால் ஆளப்பட்டு வந்திருக்கின்றன.

சந்திரபானு என்ற யாவா மன்னன் இலங்கையின் தென்முனையிலிருந்த சந்திர மௌலீஸ்வரத்தில் வழிபாடியற்றினான் என்பதும், அந்தப் பாரிய ஆலயத்தைப் பறங்கியர் இடித்தழித்துப் பசுமாட்டு இரத்தத்தினால் அபிஷேகம் செய்தமையும் "Beaten tracks in Ceylon" என்ற நூலிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

கெடா (Keda) என்பது மலேசியாவில் உள்ள ஒரு மாகாணம். இது சோழரால் கைப்பற்றப்பட்டது. அதனாலேயே "கடாரம் வென்றான்" என்பர்.

மலேசிய நாட்டு வரலாற்றுப் பாட நூலில் இது தெளிவுபடக் கூறப்பட்டிருப்பதுடன் சோழர்கள் "வெல்லப்பட முடியாதவர்கள்" (Invincible Chollas) என்றும் அவர்கள் தம் மூடநம்பிக்கை காரணமாக மலைகளின் உச்சிகளில் உயர்ந்த கோபுரங்களைத் தம் தெய்வங்களுக்கு எழுப்பினார்களென்றும் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது.

காலன் என்பவன் பெருங்கொடுங் கோலன், அவனது அராஜகத்தால் ஆழிப் பேரலைகள் ஊர்கள் தோறும் வந்து ஆதி வாழ்விடங்கள் எல்லாம் அள்ளிக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. "கொற்கைத் துறைமுகமும், பல்லவனின் மல்லையும் கடல் கொண்டன" என்று கூறியபோது நம்ப மறுத்தவர்கள், "பஃறுளி ஆறும், பன்மலை அடுக்கமும் கொடுங்கடல் கொள்ள" என்று பழந்தமிழிலக்கியப் பனுவல்கள் உரைத்த போது, அதைப் பரிகாசம் பண்ணியோர் எல்லாம், 26செப்டம்பர், 2004இல் ஆழிப் பேரலை அனர்த்தம்" சுனாமி (Tsunami) என்ற யப்பானியச் சொல்லுடன் வந்த பின்னரே தம் சிந்தனைகளைச் செப்பனிட்டுக் கொண்டார்கள்.

இங்கு சாபக்கேடு என்னவென்றால் தங்களுடைய வரலாற்றைக்கூட; தாங்கள் அறியமுடியாத நிலையில் தமிழினம் இருப்பது தான். இவர்களுடைய நாகரிகம்தான் சிந்துவெளிநாகரிகம். ஆங்கிலேயரான சேர். ஜோன் மார்ஷல் 1920களில் இங்குவந்து பாடுபட்டு அகழ்வாராய்ச்சி செய்து இதை இவர்களுக்கு அறிவிக்கவேண்டி இருந்தது. ஐந்து பெரு நதிகளும் பாய்ந்தோடி பஞ்சாப் பிரதேசமும் (ராஜஸ்தான்) பலத்தல், லோத்தா, மொஹஞ்சதாரோ, ஹரப்பா போன்ற பரந்த இடங்களும் பண்பாடு கொண்ட மக்களின் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரக் குடியிருப்புக்களாகவும், துறைமுகங் களாகவும் இருந்து இயற்கைப் பேரழிவு, பூமியதிர்ச்சி காரணமாகப் பாழ்பட்டுப்போன விடயத்தை சேர். ஜோன் மார்ஷலுடன் ஏனைய வரலாற்றாசிரியர்களும், பல தடவை கள் எடுத்துரைத்த போதிலும் கூட, மத்திய ஆசியாவில் நீர்ப்பாசனம், நகர நிர்மாணம் பற்றிய அறிவில்லாத நாடோடிகளான (Nomads) வேற்று இனத்தவர். கி.மு. 1500 அளவில் கைபர் கணவாயூடாக வேற்று மத வழிபாட்டுமுறைகளைக் கொண்டவர்களாக "இந்தியா" என்ற நாட்டினுட் புகுந்து, பின்னாளில் தமது வாழ்விடங்களை ஏற்படுத் திக் கொண்டதை வைத்து, ஆரியர் வந்து திராவிடரைத் தெற்கே துரத்திவிட்டதாகப் பொய்யுரைப்பதை நம்புகின்றனர்.

இந்துமதம், இந்துஸ்தானம், இந்தியா என்பதெல்லாம் பின்னாளில் வேற்று நாட்ட வர்களால் இடப்பட்டதென்பதே வரலாறு. அது இப்போதுள்ளது போன்று முன்னாளில் ஒரே நாடாக எவராலும் ஆளப்பட்டதுகூட அல்ல.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்துநதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்கள் அடுக்கு மாடி வீடுகளில் வசித்ததும்; வடி காலமைப்புக்கள், குளியல் வசதிகள், விசால மான வீதியமைப்புக்கள், புராதன காலத்தில் உலகில் எங்குமில்லாதவாறு சுகாதார அமைப் புடன் கூடிய ஆடம்பரமான நகரவாழ்க் கையை அவர்கள் அனுபவித்தது பற்றியும், கட்டடக் கலையில் அவர்கள் உயர்ந்தளவு தேர்ச்சி கொண்டிருந்தமை பற்றியும் அறிய முடிந்தது.

அன்றியும் இவ்வரலாற்று குறிப்புக் களின்படி, அம்மக்கள் கோதுமை, பார்லி, மீன், முட்டை, இறைச்சி வகை என்பவற்றை உணவாக உட்கொண்டமை குறித்தும், இன்னும் வாசிக்கப்படாமல் இருக்கின்ற 500க்கு மேற்பட்ட பட்டயங்கள் பற்றியும், கிரேக்கச் சிற்பங்களுடைய நேர்த்திக்கு இணையாக அவை வடிக்கப்பட்டுள்ளமை பற்றியும், இந்தியாவின் பகுதிகளுடன் மட்டுமன்றி, ஆசியாவின் ஏனைய நாடுகள் பலவற்றுடனும் அவர்கள் வணிகம் செய்தமை பற்றியும், திராவிட மொழியான (Brahui) பற்றியும், அது வழங்கும் பலுச்சிஸ்தானம் மற்றும் "லோத்தா" துறைமுகம் பற்றியும், சிந்துவெளி மக்கள் தகரம், செம்பு, விலையு யர்ந்த கற்கள் என்பவற்றை வேறு நாடுகளி லிருந்து பெற்றமை பற்றியும் அறிய முடி கின்றது.

வேத கால ஆரியர்கள் பெரும்பாலும் கிராமியப் பண்பைக் கொண்டிருந்தபோது, சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகத்துக்குரிய வர்கள் அபிவிருத்தி மேம்பாடான நகரப்புற வாழ்க்கைப் பண்பைக் கொண்டிருந்தார்கள். முன்னையவர்கள் இரும்பின் உபயோகம், மற்றும் பாதுகாப்புக் கவசம் பற்றி அறிந் திருந்தார்கள். ஆனால், அது பற்றி முற்றாக மற்றையவர்கள் அறியாதிருந்தார்கள். வேத காலத்தில் குதிரை முக்கிய இடம் வகித்த போதிலும் சிந்துவெளியில் அது பற்றிய விடயம் சந்தேகத்திற்கிடமாகவுள்ளது. சிந்து வெளியில் தாய்த்தெய்வ வழிபாடும், சிவ வழிபாடும் தலையாயனவாய் இருந்தன. ஆனால், வேதகாலத்தவர்கள் ஒரு சிறிதாயே இதனை மேற்கொண்டார்கள். சிலரின் கருத்துப்படி, அவர்கள் இலிங்க வழிபாட் டையும் கண்டனம் செய்தனர். பிரதிமை வழிபாடு சிந்துவெளி வழிபாட்டிற் சாதாரண மாக இருந்தது. ஆனால் ஆரியர்கள் இது பற்றிப் பெருமளவுக்கு அறிந்திருக்கவில்லை.

சிந்துவெளி நாகரிகம் கி.மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகச் செல்லும்போது, இருக்குவேதகாலம் கி.முக்கு இரண்டாயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளுக்கு அப்பால் செல்லமுடிய வில்லை. எனவே, பிற்பட்ட காலத்தில் இந்தியாவில் இடம்பெற்ற எல்லா நாகரிகங் களுக்குமான அத்திவாரம் வேதகால நாகரி கமே என நாம் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளல் இயலாது. சந்தேகத்திற்கிடமின்றி மேலே விவரிக்கப்பட்டுள்ள சிந்துவெளிகால நாகரிகமே இந்த நாட்டின் நாகரிகத்தின் வளர்ச்சி, அபிவிருத்திக்குப் பெரும் பங்காற்றி வந்திருக்கின்றது. இக் கருத்திற்கு வலுச் சேர்க்கு மாப்போல, பஞ்சாப், சிந்து மற்றும் பலுச்சிஸ்தான் என்பவற்றை உள்ளடக்கி ஒரு காலத்தில், இந்தியா முழுவதுமே திராவிட இனமே வாழ்ந்து வந்திருக்கின்றது என்பது இக் கருத்திற்கு மேலும் வலுச்சேர்ப்பதாயிருக் கின்றது.

ஆக, இருக்கு வேதத்துடன், கைபர் கணவாயூடாக இந்தியாவிற்குள் கி.மு. 1500 அளவில் புகுந்து கொண்ட அந்நிய மொழியே சமஸ்கிருதம் ஆகிய வடமொழி ஆகும். செம்மைப்படுத்தப்பட்டமொழி" என்பதே சமஸ்கிருதம் என்பதன் பொருள்.

பாரசீகமொழியும் சமஸ்கிருதமும் சேர்ந்தே 500 ஆண்டுப் பாஷை ஆகிய மொகலாயர்களின் ஹிந்தி உருவானது. அது போலவே, அரபு மொழியும் சமஸ்கிருதமும் கலந்தே பாகிஸ்தானின் உருதுமொழி உண்டானது. மேலும் உருது, ஹிந்தி இரண்டிற் கும் ஹந்துஸ்தானி சங்கீதம் பொதுவாக உள்ள அதேவேளையில், இந்தியாவுக்குள்ளேயே பிறந்து வளர்ந்தால், அந்நாட்டு இசை கர்நாடக சங்கீதம்" ஆயிற்று.

உத்தரப்பிரதேசம், பீகார், வங்காளம், குஜராத், சத்தீஸ்கர் முதலான மத்திய பகுதிகள் மற்றும் இந்தியாவின் வடகீழ் எல்லைப்புற மாகாணங்களிலுள்ள மக்களை மானிடவியல் ரீதியாகவும் மரபணு ரீதியாகவும் ஆய்வு செய்யும் காலை, மேலும் பல உண்மைகள் வெளிவரலாம். வட இந்தியப் பழங்குடி மக்கள், தலித் இன மக்கள், ஹரிஜன்ஸ் என்று கூறப்படுவோர் பற்றியும் இன்னும் ஆய்வு செய்ய இடமுண்டு.

வங்காளம், குஜராத்தி, பஞ்சாபி உள்ளிட்ட வடஇந்திய மொழிகளின் சொற்கள் சமஸ்கிருதம் மற்றும் ஹிந்தியின் செல்வாக்கு உட்பட்டுள்ள அதேவேளையில், அவற்றின் இலக்கண அமைப்பு (Syntax) தமிழ் மொழிக்கே உரியதாயிருக்கின்றது என டாக்டர் மு.வரதராசனார் தமது "மொழி வரலாறு" நூலில் விரிவாக ஆய்ந்து கூறி யுள்ளார்.

வடமொழி என்பது இந்தியாவிற்குள் இடைக்காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மொழி. தமிழும் டெக்கான் மேட்டு நிலமும், சேர, சோழ, பாண்டியர் வரலாறும் அப்படி யானவை அல்ல. Neolithic எனப்படும் புதிய கற்காலம் வரை செல்லும் தகவுடையன.

"குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான்" என்னும் சார்ள்ஸ் டார்வின் கொள்கை உண்மையானால், ஆபிரிக்க கிப்பன், கொரில்லா, ஒரங்குட்டான்களுக்கும், இந்தியாவிலுள்ள ஆதித்திராவிடர்களுக்கும், மற்றும் அவுஸ்தி ரேலிய (Aboriginees) பழங்குடிகளுக்கும் மண்டையோட்டில் மரபணுப் பரிசோதனை நிகழ்த்தப்படுமிடத்து, உலகிற்கு உண்மை இன்னும் வெளிச்சமாகும். அத்துடன் சிந்து வெளி எழுத்துக்களும், மத்திய ஆசியப் பகுதிக் குகைகளிலுள்ள எழுத்துக்களும் இன்றும் வாசிக்கப்படாத நிலையில் இருக்கின்றன. அவை வாசிக்கப்பட்டால் இன்னும் பல உண்மைகள் வெளிவரலாம்.

தமிழுக்கு நிகரான மொழி, இனிமை யிலும் இல்லை. எளிமையிலும் இல்லை. பழமையிலும் இல்லை; பக்தியிலும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பெருமைக்குரிய மொழிக்குரிய நாமோ நடைமுறையிலுள்ள விடயம், யதார்த்தம் பற்றிச் சிந்திக்கின்றோமில்லை.

ஐக்கியம், ஒற்றுமை என்னும் சொற்களுக்கு அருகதையற்றவர்களாகி விட்டோம்.

கங்கை கொண்டவர்கள், கடாரம் வென்றவர்கள். சங்கம் கண்டவர்கள், சண்டைப்பிரியர்கள், கடைசியில் கண்டதென்ன? இமயம் வென்ற சேரலாதன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆகியோரின் வழித்தோன்றல்கள், தென் கிழக் காசியாவின், இந்து - பசுபிக் மாகடல்களெங்கும் நாவாய் ஊர்ந்தவர்கள் பேசிய மொழி இன்றிருக்கும் நிலை என்ன?

இந்தியாவில் 5ஆவது தேசிய மொழியாக, இலங்கையில் ஐந்தில் ஒரு பங்கினர் பேசும் மொழியாக, உலகில் சிறுபான்மையினர் பேசும் மொழியாகிவிட்டது தமிழ்.

பரமசிவன் ஆய்வு செய்த பழைய மொழி, பொதிகை மலையில் குறுமுனிவன் இலக்கணம் செய்த பொன்மொழி, செவ்வேள் கடவுளின் செல்லப்பிள்ளையான செம்மொழி, எங்கோ ஓரிடத்தில், மூலையில் இந்த இழிவு நிலை உண்மையில் தமிழுக்கா அல்லது தமிழர்க்கா?

இதுவும் போதாதென்று வளர்ந்துவரும் நவீனகாலத் தகவல் தொழில் நுட்பயுகத்தில், சிறுபான்மை மொழிகள் சிறிது காலத்துள் அழிந்துபோய்விடும் என்று அபாய அறிவிப்பு வேறு விடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

நவீன கால மொழிகள் எல்லாம் தம்மை நானா வீதத்திலும் வலுப்படுத்திக் கொண்டு (Enriched) நாளைய நடப்பை நினைத்து முன்னேறும்போது, நமது பெருமை மிக்க மொழி மட்டும் பின் தங்கிவிட்டால் அது நாம் செய்த பெரும் பிழையாகவே எதிர்கால வரலாறு எம்மைப் பற்றி எழுதும்.

அழகான மொழி, ஆற்றல் மிக்க மொழி, அறிவுச் செல்வம் மிக்க மொழி என்ற அந்தஸ்துக்களையெல்லாம் தன்னகத்தே கொண்ட ஆங்கிலமொழி ஆயிரம் ஆண்டுகளுக்குள்ளாகவே அவற்றை எல்லாம் ஈட்ட முடிந்தது. அதற்கான காரணம் - இங்கிலாந்து மக்களின் ஈடிணையற்ற ஐக்கியமும், விடாமுயற்சியும், விவேகமும் ஆகும்.

1000 வருடங்களின் முன்பு ரஷ்யர்கள் வொல்கா நதி தீரத்திலும் ஜெர்மானியர் றைன் நதி ஓரத்திலும் பழைய ஆங்கிலேயர் தேம்ஸ் நதிக்கரையிலும் பண்பாட்டு விருத்தியில்லாத, அநாகரீகர்களாக உலாவினார்கள்.

தமிழ், வட இந்திய மொழிகள் போன்று 5 நூற்றாண்டுகள் பழமை கொண்டதுமல்ல, பழைய இலக்கிய வளம் அற்ற மொழியும் அல்ல. அல்லது 1000 வருடமளவில் இலக்கணம் செய்யப்பட்ட ஏனைய தென்னிந்திய மொழிகள் போன்றதும் அல்ல. அல்லது 1200 ஆண்டளவில் லிபி எழுதப்பட்ட கிளை மொழியும் அல்ல. தமிழ் கிளை அல்ல, மரம் - மகா விருட்சம், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜேர்மன், இந்தி, வங்காளம் என்பன வெறுமனே கிளை மொழிகள்தாம்.

அகில உலகமும் போற்றும் அழகுக் கலையான பரதநாட்டியம் அதன் கண்ணே உண்டு. கடல் கடந்தோடினாலும் காணக் கிடைக்காத கர்நாடக இசை உண்டு. குழப்பமில்லாத, சமய விளக்கமடங்கிய சைவசித்தாந்தம் உண்டு. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்ற குடிமக்கள் காப்பியமும், ஒரு வாசகத்திற்கும் உருகாதோரும் உருகுகின்ற திருவாசகத்தேனும் உண்டு. கவிதா வர்ணனையும், தமிழ் வளம் குழைத்துப் பன்னீரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிரம் விருத்தங்களாக்கிய கம்பனின் மகா காவியமுண்டு. கடுகைத் துளைத்து ஏழ் கடலையும் புகுத்திய கருத்துவளமும், சொற் செட்டு மிக்க குறளோவியமும் உண்டு.

சொல்லிமாளாத செய்யுள் வளம் கொண்டதும் கல்லால மரநிழலின் கீழே அந்த கங்காதரன் வீற்றிருந்து சனகர், சனந்தனர். சனாதனர், சனற்குமாரர் ஆகிய முனிவர் களுடன் கலந்துரையாடி ஆய்வு செய்யப் பட்ட மொழி தமிழ்.

மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார், ரஷ்ய நாட்டு மக்களுக்கு எமது நாட்டில் மூவாயிரம் வருடங்களுக்கு முன்னரே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என சமதர்ம சிந்தனையை எமது புலவர் ஒருவர் கூறியிருக்கிறார் என்று சமீபகால சமதர்ம வாதிகளுக்குத் தன் உரை ஒன்றில் கூறிவைத்த பெருமைக்குரியதும் எமது தமிழ் மொழியே.

ஆனாலும் கூட இன்று, குடித்தொகை ரீதியாகவோ அன்றி அரசியல் ரீதியாகவோ பார்த்தால் தமிழ்மொழி பாரிய பின்னடைவுக் குள்ளாகியிருக்கிறது.

ஆங்கிலம், சீனம், ஸ்பானிஷ் , ரஷ்யன், இந்தி ஆகியனவே முதல் 5 இடங்களையும் தக்கவைத்துக்கொண்டுள்ளன. இவற்றுள் சீனம் என்ற "மாண்டரின்" மொழி தவிர ஏனைய யாவும் நவீன கால கிளை மொழிகள் தாம்.

பிந்திவந்த கொம்புகள் முந்தி வந்த செவிகளை முந்திக்கொண்டு விட்டன. வீழ்வது தோல்வி அல்ல வீழ்ந்து கிடப்பது தான். தோல்வி.

மொழிப்பற்று அவசியமானது. அது அடுத்தவன் மொழியை அழிக்கின்ற இன வாதம் ஆகாது. அல்லது பிறர் கலாசாரத்தைத் தூற்றுகின்ற பிராந்தியவாதம் ஆகாது.

யப்பானியன் யப்பான் மொழிமீதும், ஜேர்மனியன் ஜேர்மன் மொழிமீதும், ஆங்கி லேயர், பிரெஞ்சுக்காரர், ரஷ்யர்கள், சீனர்கள், ஹிந்திக்காரர்கள் யாவருமே தத்தம் மொழி மீது அதீதமான பற்றுதல் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். எம்மைத் தவிர.

நாம்தாம் பின்தங்கிவிட்டோம். மற்ற வர்கள் முழங்காலில் பட்ட அடியுடன், முயற்சிசெய்து முன்னேறிவிட்டார்கள், நாமோ மிக உயரத்திலிருந்து விழுந்ததால் முதுகெலும்பு பாதித்தவன்போல ஆகி விட்டோம் என்று யாரோ கவிஞர் கூறி யிருந்தார்.

"யானைக்குத்தும்பிக்கை
மனிதனுக்கு நம்பிக்கை"

◆◆◆

(தமிழ் உலக அரங்கில் மீண்டும் உயரவேண்டும். உயரவைப்பது தமிழ் மக்களின் தலையாய கடமையும் கூட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமத்தின் கதை

தாமரைச்செல்வி, குமரபுரம்.

பரந்து விரிந்து கிடக்கும் பச்சை வயல் பரப்புக்கள். அந்த வெளிகளில் பறந்து திரியும் வெண்பறவைகள். சலசலத்துப் புரண்டோடும் வாய்க்காலின் வெள்ளம். காலை மாலைகளில் கழுத்து மணிகள் ஒலிக்கத் தெருவோரம் நடக்கும் மாடுகள். உழைத்துக் களைத்த மக்களால் நிரம்பியிருக்கும் தெருக்கள்... இவை வன்னிமண்ணின் வனப்பான அடையாளங்கள்.

நினைவு தெரிந்த காலங்களிலிருந்து இவைகளையே பார்த்து வளர்ந்ததனால் தானோ என்னவோ இந்த மண்ணையும் மனிதர்களையும் நேசிக்கத் தோன்றியது. சின்ன வயதில் காற்றில் பரவும் பச்சை நெல்லின் பால்வாசனையை முகர்ந்தபடி வரம்புகளில் நடப்பது எனக்குப் பிடித்திருந்தது. ஊருக்கெல்லாம் பசி தீர்க்கும் கொத்துக் கொத்தான நெல்மணிகளைப் பரவசத்தோடு பார்ப்பது பிடித்திருந்தது.

இந்த வளம் கொழிக்கும் பிரதேசம் முன்பு எத்தகைய காடாக இருந்ததென்று நான் பார்த்ததில்லை. என் தந்தை சொல்லிக் கேட்டிருக்கிறேன். பாலை, முதிரை, விண்ணாங்கு, விளாத்தி போன்ற பெரிய மரங்களும், அடர்ந்த பற்றைகளுமாய் கிடந்த பிரதேசம் இது. இப்பிரதேசம் சாதாரண மனிதர்களின் கடும் உழைப்பினால்தான் வளம் பெற்று நகரமாய் மாறியது. இலங்கையின் வட பகுதி தென்பகுதியிலிருந்து மட்டுமல்ல மலையகத்திலிருந்தும் வந்த மக்களுக்காகப் பல குடியிருப்புக்கள் கிளிநொச்சியில் உருவாகின. அவற்றில் ஒன்றுதான் பரந்தன் பகுதியில் குமரபுரம் கிராமம்.

நாற்பதுகளின் இறுதியில் ஐம்பதுகளின் ஆரம்பத்தில் இங்கேயுள்ள காணிகள் மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. கண்டி வீதியில் பரந்தன் சந்தியிலிருந்து மேற்குப் புறமாக 300 மீற்றருக்குள் அமைந்திருப்பது குமரபுரம் கிராமம். இக் கிராமத்திற்கான குடியிருப்புத் திட்டத்தில் வீட்டுக்குரிய காணியாக ஒரு ஏக்கரும் அதற்குரிய வயற்காணி மூன்று ஏக்கரும் கிராமத்தின் மேற்குப் பக்கமாகக் கொடுக்கப் பட்டது. தமக்குக் கிடைத்த காணிகளில் உள்ள காடுகளை அழித்து துப்பரவாக்குவதற்கு அவர்கள் நிறையவே கஷ்டப்பட வேண்டியிருந்தது. இரவில் யானைகளின் நடமாட்டம் அவர்களை மிகவும் அச்சுறுத்தியது. பாம்புகளின் நடமாட்டம் அதிகம் இருந்த பிரதேசத்தில் நுளம்புகளின் தொல்லையும் சேர்ந்துகொள்ள மக்கள் எத்தனையோ கஷ்டங்களுக்கு முகம் கொடுத்து வாழ வேண்டியிருந்தது.

அத்தனையையும் எதிர்கொண்டு காடுகள் அழித்தார்கள். கழனிகளாக்கினார்கள். வீட்டுக்காணிகளில் அரசாங்க உதவித் தொகையுடன் சிறு சிறு வீடு கட்டிக் கொண்டார்கள். துப்பரவு செய்த வயற்காணிகளில் நெல் விதைத்து தங்களின் வாழ்வுக்கான வருமானத்தைத் தேடிக்கொண்டார்கள். அப்போதைய வாழ்க்கைமுறை மக்களுக்கு மிக இலகுவாக அமைந்திருந்தது. தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை மட்டுமே பூர்த்திசெய்து கொண்டு அதிக எதிர்பார்ப்புக்கள் இல்லாமல் வாழ்ந்த எளிமை யான வாழ்க்கை. ஐம்பதுகளின் இறுதிப் பகுதியில் கிட்டத்தட்ட நூற்றைம்பது குடும் பங்கள் இங்கு குடியிருந்தன.

ஒரு இனத்தின் கலாசாரம் என்பது அவர்கள் வாழ்கின்ற வாழ்க்கை மூலம்தான் அடையாளம் காணப்படுகிறது. இலங்கையின் பல்வேறு இடங்களிலிருந்தும் வந்து மக்கள் இங்கே குடியேறியதால் அவரவர் பிரதேசத் துக்குரிய பழக்கவழக்கங்கள் இங்கே ஒருவருக் கொருவர் என்று பகிர்ந்து கொள்ளப்பட்டது. அது தவிர இக்கிராமத்திற்கென்று சில பொது வான நடைமுறைகளும் பழக்கத்தில் கொண்டுவரப்பட்டது. மரணம் என்பது மனிதர்க்கு எதிர்பாராமல் வருவது. ஏழை களின் வீடுகளில் திடீரென ஏற்படும் மரணங் களின்போது கிராமத்தவர் ஒன்றுகூடி தம்மால் இயன்ற பொருளுதவி செய்து காரியங்களை நடாத்தி வைப்பார்கள். ஆரம்ப நாட்களில் ஏற்படுத்தப்பட்ட இந்த நடைமுறை இன்று வரை இக்கிராமத்தில் வழக்கமாகி இருப்பது ஒரு சிறப்பம்சம். மனிதநேயத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்தச் செயல் இன்றுவரை தொடர்கிறது.

கிராமத்தில் வாழ்ந்தவர்கள் தங்களுக் குள் குழுவாகச் சேர்ந்து கொண்டு ஒவ்வொரு வரின் வயல்வேலைகளையும் தங்களுக்குள் பகிர்ந்துசெய்து கொள்ளும் வழக்கமும் இருந்தது.

கிராமத்தில் உள்ள குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக 1954 ஆம் ஆண்டு கிராம மத்தியில் சிறு கொட்டிலில் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. கொட்டிலில் ஆரம்பிக் கப்பட்டாலும் நாளடைவில் படிப்படியாகக் கட்டடங்களாக மாறி வளர்ச்சி பெற்றது. உள்ளூர் ஆசிரியர்களோடு யாழ்ப்பாணப் பகுதிகளிலிருந்தும் பல ஆசிரியர்கள் வந்து தங்கியிருந்து மாணவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தார்கள். ஒரு சிறு கொட்டிலில் தொடங்கிய பாடசாலை இன்று மாடிக் கட்டடங்களோடு வளர்ச்சிபெற்று நிற்பதைக் காணலாம். எத்தனையோ வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் உருவாக அடித்தளமிட்டு அனுப்பிவைத்த இப்பாடசாலையைக் கிராம மக்கள் பெருமை யோடு கொண்டாடுகிறார்கள்.

கிராமமக்களின் இறைபக்தி காரண மாக ஐம்பதுகளிலேயே சிறு கொட்டிலில் முருகன் கோவில் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. பீடத்தில் வெள்ளிவேல் வைக்கப்பட்டு பூஜைகள் ஆரம்பமானது. படிப்படியாகக் கட்டடங்கள் கட்டப்பட்டு முருகன் கோவில் விஸ்தரிக்கப்பட்டது. இன்றைக்கு அழகான கட்டடத்தில் பளபளக்கும் திருவாசியின் மத்தியில் வெள்ளி வேல் வடிவில் முருகன் அருள்புரிந்து கொண்டிருக்கின்றான். சித்திர வேலாயுதக்குமரன் என்ற பெயர் சூட்டப் பட்ட முருகனுக்கு ஆனி உத்தரம் அன்று விழா எடுக்கப்படுகிறது. கொடியேற்றத்தோடு ஆரம்பமாகிப் பத்துநாள் திருவிழா நடை பெற்று இறுதிநாள் ஆனி உத்தரத்தன்று அன்னதானம், சுவாமி ஊர்வலம், தீ மிதிப்பு நடைபெறும். காலப் போக்கில் தேர், தீர்த்தம், திருக்கல்யாணம், வைரவமடை நடைபெற்று திருவிழா நிறைவு பெறும். பக்கத்துக் கிராமங் களிலுள்ள கோவில்களிலிருந்தும் மக்கள் காவடி, பாற் செம்பு, பறவைக் காவடி எடுத்து வருவார்கள். கிராமத்து மக்களுக்கு இந்த சித்திரவேலாயுதக்குமரன் மீது அபார நம்பிக்கை இருந்தது. எத்தனையோ பிரச்சனை கள், நெருக்கடிகள், துயரங்கள் வந்தபோதும் தங்களுக்குத் துணையாக இந்த முருகன் இருப்பான் என்ற நம்பிக்கை வேரோடி யுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரபுரத்து மக்களோடு இணைந்திருந்த இன்னொரு விடயம் கலை ஆர்வம். கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களுக்கு முன்பே நாட்டுக்கூத்துக் கலையை கிராமத்துக்குள் கொண்டு வந்தார்கள். இணுவிலில் இருந்து வந்து குமரபுரத்தில் குடியேறி வாழ்ந்த அண்ணாவியார் நடராசா அவர்கள் சிறந்த கலைஞராகத் திகழ்ந்தார். மிருதங்க ஒலியும் ஆர்மோனிய இசையும் பாட்டுச் சத்தமும் மாலைவேளைகளில் அவர் வீட்டில் ஒலிக்கும். அவர் மட்டுமல்லாது, அவரது பிள்ளைகளும் கலைகளில் ஆர்வம் கொண்டவர்களாக விளங்கினார்கள். 1957ஆம் ஆண்டில் "கலைமகள் நாடகமன்றம்" என்ற அமைப்பை ஆரம்பித்துக் கலையில் ஆர்வமுள்ள கிராமத்து இளைஞர்களைச் சேர்த்து நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள் தயாரித்தார்கள். பரந்தன் பாடசாலையில் முதல் நாடகத்தை 58இல் அரங்கேற்றினார்கள். முருகன் கோவில் ஆனி உத்தரத் திருவிழா அன்று இரவு முழுவதும் காத்தவராயன் நாட்டுக்கூத்தை நடாத்தினார்கள். மணிமுடி சூடி அரசனுக்குரிய பட்டாடைகளுடன் காத்தவராயன் கழுத்தில் மாலைகளுடன் ஆரியமாலையின் கை பிடித்து கோவிலைச் சுற்றி வருவதை அந்த விடிந்தும் விடியாத அதிகாலைப் பொழுது வரை தூக்கம் மறந்த கண்களில் வியப்புடன் சனக்கூட்டம் பார்த்து நிற்கும். சிவராஜசிங்கம் என்பவர் காத்தவராயனாக நடித்திருப்பார். அவரது நடிப்புப் பற்றியும் அண்ணாவியாரின் திறமை பற்றியும் கிராமத்தில் கொஞ்ச நாட்களுக்குப் பேச்சாக இருக்கும். கூத்தில் வரும் பாடல்களைக் கிராமமே மனனம் செய்திருக்கும்.

1974ஆம் ஆண்டளவில் கிராமத்து இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து "பரந்தன் இளைஞர் வட்டம்" என்ற அமைப்பை ஆரம்பித்து விளையாட்டுக் கழகமாகப் பதிவு செய்தார்கள்.

"சிறிதாய் வளரும் சின்னக் கிராமம்
சிந்திக்க வைப்போம் அது எங்கள் இதயம்"

என்ற முகப்பு வாசகத்திற்கேற்ப இயங்கத் தொடங்கியது. கிராமத்தின் நுழைவுப் பகுதியில் இருக்கும் விளையாட்டு மைதானத்தில் மாலையானால் சிறுவர் முதல் இளைஞர் வரை ஒன்று கூடுவர். உடற்பயிற்சி ஆரோக்கியமான வாழ்வைத்தரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தினர். கிராமத்தின் பல்வேறு முன்னேற்றத்துக்கும் இவர்கள் பங்காற்றினார்கள். 79ஆம் ஆண்டிலிருந்து பௌர்ணமி நாளில் பாடசாலை மண்டபத்தில் கலைநிகழ்ச்சிகள் நடாத்தினார்கள். ஆடல், பாடல், நாடகம் என்பவற்றோடு; பட்டிமன்றம், கவியரங்கம் போன்றவற்றையும் நடாத்தி ஒவ்வொருவரின் திறமைகளையும் வெளிக்கொண்டு வந்தார்கள். உழைத்துக் களைத்திருந்த மக்களுக்கு இதுபோன்ற நிகழ்ச்சிகள் உற்சாகத்தையும் ஒருவித ஆறுதலையும் தந்தன.

கிராமத்தில் அவ்வப்போது மாதர் சங்கமும் இயங்கிவந்தது. மாதர் சங்கத்துக்குத் தலைவியாகத் திருமதி திருச்செல்வம் இருந்த போது பல நல்ல செயற்பாடுகளை செய்திருக்கிறார். கிராமத்தில் உள்ள ஏழைப் பெண்களுக்கு சுயதொழில் செய்து சங்கம் மூலம் கடன் உதவிகள் பெற்றுக் கொடுத்திருக்கிறார். இதன் மூலம் பல பெண்கள் தன்னம்பிக்கையோடு வாழ வழி கிடைத்திருக்கிறது.

கிராமத்தில் பல கவிஞர்கள், எழுத்தாளர்கள் உருவாகியிருக்கிறார்கள். பரந்தன் கலைப்புஷ்பா, ஆவூரான், சாள்ஸ் குணநாயகம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். தற்போதும் சாள்ஸ் குணநாயகம் ஹொலண்ட்டிலும், ஆவூரான் அவுஸ்திரேலியாவிலும் வாழ்ந்துகொண்டு இலக்கியப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியில், ஆன்மீகத்தில், விளையாட்டில், கலை இலக்கியத்தில் எனப் பல்துறைகளிலும் ஆளுமைமிக்க மனிதர்களைத் தோற்றுவித்த இக்கிராமத்தின் ஆணிவேராக இருந்தது விவசாயத்தின் முயற்சி. கிராமத்தின் மேற்குப்புறமாகப் பரந்திருந்த வயல்வெளிகள் இவர்களுக்கு வாழ்வாதாரத்தை அள்ளி அள்ளி வழங்கியது. எத்தனையோ இடப்பெயர்வுகள், பிரச்சினைகள், இழப்புக்கள் வந்தபோதும் விழ விழ எழுந்து நிற்கக்கூடிய மனவலிமையைத் தந்தவை இந்த வயல்வெளிகள்தான். இந்த மண் தந்த தைரியத்தில்தான் மக்களால் நிம்மதியாக வாழமுடிந்தது. பச்சை அரிசிச் சோறும் பாரைமீன் குழம்பும் வயிறாரச் சாப்பிடமுடிந்தது. இன்று மீண்டும் குமரபுரத்தில் மக்கள் குடியேறிவிட்டார்கள். தமக்கு மீண்டும் வாழ்வு கிடைக்கும் என நம்புகிறார்கள். பரந்து விரிந்து கிடக்கும் பச்சைவயல் பரப்புக்கள் அந்த வெளியில் பரந்து திரியும் வெண் பறவைகள். சலசலத்துப் புரண்டோடும் வாய்க்காலின் வெள்ளம். காலை மாலைகளில் கழுத்து மணிகள் ஒலிக்கத் தெருவோரம் நடக்கும் மாடுகள். உழைத்துக் களைத்த மக்களால் நிரம்பியிருக்கும் தெருக்கள்.

வன்னியிலிருக்கும் ஒவ்வொரு கிராமத்தினதும் அடையாளங்கள் இவை. வாழ்வில் துயரத்தின் எல்லைவரை போய் மீண்டு வந்திருக்கும் மக்களின் எதிர்கால வாழ்வுக்கான நம்பிக்கையைத் தருவதும் இவைதான்.

◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விந்தை மனிதன்

செல்வி நிருபா ராஜ்குமார்
தரம் - 12 (கலை), கிளி/கண்டாவளை மகா வித்தியாலயம்.

அரிது அரிது என்றான் ஒருவன்
எளிது எளிது என்றான் இன்னொருவன்.
விதியே விதி என்றிட்டான் ஒருவன்.
மதியே மதி என்றிட்டான் மற்றொருவன்.

மதிதனை மதித்தவன் மதியினில் ஏறினான்.
விதியென நினைத்தவன் வீதியில் கிடக்கின்றான்.
உலகில் உள்ளோரை ஒன்றாய் இணைத்தான்.
உறவுகள் பலவற்றைச் சேர்ந்திட வைத்தான்.

இயந்திர மனிதனை இலகுவாய் செய்திட்டான்.
இமயத்தைத் தாண்டவும் உயர்ந்து வளர்ந்திட்டான்.
காலத்தை மாற்றிடும் சிற்பியாய் மாறினான்.
காலனைத் துரத்திடும் கலைகளும் பயின்றிட்டான்.

நோய்கள் பலவற்றை மாறிட வைத்தான்.
மருத்துவத் துறைகளில் மாயங்கள் செய்தான்.
கண்டதே காட்சி என்பதை மாற்றிக்,
கொண்டதே கருவியென வியந்திட வைத்தான்.

எத்திக்கு சென்றிடினும் எம்மிடம் அறிந்துகொள்ள,
நாற்றிசையும் செய்திட்டான் நயமான தொடர்பாடல்.
புதுயுகம் படைத்திட முனைகின்றான் மனிதன்.
கலியுகம் வென்றிடத் துணிந்திட்ட தனயன்.

◆◆◆

(இவ் கவிதையாக்கம் 2012 ஆம் ஆண்டின் பிரதேச மட்ட கலை இலக்கியப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் முதலிடம் பெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேல் அழகன்
## அரிசி ஆலை



சகலவிதமான
சிவப்பு நாடு, சிவப்புப்பச்சை அரிசிகளை
சில்லறையாகவும், மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்: ந.சுவேந்திரன் (சிவா)

முல்லை வீதி, பரந்தன்.

# அம்மன் கட்டடப்பொருள் வாணிபம்




உரிமையாளர்:
ச.ஜீவராசா (ஜீவன்)

முல்லை வீதி, தருமபுரம்.

தொ.பே: 077 304 4223


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகம்

## அரிசி ஆலை



கல், மண் நீக்கப்பட்ட சகலவிதமான
சிவப்பு நாடு, சிவப்புப்பச்சை அரிசிகளை
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

உரிமையாளர்: பொ.கணநாதன்

முல்லை வீதி,
புளியம்பொக்கணைச் சந்தி,
பெரியகுளம்.

# செல்லப்பிள்ளையார்

## உதிரிகள் வாணிபம்





முல்லை வீதி,
புளியம்பொக்கணைச் சந்தி,
பெரியகுளம்

உரிமையாளர்:
ப.லக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளைப் பிரதேசம் சார்ந்ததான நூலாக்க முயற்சிகளும் அவற்றின் அடைவுகளும் - ஓர் நோக்கு

த. அமலதாஸ்,
கலாசார உத்தியோகத்தர், கண்டாவளை.

கிளிநொச்சி மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் கண்டாவளைப் பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழ்பவர்களை, பூர்வீகமாக வாழ்ந்து வருபவர்கள், பல்வேறு குடியேற்றத்திட்டங்கள், மூலம் குடியேற்றப்பட்டவர்கள். தொழில் நிமிர்த்தம் வந்து சேவையாற்றியவர்கள் எனப் பகுத்து நோக்கமுடியும். இவர்களால் கடந்த இரு தசாப்தகாலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட நூலுருவாக்க முயற்சிகள் மிகவும் அருந்தலாகவே உள்ளது. இப்பிரதேசம்சார் நூலாக்க முயற்சிகள் அருந்தலாகவே இருந்த நிலையில் தொடர்ந்து வந்த யுத்த, இடப் பெயர்வுகள் வெறுமையாக்கி விட்டன. இக் கட்டுரையானது, மேற்படி வெறுமை நிலையை தளர்த்தி இற்றைவரையில் வெளிவந்த நூலுருவாக்க முயற்சிகளை பதிவு செய்ய முனைகிறது. அந்த வகையில் 18 நூல்கள் அடையாளப்படுத்தப்பட்டு, அவை பற்றிய செய்திகளை இங்கு பதிவுசெய்வது எதிர்காலத்தில் நூலுருவாக்க மற்றும், பிரதேசம்சார் ஆய்வுமுயற்சிகளில் ஈடுபட விரும்புபவர்களுக்கும் அறியவிரும்புபவர்களுக்கும் துணை புரியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தவகையில் இந் நூலாக்க முயற்சிகளை மூன்று பிரதான வகையாக நோக்குவது பொருத்தமாக அமையும்.

1. கண்டாவளைப் பிரதேச மக்களின் நூலாக்கங்கள்
2. பிறபிரதேசம் சார்ந்தவர்களின் நூலாக்கங்கள்
3. பிரதேசத்திலுள்ள அமைப்புசார் நூலாக்கங்கள்.

## 1. கண்டாவளைப் பிரதேச மக்களின் நூலாக்கங்கள்

இவ்வகையினருள் இதுவரைமூவர் இனங்காணப்படுகின்றனர். கண்டாவளையைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை வதிவிடமாகவும் கொண்ட "கண்டாவளைக் கவிராஜர்" எனும் புனைபெயரூடாக கவிதைத் துறையில் அறியப்படுபவருமான ஓய்வுபெற்ற கிராமசேவகர் கலாபூசணம் திரு. சி. கு.இராசையா அவர்களும், குமரபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு சுமார் 200 வரையிலான சிறுகதைகளைத் தந்து தாமரைச்செல்வி எனும் புனைபெயரூடாக சிறுகதைத் துறையில் அறியப்படுபவருமான திருமதி க. ரதிதேவி அவர்களும் பரந்தனைப் பூர்வீகமாகக் கொண்ட டிவனியா நிலு சினிமான் போன்றோரின் வெளியீடுகள் குறிப்பிடத்தக்கவை.

### அ) கந்தக்கோட்ட மான்மியம் (மரபுக் கவிதை)

கண்டாவளைப் பிரதேசத்தின் முரசுமோட்டை சிறீ சுப்பிரமணியர் ஆலய முருகனின் திருவருளைப் பாடுபொருளாகக் கொண்டு கண்டாவளைக் கவிராஜரால் இயற்றப்பட்ட இந்நூல் வவுனியா அகில இலங்கை சேக்கிழார் மன்ற வெளியீடாக 1999 கார்த்திகையில் நூலுருப்பெற்றது. இந்நூலுக்கு 1999 இன் கவிதைத் துறைக்கான அரச இலக்கிய விருதும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. இதில் பாயிரம், காப்பு, கடவுள் வாழ்த்து, ஈழவள சருக்கம், கரைச்சி நகர் சருக்கம், கனகராஜன் ஆற்றுச் சருக்கம், இரணைமடுச் சருக்கம், கந்தக்கோட்டச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சருக்கம் (முரசுமோட்டை முருகன்), குடியேற்றுச் சருக்கம், சிகண்டி முனிவர் சருக்கம், கந்த வன்னி கதிபெறு சருக்கம், கோயில் காண் சருக்கம், விழாவயர் சருக்கம் என 10 சருக்கங்களூடாக கிளிநொச்சி மாவட்ட மக்கள் வாழ்வியல், முருகன்மீதான பக்தி, ஆன்மீகம், நம்பிக்கைகள் சிறப்பாக பதிவு செய்யப்படுகின்றமையைக் காணலாம்.

**ஆ) கரைச்சிப்பள்ளு (பள்ளுப் பிரபந்தவகை)**

தமிழில் எழுந்த 96வகைப் பிரபந்தங்களில் பள்ளும் ஒன்றாகும். தமிழில் என்னயினாப்பிள்ளையால் இயற்றப்பட்ட முக்கூடற்பள்ளு முதலில் எழுந்ததாகும். ஈழத்தில் தோன்றிய அரிய பள்ளு பிரபந்தங்களுள் கதிரை மலைப்பள்ளு மற்றும் நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்ட பறாளை விநாயகர் பள்ளு போன்றவை குறித்தற்குரியன. கண்டாவளை கோணங்குள விநாயகரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பள்ளுவரம்பில் கையாளப்படும் பாத்திர வகைகளான பள்ளன், மூத்தபள்ளி, இளையபள்ளி, பண்ணையார் போன்றவர்களூடாக ஏற்றிப்பாடப்பட்ட சுவையான இலக்கியமாகும். சிறப்பாக இப்பிரதேசத்தின் விவசாயச் சிறப்புக்கள், பொருளாதாரச் சிறப்புக்கள், காதல், ஊடல், நாட்டுவளம் என்பன சிறப்பாக பேசப்படும் தன்மையதாக விளங்குகிறது.

**ஈ) பச்சை வயல் கனவு (நாவல்)**

1974 முதல் வீரகேசரியில் "ஒரு கோபுரம் சரிகிறது" எனும் சிறுகதையினூடாக தாமரைச் செல்வி எனும் புனைபெயரில் எழுதி சிறுகதை உலகில் அறிமுகமாகிய க. ரதிதேவியின் இந்நாவல் தான்பிறந்த மாவட்டத்தின் விவசாயத்தை மையமாகக் கொண்டு வாழும் மக்கள் அவர்களின் நில அபகரிப்புக்கு எதிரான கோசங்கள், தனிமனித காதல் உணர்வுகளை தான்வாழ்ந்த சூழல், தாய்மண் பற்று என்பவற்றை பாத்திரப் படைப்பினூடாகக் குறிப்பிடும் அரிய நாவலாகும். 2004 ஆம் ஆண்டின் அரச சாகித்திய விருதை அவருக்கு இந்நாவல் பெற்றுகொடுத்துள்ளது. இவரின் "09 சிறுகதைத் தொகுப்புக்களில் பல பிரதேச சார் மக்கள் வாழ்வியல், பெண்ணியம் சார்கருத்துக்கள் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம்.

**உ) வைகறை வரிகள் (கவிதைத் தொகுப்பு)**

இந்நூல் இளம் புதுக்கவிதை எழுத்தாளர்வரிசையில் வளர்ந்துவரும் பெண் கவிஞராகக் காணப்படும் பரந்தன் டிவனியாவின் கன்னி கவிதைத் தொகுப்பாக கிளிநொச்சி வேழன் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு 2011 ஆண்டு புரட்டாதி மாதத்தில் வெளிவந்தது. இதில் ஹைகூ வடிவ கவிதைகளும் வசன நடையில் மைந்த புதுக்கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. அம்மா, பேனாமுனை, உண்மைவெல்லும், தேவை, இப்படியானவர்கள், மாலை போன்ற கவிதைகள் சுவாரசியம் மிக்கதாகவும் உணர்வலைகளின் பிம்பமாகவும் காணப்படுகின்றன. கவிதைத் துறையில் பயணிக்கும் இவ் இளம் கவிஞர் படைப்புக்கள் தொடர்ந்துவரின் கனதியாக அடுத்த பாகங்களில் வெளிவரும் என எதிர்பார்க்கலாம்.

**2. பிற பிரதேசம் சார்ந்தவர்களின் நூலாக்கங்கள்:**

இவ்வகையானவை பெரிதும் இங்குள்ள அரச திணைக்களங்கள், பாடசாலைகளில் தொழிலின் நிமித்தம் வந்து கடமையாற்றியவர்களின் கால அனுபவங்கள், நினைவுகள், இன்ப துன்பச் சம்பவங்கள், மன உணர்வுகள் போன்றவற்றை பிரதிபலிக்கும் வகையில் எழுந்தனவாகும்.

அவ்வகையில் கிளிநொச்சி மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபராகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சி உதவி அரசாங்க அதிபராகவும் கடமை புரிந்த இலக்கிய உலகில் "செங்கை ஆழியான்" எனும் புனைபெயரில் அறியப் பட்டவரான திரு.க. குணராசா அவர்களால் எழுதப்பட்ட இரு நாவல்களையும் கண்டா வளை கோட்ட பாடசாலைகளான கிளி/ பிரமந்தனாறு ம.வி, புன்னைநீராவி ம.வி, கிளி/ தருமபுரம் ம.வி, கிளி/கண்டாவளை ம.வி ஆகிய பல பாடசாலைகளில் ஆசிரியப் பணியாற்றிய ஊரெழுவைச் சேர்ந்த திரு. தி. உதயசூரியன் அவர்களின் இரு கவிதை தொகுப்புக்களையும் இனங்காண முடிகிறது.

**அ) மழையில் நனைந்து வெய்யிலில் காய்ந்து" (நாவல்)**

தனது நீண்ட இளமைக்கால அரச சேவையை இம் மாவட்டத்தில் கழித்த செங்கைஆழியானால் எழுதப்பட்ட இருபதுக்கு மேற்பட்ட நாவல்களுள் 1984 காலப்பகுதியில் வீரகேசரி வாரமலரில் தொட ராக வந்து 1989 இல் வரதர் வெளியீடாக இந்நாவல் நூலுருப்பெற்றது.

இதில் கண்டாவளைப் பிரதேசம் சார்ந்த வயல்கள், நீர்நிலைகள், மக்களின் வாழ்க்கை முறைகள், வரலாற்றுச் செய்திகள் படம் பிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இரணைமடுக்குளம் கட்டப்பட்டகால வர லாறுகள், புளியம்பொக்கணை நாகதம்பிரான் பங்குனி உத்தரவிழா சம்பவங்கள், அதில் கிராம சேவகர்கள், கிராமபெரியார்களின் பங்களிப்புகள், குடியேற்றப் பரம்பல்கள், நீர்ப்பாசனத் திணைக்களப் பணியாட்கள், பணிகள் போன்றன பற்றி சாதாரண மொழிநடையில் பேசப்படுகிறது. மேலும் பிரதேச வாசிகளின் வாழ்வும், அவர்களின் தொழில்ரீதியான பகுப்பு முறை யினால் ஏற்பட்ட நெருக்கம், இறுக்கம், கிராமப் பெண்களின் காதல், துன்பம், அவலம் போன்றனவும் அழகாக சித்தரிக்கப் பட்டுள்ளமை பிரதேசம்சார் பழமையான வரலாற்றை பதிவுசெய்வதாக அமைந்துள்ள தெனலாம்.

**ஆ) "இருள் மெல்ல விலகும்" (நாவல்)**

இந்நாவல் 1990-1995 இடையான காலப் பகுதியில் தமிழ்பிரதேசத்தின் போக்கு வரத்து, தொடர்பாடல்கள் ஏனைய பாகங் களிடையே இன்றி அல்லது இறுக்கமடைந் திருந்த காலத்து வரலாற்றுச் செய்திகளை பதிவு செய்யும் வகையில் செங்கை ஆழியானினால் எழுதப்பட்டு யாழ். கமலம் பதிப்பக வெளியீ டாக ஆகஸ்ட் 2009 இல் வெளிவந்தது.

இந்நாவலின் முன்னுரையில் "இலங் கைப் பெரு நிலத்தையும் யாழ்ப்பாணக் குடா நாட்டையும் இணைக்கின்ற ஆனையிறவுப் பாதை மக்களின் போக்குவரத்திற்கு அடை பட்டுப்போனதன் பின்னர் இடர் நிறைந்த வழிகள் மக்களைத் தெற்கேயும் வடக்கேயும் இடம் மாற்றி வந்துள்ளன. முதலில் கேரதீவு - சங்குப்பிட்டிப்பாதை, அதன் பின் இயக்கச்சி ஊரியான், அல்லது இயக்கச்சி - கொம்படிப் பாதை அதன்பின்னர் கிளாலி - பூநகரிக் குடாக்கடல் பாதை என்பவற்றின் ஊடாக மக்கள் இரவு நேரங்களில் சஞ்சரித்தனர். அவ்வேளை யாழ்ப்பாணக் குடாநாட்டில் நுகர்வுப் பொருட்கள் இல்லை. எரிபொருட் கள் அரிது. மின்சாரம், தொலைபேசி வசதிகள் எதுவுமேயில்லை எனக் குறிப்பிடுவதுடன் (யாழ்ப்பாண) வட புல மக்களின் மனவுணர்வு கள் கோலங்களை இலங்கை (கொம்படி, கிளாலி, யாழ்ப்பாணம், ஊரியான், கொழும்பு) இலங்கைக்கு வெளியே (லண்டன்) எனும் இரு களப்புலங்களினூடாக அழகாக சித்தரித் துள்ளதைக் காணலாம்.

இந்நாவலில் கண்டாவளைப் பிர தேசத்துக்குரிய கொம்படி (மடுக்கரை) கொம்படி அம்மன் ஆலய சூழல், வெளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டல் (பகுதிகள்) வர்த்தக மையங்களும், ஊரியான் பிரதேசம், இங்குவாழ்ந்த பிரதேச மக்களின் அக்கால வாழ்க்கை கோலங்களின் மாற்றங்கள் பற்றியும் இங்கு குறிப்பிட்டு இருப்பதானது, யாழ்ப்பாண மக்களின் அக்கால போக்குவரத்துக்கு இப்பிரதேசம் ஆற்றிய பங்களிப்பினைக் காட்டும் ஓர் ஆவணமாகவே பார்க்கமுடிகிறது. தமிழ் மக்கள் தம் தொடர்பாடல் மற்றும் போக்கு வரத்துத் தேவைகளை நிறைவேற்றப்பட்ட சிரமமிகு அவஸ்தைகள் இங்கு சிறப்பாக பதிவாகியுள்ளது.

**இ) "கண்ணம்மா" (கவிதைத் தொகுப்பு)**

இது ஏலவே குறிப்பிட்டதுபோல ஆசிரியத்துவத்தைத் தொழிலாகக் கொண்டும் கவிதை துறையில் ஈடுபாடு உடையவருமான தி. உதயசூரியன் அவர்களின் முதலாவது நூலாக்க முயற்சியாக 2002 மார்ச் காலப் பகுதியில் வெளியாகிய நூலாகும். இதில் கவிதை, கட்டுரை, கடிதம் எனும் விடையங் களாக தமிழ் மக்களின் அவலங்கள், கஸ்டங் களை இதமாக சந்திப்பதில் ஆனந்தமடைதல், மானிட வேட்கைகள் (தேவைகள்) காதல் தரும் இன்ப அனுபவம் மற்றும் வேதனைகள், யுத்த காலத்தில் பெண்கள், பள்ளிகள், சிறுவர்கள் பட்ட அவஸ்தைகள், அவர்கள் ஏக்கங்களைப் பதிவுசெய்வதைக் காணலாம். இப்பிரதேசத்தின் இக் காலப் பள்ளிக் குழந்தை ஒன்று தன் பாடசாலை விழாவை எதிர்பார்த்து இருப்பதை,

"அடுத்தவாரம்
வெள்ளி விழாக்காணும்
எமது பள்ளிக்கூடம்
அதுவரை இடம்பெயராதிருக்கட்டும்."

எனவும், குழந்தைகள் போரின் வடுவினைத் தாம் அனுபவித்தபோதும்,

"நாங்கள் பட்ட துன்பம்
இந்த பூமியில் எவருமே
இனிப்படாதிருக்கட்டும்"

எனவேண்டும் வகையில் அமைந்த கவிதைகள் பிஞ்சுகள் மன ஏக்கங்கள் எவ்வளவு தூய்மை யானது எனப் பதிவு செய்வதையும், கடிதங்கள் எனும் பகுதிகளூடாக காதல், காதற் பிரிவு, அதுதரும் வேதனைகள், காத்திருப்புக்கள், அதிலிருந்து விடுபடும் தெளிவு போன்ற மன உணர்வுகளைச் சித்தரிப்பதாகவும் அமைந் திருப்பதைக் காணலாம்.

**(ஈ)"பெயரறியாப் பெரியோன்" - காலமும் கவிதையும் (கவிதைத் தொகுப்பு)**

இந்நூல் தி. உதயசூரியனின் 2ஆவது நூலாக்கமுயற்சியாக யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரி வெளியீடாக 2002 ஆண்டின் ஆகஸ்ட் மாத காலப்பகுதியில் வெளிவந்திருக் கின்றமையை அறியமுடிகிறது. இதனை நூலாசிரியர், 1990களின் பின் அரைப் பாதியில் இடம்பெயர்ந்து அந்தரித்தபோது அடைக்கலந்தந்து ஆதரித்த வன்னிவாழ் மக்களுக்கு யாழ்ப்பாண மக்களின் நன்றிக் காணிக்கையாக அர்ப்பணித்திருப்பதும், மயிலங்கூடலூர் பி. நடராசனின் அணிந்துரை யில் "கவிதைத் துறையில் தீவிர ஈடுபாடுடன் நவீன கவிதைகளை எழுதிவரும் இளம் கவிஞர் தி. உதயசூரியன் இமைப்பொழுதும் சோராது, நாட்டின் நிலைகளைக் கவிதைமூலம் பதிவு செய்து பரப்பிவரும் சிறந்த கவிஞர்களுள் ஒருவராக விளங்கிறார்" எனக் குறிப்பிடுவது போல, சமகாலத்தில் மக்கள் சந்தித்த துன்பங்களை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. அக்காலத்தில் மண்ணெய் சிக்கனத்துக்காக பயன்படுத்திய சிக்கன விளக்கினை கண்டு பிடித்த சாதாரண பொதுமகனை "பெயர றியாப்பெரியோன்" எனும் தலைப்பில் போற்றுவதைப் பின்வரும் வரிகள் காட்டி நிற்கின்றன.

பஞ்சு விளக்கை
தூக்கிப் பார்க்கிறேன்
குளிர்கிறது நெஞ்சு
எங்கள் மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளால் மூழ்கடிக்கப்பட்ட போது
ஒருவன்
எண்ணெய் சிக்கனம்
இதுவென
ஏற்றி வைத்தான்
ஒளி பிறந்தது !
மலையாய் உயர்ந்தே
மனதில் நிற்கிறது
அவன் மதிப்பு
பெயரறியாப் பெரியோன்

அவன் வாழ்க! எனவும், உள்ளூர் இடம் பெயர்வின் பின் மீண்டும் ஊர்திரும்பி வாழ நினைக்கும் ஒருவர் உணர்வை "முதுமையின் கோடு" எனும் கவிதையில்,

ஊர் திரும்பி.... முதலிலிருந்துதான்
தொடங்கவேண்டும்;
எனத் தெரிந்து கொண்ட போது
முகத்தில் தெரிகிறது
முதுமையின்கோடு" என

எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்புக்கள் வெறும் கனவுகளாகவே கழிந்துவிடுமோ? என ஏங்கும் மனித உணர்வுகளை மிக நுட்பமாக பதிவு செய்கிறது. மேலும், தாய், நான், எனது காலமும் கவிதையும், சுமை, கனவு, நினைப்பு போன்ற தலைப்பில் "ஹைகூ" கவிதை களூடாக வாழ்வியல் யதார்த்தம், ஏக்கம், வலி, காதல் நினைவுகள் ஆகியவை பதிவாகின்ற ஓர் கவிதைத் தொகுப்பாக விளங்குவதைக் காணலாம்.

### 3. பிரதேசத்திலுள்ள அமைப்புசார் நூலாக்கங்கள்

கண்டாவளைப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களால் இதுவரை காலமும் வெளியிடப்பட்ட நூலாக்க அடைவுகளை இங்கு நோக்கலாம்.

#### அ) நூற்றாண்டு விழாச் சிறப்புமலர் கண்டாவளை மகா வித்தியாலயம்

கண்டாவளைப் பிரதேச பழமையான பாடசாலையாக விளங்கும் கண்டாவளை மகா வித்தியாலய நூற்றாண்டுப் பூர்த்தியை (1896-1996) முன்னிட்டு இடம்பெற்ற நூற்றாண்டுவிழாவில் 1998 ஏப்பிரல் 12ஆம் திகதி "கண்டாவளை வரலாறு" எனும் இந்நூல் வெளியிடப்பட்டது. இதனுள் கண்டாவளைப் பிரதேசத்தின் குடிப்பரம்பல், கல்வி, தொன்மை, கலை, கலாசார விடயங்கள் ஆரம்பகாலம், அந்நியர் ஆட்சிக்காலம், சுதந்திரத்தின் பின் என்ற பிரதான மூன்று வகையிலாக கண்டாவளை கிராம வரலாறு தொகுக்கப்பட்டுள்ளது. மேலும் இவ் வித்தியாலய ஆரம்பகால பதிவேடுகள், சொத்து விபரங்கள், அன்பளிப்புக்கள், சம்பவ திரட்டு பதிவு புத்தக குறிப்புக்கள் பலவற்றை தொகுத்து இருப்பதனூடாக இக்கிராம வரலாறுகள், பாடசாலை வரலாறுகளை அறிய உதவும் நூலாக விளங்குவதைக் காணலாம்.

#### ஆ) 10ஆவது ஆண்டுவிழா மலர் - கிளி/பிரமந்தனாறு அ.த.க.பாடசாலை

இம்மலர் எமது செயலக கிராம சேவ பிரிவில் ஒன்றான பிரமந்தனாற்றில் உள்ள இன்றைய மகா வித்தியாலயம் தொடங்கப்பட்ட (1989-1999) 10ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பாடசாலை நிர்வாகத்தால் ஆண்டு விழாவின்போது வெளியிடப்பட்டமையை அறியமுடிகிறது. இதனுள் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது முதல் அதிபராக விளங்கிய திரு. க.ச.சிவலிங்கம் அவர்களின் காலத்தில் வெளிவந்த இந்நூலில் மாணவ, ஆசிரியர் ஆக்கங்களும் பாடசாலை வரலாற் றுத் தகவல்களும், சாதாரண தரபெறுபேற்று அடைவுகள் பற்றிய விபரங்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

#### இ) கலைச் சோலை

இது கிளி/தருமபுரம் மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற வெளியீடாக 2011ஆம் ஆண்டு ஆடிமுதல் அச்சேறி நூலுருவில் வெளிவரத் தொடங்கியுள்ளது. இதனுள் உயர்தர மாணவர்களின் ஆக்கங்கள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் பிரதி அதிபர்கள் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளதுடன், 1988 முதல் 2010 வரையில் இப்பாடசாலையின் கலை வர்த்தகப் பிரிவுகளில் கல்வி கற்று பல்கலை சென்ற மாணவர் விபரங்களும் ஆவணப்படுத்தப் பட்டமை சிறப்பான விடயமாகும்.

**ஈ) முரசு**

கிளி/முரசுமோட்டை முருகானந்த மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்ற வெளியீடாக 2011 ஆம் ஆண்டின் கார்த்திகை மாதப் பகுதியில் வெளிவந்துள்ளது. இது ஐந்து பேராசிரியர்கள் மற்றும் கலாநிதிகளின் கட்டுரைகளுடன் மாணவர் ஆக்கங்களையும் தாங்கி வந்துள்ளது. எதிர்காலத்தில் இச் சஞ் சிகை தொடர்ச்சியாக வெளிவந்து மாணவர் களின் ஆக்க இலக்கிய முயற்சிக்கு களமமைக் கும் என எதிர்பார்க்கலாம்.

**உ) வளை ஓசை - நாதம் - 1**

கண்டாவளைப் பிரதேச செயலகத் தின் கலாசார பேரவையால் பிரதேச கலாசார விழாவை முன்னிட்டு 2011ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் ஆண்டுமலராக வெளி யிடப்பட்டுள்ளது. இந்நூல் உள்ளூர் கலைஞர் கள், படைப்பாளிகள் மற்றும் ஆர்வலர்க்கான தம் படைப்புக்களை வெளியிடுவதற்காக சந்தர்ப்பத்தை வழங்குவதை நோக்காகக் கொண்டு வெளியிடப்பட்டு வருகிறது. இந்நூலில் மயில்வாகனபுரம், கோரக்கன் கட்டு, கிராமங்கள்சார் கட்டுரைகள், புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வழி பாட்டுத் தகவல்கள், பூர்வீகக் கிராமப் பெயர் களும் எழுற்சிக்கான காரணங்கள், சிறுவர் பாதுகாப்பு, மறுமணம் பற்றிய கட்டுரைகள், பிரதேச கலாசார விழாவை முன்னிட்டு இடம் பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய ஆக்கங் களையும் தாங்கி வந்திருப்பதுடன் கண்டா வளை பிரதேச செயலகம் பற்றிய சிறப்புக் கட்டுரை ஒன்றும் இடம்பெற்று இருப்பதைக் காணலாம்.

**ஊ) கலைஒளி விருது 2011 பெறும் கலைஞர்கள் விபரத்திரட்டு**

இச் சிறுகையேடு கலாசாரப் பேரவை யால் 2011ஆம் ஆண்டில் இடம்பெற்ற பிரதேச கலாசார விழாவின்போது கௌரவிக்கப்பட்ட 8 கலைஞர்களின் விபரங்களைத் தாங்கி யுள்ளது. அந்தவகையில் தாமரைச்செல்வி (சிறுகதை) சி. கனகராசா (ஆர்மோனியம்), வி. வேலாயுதபிள்ளை (கூத்து), மு. குணபால சிங்கம் (கூத்து), க.பாலேஸ்வரன் (பல்துறை), ம.றோமியல் (நாடகம்) மு.நடனவதி (இசை) சி.கு.இராசையா, (கவிதை) போன்றவர்களின் கலைச்சேவை பற்றிய விபரங்களைத் தாங்கிய ஆவணமாக வெளிவந்துள்ளது.

**எ) நாகதம்பிரான் ஆலய வரலாறு**

இந்நூல் புளியம்பொக்கணைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மேற்படி ஆலயத்தின் பூர்வீக வரலாறுகள், அபூர்வ செய்திகள், அற்புதங்கள் ஆகியவற்றை விளக்கும் வகையில் அமைந்த தலவரலாற்றை எளிய வசனநடையில் கலவெட்டித்திடலை சேர்ந்த ம.வேலாயுதபிள்ளை அவர்களால் ஆக்கப்பட்டு ஆலய வெளியீடாக 2012 ஆண்டின் பங்குனி உத்தர பொங்கல் நாளன்று வெளிவந்ததாகும். பிரதேச, ஆலய வரலாற்றுப் புதுமைகளை அறிய விரும்புபவர்களுக்கு அரிய பொக்கிசமாக இந்நூல் விளங்குகிறது.

**ஏ) பொன்விழா மலர் - தருமபுரம் மகா வித்தியாலயம் (1959-2009)**

மேற்படி நூலானது வித்தியாலய வெளியீடாக 2012ஆம் ஆண்டின் நடுப்பகுதி யில் பல கல்வியியலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கங்களையும் தாங்கி 250இற்கு மேற்பட்ட பக்கங்களுடைய காத்திரமான மலராக வெளிவந்துள்ளது. பாடசாலையின் கடந்த காலப்பதிவுகள், இற்றைவரை சேவையாற்றிய 26 அதிபர்களின் விபரங்கள் 50இற்கு மேற்பட்ட கட்டுரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்ற செயற்பாடுகளும் நிழற்படப் பதிவுகளும், ஆளணி வளவிபரங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது.

**ஐ) வளைகதிர் (கதிர் 1)**

கண்டாவளை மகா வித்தியாலய 116ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் எதிர்வரும் காலங்களில் ஆண்டுமலராக வெளிவரும் நோக்குடன் வித்தியாலய வெளியீடாக 2012 ஐப்பசி மாதத்தில் வளைகதிர் பூத்திருக்கின்றது. அதிகமான ஆசிரியர் கட்டுரைகளையும் மாணவர் ஆக்கங்களையும் கல்லூரியின் இற்றைவரை பணியாற்றிய 29அதிபர்கள் விபரங்களையும், பாடசாலை வரலாற்றையும் இந்நூல் அழகாகப் பதிவுசெய்து உள்ளதைக் காணலாம்.

**ஓ) 'பொன்னாரம்" (பொன்விழா மலர்)**
**கிளி/உமையாள்புரம் அ.த.க. பாடசாலை**

இந்நூலானது குறித்த பாடசாலையின் நிர்வாகத்தால் 50 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி இவ்வாண்டின் ஐப்பசி மாத இறுதியில் யாழ் / ஈஸ்வா பதிப்பகத்தில் பொன்விழா அன்று வெளிவந்துள்ளது. இதனுள் பாடசாலை பற்றிய வரலாறு, அது சந்தித்த இடப்பெயர்வுகள், முன்னைநாள் அதிபர்கள் புகைப்படங்களுடன் கூடிய பதிவுகளும், நிறைந்த மாணவர் ஆக்கங்களையும் தாங்கி வந்துள்ளதைக் காணலாம்.

நிறைவாகக் கடந்த இரு தசாப்த காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் வெளி வந்துள்ள நூலாக்க அடைவுகள் பற்றிய தேடலில் எம்மால் அறியப்பட்ட, கிடைக்கப் பெற்ற நூல்களையும் அவை கூறும் செய்திகளையும் எதிர்காலத்தில் மாணவர் ஆர்வலர்கள் மற்றும் ஆய்வு புலத்தோர் தேட விளைகின்றபோது அவை பற்றி இலகுவாக அறிந்து கொள்ளவும் மற்றும் பிரதேச வாசிகள் ஊரவர் தாம் சார் நூலாக்கங்களை வெளியீடுகளைத் தேடிப்பெறவும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் இவ்வாக்கம் வரையப்பட்டுள்ளது. இங்கு எம்மால் அடையாளங் காணப்பட்ட வெளியீடுகளை விடுத்து வேறு நூலாக்கங்களும் வெளிவந்து இருக்கமுடியும்.

எனவே அவைபற்றிய பதிவுகளைப் பேணி வைத்திருப்போர் எமக்கு அனுப்பி வைத்தால் வளை ஓசையின் அடுத்த வெளியீடுகளில் அவைபற்றிய பதிவுகளையும் எம்மால் வெளியிட முடியும்.

◆◆◆





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலவெட்டித்திடல் ஆதி (பழைய) கண்ணகி அம்பாள் ஆலயச் சூழலும் ஆகமம் சாராத வழிபாட்டு முறைமைகளும்

திருமதி இ. புனிதராசா,
ஆசிரியர், கண்டாவளைக் கோட்டக் கல்வி அலுவலகம், தர்மபுரம்.

பழமையும் பெருமையும் வாய்ந்த ஓர் ஆலயமாக கலவெட்டித்திடல் ஆதி கண்ணகி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது. இற்றைக்கு 400 வருடங்களுக்கு முன்னர் (கி.பி. 16ஆம் நூற்றாண்டு) கலவெட்டித்திடல், புளியம் பொக்கணைக் கிராமங்களின் கிழக்குத் திசையில் 7 மைல் தூரத்தில் அமைந்துள்ள கொழுந்துப்புலவு எனும் கிராமத்திலே மூன்று பகுதியினர் வாழ்ந்து வந்தனர். இவர்களுள் உடையாவெள் பகுதியைச் சேர்ந்த வன்னிய சைவவேளாளர் மரபிலே தோன்றிய ஒருவர் தான் குலநல்ல மார்பாண முதலியார் இவரது மகன் குலசேகர முதலியார் பரம்பரையினர் கண்ணகி அம்பாளைத் தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வந்தனர். இவர்களுடன் இன்று புளியம்பொக்கணையில் வீற்றிருக்கும் அருள்மிகு நாகதம்பிரான் பிறப்புக்குக் காரணமாயிருந்த சிவனை வவுனியா வெள் பகுதியினராகிய நீதிநாயக முதலியார் பரம்பரையினரும் கற்பகப் பிள்ளையாரை சைவவெள் பகுதியினராகிய நல்லமாப்பாண முதலியார் பரம்பரையினரும் குலதெய்வங் களாக வழிபட்டு வந்தனர். பின்நாளில் அங்கு ஏற்பட்ட கொள்ளை நோய்காரணமாக தங்கள் குலதெய்வங்களையும் தூக்கிக் கொண்டு கலவெட்டித்திடல், புளியம் பொக்கணைக் கிராமங்களுக்கு வந்து குலதெய் வங்களுக்குக் கோயிலமைத்து வழிபட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

பழமையான காலத்திலே கரைச்சி என்று சொல்லப்படும் பிரதேசத்திலே இயற்கை எழில் நிறைந்த பனைவளமும் நால்வகை நிலங்களில் ஒன்றான மருதம் என்கின்ற வயலும் வயல் சார்ந்த இடமுமாக விளங்கும் பழமைவாய்ந்த கிராமம் கல வெட்டித்திடல் ஆகும். ஆதிகாலத்தில் இக் கிராமத்தின் வெளியெங்கும் கலவோடுகள் பல நிறைந்து காணப்பட்டது. சிவ வழி பாட்டிற்காக கல்லால் செய்யப்பட்டு கற்பூரம் கொழுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள் எனக் கருதப்படுகிறது. இவ்வகை யில் கலவோட்டுத்திடல் பின்நாளில் கல வெட்டித்திடலாயிற்று. இங்கு சிறுசிறு குளங் களும், ஆறுகளும், சிறுபற்றைக் காடுகளும் காணப்படும். கிளிநொச்சி தனிமாவட்ட மாக்கப்பட்டதனால் இக் கிராமம் தற் பொழுது கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குள் இருக்கின்றது.

இக்கிராம மக்களின் பாரம்பரியங் களையும் வாழ்க்கை முறைமைகளையும் சிறிது நோக்குமிடத்து ஆரம்பத்தில் அலம்பல் என்று சொல்லப்படுகின்ற சிறுதடிகள் மற்றும் முள்ளுத்தடிகள் என்பவற்றால் போடப்படு கின்ற வேலிகளை உடையதாக இருந்தது. இதனை "அக்கில்வேலி" என்று சொல்லு வார்கள். இதன் இடையிடையே ஒடுங்கிய வழியிருக்கும். இவற்றை முன்னோர்கள் "சங்கடங்கள்" என்பர். இவ்வகையில் விளாப்புச் சங்கடம், வேலதறைச் சங்கடம், வரணியான் சங்கடம் என்பன கலவெட்டித் திடல், புளியம்பொக்கணைக் கிராமங்களுக் குள் நுழைவதற்கு ஆரம்பத்தில் இருந்த சங்கடங்கள் என அறியப்படுகிறது. ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதற்கு "கடப்புகள்" பயன்படுத்தப் பட்டதாக அறியமுடிகின்றது.

இக்கிராம மக்களின் வாழ்வியலில் பிரதான தொழில் கமச்செய்கை ஆகும். ஆடு மாடுகள் வளர்ப்பதையும் தொழிலாகக் கொண்டிருந்தனர். "ஏர்" என்று சொல்லப் படும் மரக்கலப்பையால் இன்றுவரை மாடுபூட்டி உழுவதும் சூடு அடிப்பதையும் காணமுடிகின்றது. காட்டு மிருகங்களால் பயிர்களுக்கு அழிவு ஏற்படாதிருக்க பிள்ளை யார், வீரபத்திரர், நாச்சிமார், வைரவர் போன்ற தெய்வங்களை ஆங்காங்கே வைத்து வழிபடுவர். மழைவேண்டி நாகதம்பிரான், கண்ணகி அம்மன் கோயில்களுக்கு அபிடே கம் செய்தலும் பயிர்ப்பூசை கொடுப்பதும் புதிய அறுவடையின்பின் புதிர் சேர்த்தலும் வழமையாக இருந்து வருகிறது.

வெள்ளி, திங்களில் விரதமிருந்து பசுஞ்சாணத்தினால் வீடுமெழுகி சமைத்து விருந்தினர்களுக்கும் அளித்து உண்பர். பால், தயிர், நெய், மோர் என்பவற்றுக்கு இங்கு குறைச்சலே இல்லை. முதியவர்கள் தங்கள் அலுப்பினைப் போக்குவதற்காகப் பனை மரங்களின் கீழிருந்து கள்குடித்து மகிழ்வர். வீடுவேய்தல், அரிவி வெட்டுதல், சூடு அடித்தல் போன்றவற்றை சுற்றாடலில் உள்ள வர்கள் ஒன்றுசேர்ந்து செய்வது வழமை. தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக இந் நிலமை ஓரளவு மாறிவருவதனையும் அவ தானிக்க முடிகின்றது.

தெய்வ நம்பிக்கை உடையவர்கள் கண்ணகி அம்பாளை நினைந்து வேப்பங்குழை அடித்து மந்திரம் சொல்லி எந்த விசத்தையும் இறக்குகின்ற விசகடி வைத்தியர்கள் இங்கிருக் கிறார்கள். இக்கிராம மக்கள் மட்டுமல்ல அயல் கிராம மக்களும் விசம் கலைத்தவுடன் (தீண்டியவுடன்) இவர்களிடம் தான் ஓடி வருவார்கள். இதன் மகத்துவம் யாதெனில் இன்றுவரை இலவசமாகவே இப்பணியை இவர்கள் செய்து வருகிறார்கள். விசம் தலைக்கு ஏறாதுவிடின் முதல் கட்டமாக மந்திரம் சொல்லி மண்ணில் இயந்திரம் கீறி அம்மண்ணை விசம் தீண்டிய இடத்திலிருந்து சற்று மேலாக சுற்றிச் சுற்றி மூன்று முறை வட்டமிடுவர். இது விசம் மேலே செல்வதைத் தடுத்து நிறுத்தும். இதனை "தவிண்பிடித்தல்" என்பர். பூசாரியார் என்றழைக்கப்படும் சிவசிதம்பரம், சின்னச் சிதம்பரப்பிள்ளை அண்ணர் (சிதம்பரநாதர்) விசகடி வைத்தியர் கள் இறைபதம் அடைந்து விட்டார்கள். விசகடி வைத்தியர் அருணாசலம் அவர்கள் இறை நம்பிக்கையு டன் இன்றுவரை இதனைக் கைக் கொள்கின்றார். இன்று வைத்திய சாலைகள் வளர்ச்சியடைந்தாலும் இவ்வூர் மக்கள் விசக்கடி வைத்தியத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இவ்வகைச் சிறப்புக்கள் கொண்ட கலவெட்டித்திடல் கிராமத்தோடு கூட்டுக்குடும்பமாக விளங்குவதுதான் புளியம் பொக்கணைக் கிராமமுமாகும். இங்கு புதுமை மிகு புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம் அமைந்துள்ளது. இன்றுவரை அரச மரப்பொந்தில் உறையும் தம்பிரானுக்கு உரிமைவழி ஆண் பூசகர் பால்பழம் வைப் பதனைக் காணலாம்.

கலவெட்டித்திடலிலே விழுதெறியும் ஆலமரச் சோலையின் நடுவிலே வைரவர், சந்நியாசி வைரவர் அருகிலும் எதிரிலும் இருக்க எங்கள் ஆதி கண்ணகி அம்பாளின் அருளாட்சி நடக்கிறது. இக்கோயிலில் பிரதி திங்கட்கிழமை தோறும் பூசை நடைபெறும். வருடாந்தப் பொங்கல் விழா வைகாசி விசாகத்தில் இடம்பெறும்.

பொங்கல் தினத்திற்கு முதல்கிழமை (ஆரம்ப நாள்) "விளக்கு வைத்தல்" எனப்படு கின்றது. விளக்கு வைத்து ஏழு நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசகரினால் மந்திரம் உச்சரிக்கப்பட்டு தினமும் மூன்று வேளைப் பூசை நடைபெறும். எட்டாம் நாள் பொங்கல் நாள். ஆறுகாலப் பூசை இடம்பெறும். ஒவ்வொரு வேளைப் பூசையும் தொடங்குவதற்கு முன் மேளம் முழங்க பூசகர் கோயில் கிணற்றுக்குச் சென்று நீராடிய பின்னரே பூசை செய்வார். ஈர ஆடையுடன் நின்று பூசை செய்வது சிறப்பம்ச மாகும். விளக்குவைத்த நாளிலிருந்து பொங்கல் நாள்வரை பூசகர் கோயிலிலேயே தங்கியிருப்பார். வெளியில் எங்கும் செல்லக் கூடாது. சென்றால் கெட்ட சகுனங்கள் நேரிடலாம் என்பது இவர்களது நம்பிக்கை எட்டு நாட்களும் இப்பகுதிவாழ் அடியவர் களால் அன்னதானம் வழங்கப்படும்.

விளக்கு வைத்த நாளன்று "ஏடு வாங்குதல்" எனும் சிறப்பான ஒரு வைபவம் நடைபெறும். "கோவலர் காதை" என்கின்ற பனை ஓலையில் எழுதப்பட்ட "பா" வடிவிலான பேரேட்டினை இக்கோயிலுக்கு உரித்துடைய ஒருவர் பூசாரியிடமிருந்து சம்பிரதாய முறைப்படி வாங்கிக்கொள்வார். அவரே எட்டு நாட்களும் காப்புப் பாடி ஆரம்பித்து வைப்பார். பின்னர் இருவர் சேர்ந்து இராகத்துடன் பாடுவார்கள். ஒருவர் ஒரு அடியைப் பாட மற்றவர் அதே இராகத்தில் அடுத்த அடியைப் பாடுவார். இவ்வாறாக படிக்கப்பட்டு எட்டாம் நாள் நிறைவுபெறும். ஏடு படிப்பதனைக் கேட்கின் றபோது உண்மையிலேயே பக்திமயம் எங்கும் பொங்கிப் பிரவாகிக்கும். மெய்சிலிர்க்கும் ஐம்புலன்களும் ஒடுங்கும். காப்புச் செய்யுள் பாடும்போது முதியவர்கள் கரம்கூப்பிக் கண்மூடி இறைநினைவில் திளைத்திருப்பர். மெய் எழுத்துக்கள் இல்லாத இவ் ஏட்டினை அனுபவம் வாய்ந்த மெய் அன்பர்கள் கொண்டு கூட்டி பொருளுணர்ந்து பாடும் போது அதன் சுவையோ தனிச்சுவை. இதன் காப்புச்செய்யுள் வருமாறு,

"குணமான கண்ணகியைக் கோவலனார் தான் மணம் செய்ய
மணமாலை தன்னை வகுத்துரைக்க - கணபதி தன்
பாதாரவிந்தம் பலநாளும் நெஞ்சில் உன்னி
காதாரக் கைதொழுவோம் காண்"

இவ் ஏட்டினைப் படிப்பதற்கு அனுப வம் வாய்ந்தவர்கள் அருகி வருவதால் புத்தகமாக வடிவமைக்க முயற்சி எடுக்கப் பட்டுள்ளது.

மேலும், விளக்கு வைத்து நான்காம் நாள் பிரம்புப் பூசை இடம்பெறும். பூசையில் பிரம்புவைத்து பூசைமுடிவில் பூசகர் அதனைக் கையில் தாங்கியபடி பழமையான பாரம்பரிய முறைப்படி மேளம் முழங்க வெள்ளை விரிப்பதும் மேலாப்புப் பிடிப்பதுமாக வர மந்திர உச்சாடனம் செய்தபடி கோயிலை மூன்று முறை வலம் வருவார். கோயிலைச் சுற்றிவரும்போது பிரம்பு பிடித்திருக்கும் பூசகரின் கைகள் நடுநடுங்கும் நாவுலரும் கலையாடுவது போன்ற நிலை தோன்றும். இதனைக் காணும் பக்தர்களின் கண்களில் கண்ணீர் மல்கும். பிரம்பு சுற்றி வந்து பண்ட மெடுக்கச் செல்வதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஒருவரிடம் கையளிக்கப்படும். அவர் அதனை ஏற்று அம்மனை வணங்கிவிட்டு தயாராக நிற்கின்ற மாட்டுவண்டிகளில் மீசாலை, சாவகச்சேரிப் பகுதிகளுக்குச் சென்று அடிய வர்களது காணிக்கைகளையும் ஏற்று பொங் கலன்று திரும்ப ஆலயத்தை நோக்கி வருவர். ஆலயத்திற்குச் சிறிது தூரம் முன்னே நிற்க பண்டப்பொருட்களை அடியவர்களது உதவி யோடு பூசகர் சென்று எடுத்து வருவார். இதனைப் பண்டமெடுத்தல் என்பர். பண்ட மெடுக்கச் செல்லும்போதும் திரும்பிவரும் போதும் எவரும் முன்னே குறுக்கீடாகச் செல்லக்கூடாது. அப்படிச் சென்றால் உடல் சுகக்குறைபாடு ஏற்படும் என்பது முதியவர் களுடைய அசையாத நம்பிக்கை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கு வைத்து ஐந்தாம் நாள் "கல்யாணப் படிப்பு" இடம்பெறும். கண்ண கிக்கு கல்யாண விழாக்கோலம் எடுப்பர். சிறப்பான பூசைகள் நடைபெறும். கோவலர் கண்ணகியின் திருக்கல்யாணக் காட்சியினை நினைவுகூரும் வகையில் அம்மனுக்கு புதுப் பட்டாடை அணிந்து ஆபரணங்கள் சூட்டி பூசகரினால் திருமாங்கல்யம் கட்டப்படும். அடியவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள், பலகாரம் வழங்கப்படும். அன்றைய தினம் பூசையின்பின் ஏடுபடித்தலில் கல்யாணப் படிப்பு இடம்பெறும். கல்யாணப் படிப் பினைக் கேட்பதற்கு ஊரிலுள்ள முதியவர்கள் அனைவரும் ஆவலுடன் ஆலயத்தில் காத்திருப்பர்.

எட்டாம் நாள் பொங்கல் விழா. அடுக்கடுக்காகப் புதுப்பானைகளில் பொங்கு வர். காவடிகள் ஆடிவர கற்பூரச் சட்டிகள், பாற்செம்புகள் பெண் அடியவர்களால் நேர்த்திக்காக எடுக்கப்படும். அருகிலுள்ள கற்பக விநாயகர் ஆலயமே நேர்த்திக்கடன் செய்வோரின் ஆரம்ப இடமாக அமைந் திருக்கும்.

இக்கோயிலில் குறிப்பிடத்தக்க பாரம் பரிய நிகழ்வு பலியிடல் ஆகும். வருடந் தோறும் பொங்கல் நிறைவுபெற்ற மறுதினம் அதிகாலைப் பொழுதில் இவ் ஆலயத்தில் அமைந்துள்ள வைரவர், சந்நியாசி வைர வருக்கு கறுப்பு, வெள்ளை ஆட்டுக் கடாக்கள் பலியிடப்படுகிறது. இற்றைக்கு 400 வருடங் களுக்கு முன்னர் கொழுந்துப்புலவு எனும் இடத்திலே கண்ணகி அம்பாளைக் குலதெய்வ மாக வழிபட்ட பரம்பரையினர் சந்நியாசி ஒருவரிடமிருந்து பெறப்பட்ட ஏட்டின் பிரகாரம் பலியிடல் மேற்கொள்ளப்படுவ தாகக் கூறப்படுகிறது. பலியிடல் தொன்று தொட்டு கைக்கொள்ளப்பட்டு வருகிறது. சமகாலத்திற்கு இது பொருத்தமில்லை யாயினும் பாரம்பரிய வழிபாட்டு முறைகளில் இது தவிர்க்கமுடியாத தொன்றாகிவிட்டது. இதனைக் கைக்கொள்ளாதுவிடின் இவ்வூ ருக்கும் குடிமக்களுக்கும் இடர்கள் ஏற்பட லாம் என்ற நம்பிக்கை இவர்களிடம் உண்டு. இதனால் இதனை இன்றுவரை கடைப்பிடித்து வருகிறார்கள். சந்நியாசியிடமிருந்து பெறப் பட்ட அருமருந்தன்ன ஏட்டில் பலியிடல் முறைமைகள், பூசை வழிபாட்டிற்குரிய மந்திரங்கள், விசகடி மந்திரங்கள் முறைகள் மேலும் பக்கவாதம், மூட்டுவாதம் சிறு பிள்ளைகளுக்கான சளிஅடைப்பு மூலிகை மருத்துவங்கள் போன்றவை இவ் ஏட்டில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

பலியிடலின் பின் அம்மனது பூதகணங்களை நாட்டில் கொடுமைகள் இல்லாதிருக்கவும் ஆடுமாடுகள் போன்ற செல்வங்கள் நோய் நொடியின்றி உலாவவும் "எட்டத்தில் போங்கள்" என்ற நோக்கில் வழிவெட்டி வழிவிடப்படுகிறது. பொங்கல் நிறைவடைந்து தொடர்ந்துவரும் திங்கட் கிழமை வைரவருக்கு மடை பரவுதல் இடம் பெறும். அன்றைய தினம் அருள்மிகு வற்றாப் பளை கண்ணகி அம்பாள் ஆலய ஆண்டு உற்சவப் பொங்கல் நடைபெறுவது குறிப் பிடத்தக்கது.

அம்மனின் அற்புதங்களும் இங்கு நிகழ்வதுண்டு. இக்கோயிலின் முன்னைநாள் பூசகர் திருவாளர் ந. பொன்னம்பலம் அவர்கள் பூசகராக இருந்தபோது ஓர் அற்புதம் நிகழ்ந் தது. பூசகர் இவ்வுலகை நீத்தபோது அடுத்து வந்த திங்கட்கிழமை பதில் பூசகர் பூசை செய்வதற்காகக் கதவைத் திறந்தபோது புத்தம் புதிய பூக்கள் பல நிறங்களில் கோயிலின் உள்ளே சிதறிக் கிடந்ததைக் கண்டு அதிசயித் தார்கள். இத்துணைப்புதுமை மிகு அம்மன் ஆலயத்தின் முதல் பூசகர் வேதாரணிய முதலியாரின் மகன் சின்னத்தம்பி ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரைத்தொடர்ந்து வே.அருணாசலம், வே.வைத்திலிங்கம் (கிராம தலைவன்) விதானையார் திருநாவுக்கரசு, வை.நமசிவாயம், விதானையார் ந. பொன்னம்பலம், த.துரைசிங்கம், சி. சிவராசா, சி. சிவசிதம்பரம் ஆகியோர் பூசகராகி சிறப்படைகின்றனர். இன்று திரு. சி. விக்கினேஸ்வரன் அவர்கள் பூசைசெய்து வருகின்றார்.

இவ் ஆலயத்தை வழிபட்ட ஒரு பகுதியினரால் 1949 இல் புதிய கண்ணகியம்மன் ஆலயம் கலவெட்டித்திடலில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் முதற் பூசகராக திருவாளர் அருணாசலம் விளங்குகிறார். தற்காலத்தில் ஒரேநாளில் இரு கோயில்களிலும் விளக்குவைத்து பொங்கல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. பக்த அடியார்கள் இரு கோயில்களிலும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி வருகின்றனர். புதிய கண்ணகி அம்மன் கோயிலும் இன்று பிரசித்தி பெற்ற ஓர் ஆலயமாகத் திகழ்கின்றது.

அல்லல் நீங்கி நல் வாழ்வு சிறந்திடவே
அம்மன் அருள் எங்கும் பாலிக்குக!

◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் துளிர்விடும் கொழுந்துபுலவு கிராமம்

திரு. க. வைரமுத்து
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.

கிளிநொச்சி மாவட்டத்தின் கிழக்கு எல்லையான பரந்தன் முல்லைத்தீவு வீதியில் 15ஆம் மைல் கல்லில் அமைந்துள்ள தேராவில் குளத்திலிருந்து வடக்கு நோக்கி 2 கி. மீற்றர் தொலைவில் கொழுந்துபுலவு என்னும் கிராமம் அமைந்துள்ளது. இது கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவின் பிரமந்தனாறு கிராம அலுவலர் பிரிவில் உள்ளடங்கும் கிராமங்களில் இதுவும் ஒன்றாகும்.

இக்கிராமம் கி. பி. 16ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் கரைச்சிப் பிரதேசத்தில் ஓர் தனியான அரச அலகாகவும், கூடிய சனத் தொகையும் விவசாயம், சிறுதானியப் பயிர்ச் செய்கை, மந்தை வளர்ப்பு ஆகியவற்றில் முதன்மையிடத்தையும் வகித்த கிராமமாகும். கரைச்சிப் பிரதேசத்தில் ஏனைய கிராமங்களை விட பனைவளம் மிக்கதும் இக்கிராமமே யெனப் பல வரலாறுகள் கூறுகின்றன.

அக்காலப் பகுதியில் இக்கிராமத்தில் உடையாவெள், வவுனியவெள், சைவவெள் என மூன்று பகுதியினர் குலசேகரமுதலியார், நீதிநாயக முதலியார் நல்ல மாப்பாண முதலியார் ஆகியோர் முறையே அவ் வவ்வகுதியினரைத் தலைமைதாங்கி வழி நடாத்திவந்தனர். உடையாவெள் வகுதியினர் ஆதி கண்ணகை அம்மன் வழிபாட்டினையும், வவுனியவெள் வகுதியினர் ஆதியில் சிவன் வழிபாட்டினையும், சைவவெள் வகுதியினர் கற்பகப் பிள்ளையார் வழிபாட்டினையும், மேற்கொள்பவர்களாக விளங்கினர். இப்பகுதி மக்கள் கொக்குமோட்டைக்குளம், நெல் வெளிக்குளம் பகுதிகளில் பெரும் எடுப்பிலான விவசாயம் சிறுதானியப் பயிர்ச்செய்கை மந்தைவளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபட்டு மிகவும் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்துள் ளனர். அக்காலத்தில் மாதம் மூன்று மாரி பெய்ததாகக் கூறப்படுகின்றது.

கதிர்காம யாத்திரை மேற்கொள் பவர்கள் ஆனையிறவு, திமிலமடம், பன்றி மோட்டை, மடுக்கரை, கண்டாவளை ஆகிய கிராமங்களூடாக வருகைதந்து கொழுந்துப் புலவு கிராமத்தில் இரண்டொரு நாட்கள் தங்கி யாசகம் செய்து மீளவும் தங்கள் யாத்திரையைத் தொடர்ந்து வற்றாப்பளை யைச் சென்றடைந்து அம்பாளின் வைகாசிப் பொங்கல் விழா நிறைவுடன் கதிர்காமம் நோக்கிப் புறப்படுவர்.

மேற்கூறிய அக்கால மண்பாதையில் குறிப்பிட்ட தூரங்களுக்கொரு சுமைதாங்கி, குடி நீர்க்கிணறு, பொழிகல்லிலான தண்ணீர்த் தொட்டி, ஆவுரைஞ்சிக் கல்லு ஆகியன அக்கால வளம் படைத்தவர்களினால் அமைக்கப்பட்டிருந்தது. தலையில் சுமந்து வரும்சுமைகளை அச்சுமைதாங்கிகளில் இறக்கி வைத்து தண்ணீர் குடித்து ஆறிய பின்னர் மீளவும் சுமைகளைத் தலையில் எடுத்துச்செல்ல இவை மிக உதவியாக அமைந்திருந்தது. எனது சிறுபராயத்தில் தட்டுவன்கொட்டி, மடுக்கரை, கண்டாவளை, கலவெட்டித்திடல், ஈச்சங்காடு, கரியல்வயல் ஆகிய இடங்களில் இச்சுமைதாங்கிகளையும் குடிநீர்க் கிணறுகளையும் தொட்டி, ஆவுரைஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கல்லு ஆகியவையைக் காணக்கூடியதாக விருந்தது.

அக்காலத்தில் ஓர் இறைபக்தன் (சந்நியாசி, சித்தர்) கதிர்காம யாத்திரையை மேற்கொண்டு இப்பகுதிக் கிராமங்களில் யாசகம் செய்து சிலதினங்கள் அக்கிராமங்களில் தங்கி கொழுந்துப்புலவு சென்றடைந்ததாகவும் தன்னை நன்றாக உபசரித்த கிராமங்களை வாழ்த்திப் பாடியதாகவும் தன்னைப் புறக்கணித்த கிராமங்களை அழிந்துபோக வேண்டுமென்று சாபமிட்டதாகவும் அவ்வாறு அக்கிராமங்கள் எழுச்சி பெறவில்லையெனவும் ஓர் கர்ணபரம்பரைக் கதையுள்ளது.

கண்டாவளை - பத்தன்மோட்டை கிராமத்தை பத்தன் மோட்டையில் புல்லு வெட்டி வைத்தாலும் நெல்லாக வரவேண்டுமென்று வாழ்த்திப்பாடியதால் அவ்விடம் விளைச்சல் மிக்க இடமாகத் திகழ்வதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு கொழுந்துப் புலவைச் சென்றடைந்த சந்நியாசி அக்கிராமத்தில் மதிப்போடு அரச சேவையிலிருந்த உடையாவெள் பகுதியினர் தலைவர் குலசேகரமுதலியார் வீட்டில் தங்கியிருந்தபோது, இரவு சிவபூசை செய்வதற்கு வெளிச்சம் தேவைப்பட தனது விபூதி பல்லுவத்திலிருந்து சிறிய கல்லொன்றை (நாகரத்தினம்) வெளியிலெடுத்து வைத்த போது அது மிகப் பிரகாசமாக வெளிச்சம் கொடுத்ததாகவும் தனது வைத்திய மாந்திரீக ஏடுகளை வைத்துச் சிவபூசை மேற்கொண்ட போது முதலியாரின் சேவகர்கள் இதனைக் கண்ணுற்று முதலியாருக்குத் தெரியப் படுத்தினர்.

அன்றிரவு அவர் திடீரென இறக்க நேரிட்டபோது அவரது குலதெய்வமான வயிரவரை நினைத்து "வயிரவா நீ நில் நான் போகின்றேன்" எனக் கூறிக் கண்மூடியதாக எம்முன்னோர்களினால் கூறப்பெற்றது.

அதன்பின் நாளாந்தம் மக்கள் வகை தொகையின்றி இறக்கத் தொடங்கவே இதனைச் சகிக்கமுடியாத மக்கள் தங்களது குலதெய்வங்களான கண்ணகை அம்மன், சிவன், கற்பகப் பிள்ளையார் ஆகிய தெய்வங்களையும் தூக்கிக்கொண்டு தங்களது மந்தைகளையும் சாய்த்துக்கொண்டு மேற்கு நோக்கி 7 மைல் தூரம் வந்து நெத்தலி ஆற்றின் கிளைகளின் இருமருங்கும் காடுகளைத் துப்புரவு செய்து வீடுகளை அமைத்து கலவெட்டித்திடல், புளியம்பொக்கணை என இரு கிராமங்களை உருவாக்கி புளியம் பொக்கணையில் சிவனையும் கற்பகப் பிள்ளையாரையும் சிறிய தூர இடைவெளியில் வைத்தும் கண்ணகை அம்மனையும் சந்நியாசி வைரவரையும் கலவெட்டித்திடலில் ஓர் ஆல மரத்தின் கீழ் வைத்தும் அவ்வவ் பகுதியினர் வணங்கி வரலாயினர்.

காலக் கிரமத்தில் சைவவெள் பகுதியினர் தங்களது கற்பகப் பிள்ளையாரையும் ஐம்பொன்னிலான நாகபடத்தையும் ஆதிகண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் வைத்து வணங்கி வருகின்றனர்.

கொழுந்துப்புலவுக் கிராமம் காலப் போக்கில் அழிவடைந்து பெரும் காடு எடுத்து காட்டு மிருகங்கள் யானை, புலி, கரடி, மான் மரை, வாழும் இடமாக மாறியது. கலவெட்டித்திடல், புளியம்பொக்கணையிலிருந்து சென்று கொக்குமோட்டை நெல்வெளிக் குளங்களில் ஏற்றுப் போட்டிருந்து தங்கி வேட்டையாடிவர பலர்செல்வர். சிவன் கோவிலின் எருது வாகனம் அங்குள்ள பூவரசமரம் ஒன்றில் வைத்திருப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதாக முன்னோர் கூறுவதை நான் கேட்டிருக்கின்றேன்.

எமது முன்னோர் வாழ்ந்த கொழுந்துப் புலவு ஆதிக்கிராமத்தை மீளவும் எழுச்சிபெறச் செய்யவேண்டுமென்ற அவா எம்பலரது எண்ணங்களில் நீண்டகாலமாக இருந்து வந்தது. குறிப்பாக முன்னாள் கிராம சேவையாளர் திரு. S.S. சின்னத்தம்பி அதற்கு முன்னிருந்த கந்தையா விதானையார் ஆகியோர் அடிக்கடி கூறுவர்.

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் பல பாடசாலையில் தங்கவைக்கப்பெற்று அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் பராமரிக்கப்பெற்று வந்தநிலையில் இவர்களை தற்காலிக வீடமைத்துக் குடியேற்றும் நடவடிக்கைக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கொழுந்துப் புலவு ஆதிக்கிராமத்தின் வரலாறு, கொக்குமோட்டை, நெல்வெளிக்குளம் ஆகியவற்றின் பயன்பாடு ஆகியவற்றினை எடுத்து விளக்கிக் கூறியபோது தர்மபுர மகா வித்தியாலயம், கண்டாவளை மகா வித்தியாலயம், கலவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலயம் முருகானந்த மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலுள்ள 500 குடும்பங்களை அங்கு குடியேற்றுவதாகவும் இதன் பொறுப்பைக் கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்வதாகவும் இச் செயற்பாட்டை இளைப்பாறிய சின்னத்தம்பி விதானையாரர் மேற்கொள்ளுவதாகவும் தீர்மானிக்கப்பெற்றது.

இதற்கமைய அப்பிரதேசம் சின்னத்தம்பி விதானையாரின் நெறிப்படுத்தலில் ஒரு ஏக்கர் காணி வீதம் அளக்கப்பெற்று பொதுத் தேவைகள், பாடசாலை, ஆலயங்களுக்கெனக் காணிகள் ஒதுக்கப்பெற்று, பரந்தன்-முல்லைத்தீவு வீதி தேராவிற் குளத்திலிருந்து வந்த அக்கால மண்பாதையை இனங்கண்டு புனரமைத்து 495 குடும்பங்கள் குடியேற்றம் செய்யப்பெற்றது.

அக்காலத்தில் சிவன் ஆலயம் இருந்ததாக கருதப்படும் இடத்தில் வல்லிபுரக் கோவிலில் வைத்து வழிபட்டு வந்த நாகலிங்கம் ஒன்றை பெற்றுவந்து ஆலயம் அமைத்து பாடசாலை, சுகாதார நிலையம், பொது மண்டபம் ஆகியன அமைத்து குடியேற்றத் திறப்பு விழா அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் (கண்டாவளை) தொண்டு நிறுவன பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள் என பலரும் கலந்து வெகு சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழா நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அன்று சந்தியாசி இட்ட சாபம் பலிப்பதுபோல் திடீரென முகில் கூட்டம் கூடி பனிக்கட்டி மழை பொழிந்து பலருக்கு காயம் ஏற்படுத்தியது. பாதிப்படைந்தவர்களில் நானும் ஒருவன்.

யாழ். குடாநாடு சுமூகநிலை ஏற்பட்டு இங்கு வாழ்ந்தவர்கள் பலர் இவ்விடத்தைக் கைவிட்டு தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்றுவிட்டனர். தற்போது 49 குடும்பங்கள் மட்டுமே வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர். தேராவில் குளத்தின் கீழ் உள்ள நெல் வெளிக்குளத்தை புனரமைத்து இவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதன் மூலம் காணியற்றவர்களுக்கு விடுபட்ட காணிகளை வழங்குவதன் மூலமும் இக்கிராமத்தை ஓர் செழிப்புள்ள கிராமமாக்க முடியுமெனக் கருதப்படுகின்றது.

◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைபேசிக் காதல்

க. விஜயந்தன்
உபதபாலதிபர், தட்டுவன்கொட்டி,
(நிர்வாக உறுப்பினர், கலாசாரப் பேரவை)

பாருங்கள் எம்மவரே !
பத்து நொடியில் வந்த
பார் அறிந்த கைபேசிக் காதலன்
பண்ணி விட்ட வேலைகளை...
பத்துமாதம் சுமந்து பெற்ற
பாவம் செய்த தாயங்கே
பதறிக் கொண்டு மூலையிலே...

பார்த்தால் பால்வடியும்
பக்குவமான மனதுடைய
பாசத்தந்தை ஏதுமறியாத் தவிக்க
பத்து நொடியில் வந்த
பாழ்பட்ட கைபேசிக் காதல்
பக்குவமாய் கொண்டு சென்று
பத்தினிப் பெண்ணவளை
பார் அறியப் பார்த்திடுவேன்.
பகிடியல்ல உண்மை அன்பே - என்று
பல வார்த்தை கொண்டு
பக்குவமாய் கவர்ந்திடுவான்.
பைங்கிளியாள் தன் மனதை,
பசி தீர்க்கும் வார்த்தைகளால்
பல பேசி அணைத்தவளை,
பாலுறவில் இணைத்துவிட்டுப்
பலபேர் பார்க்க
பரிதவிக்க விட்டுவிட்டான்.
பத்து நொடியில் வந்த
பார் அறிந்த கைபேசிப்
பங்காளி....

பலர் அறியக் கல்வியிலே சிறந்து
பல கலைகளில் மிகுந்து
பல சரித்திரம் இங்கே
படைத்திட வேண்டிய
பாரதி எழுதிய புதுமைப்பெண்
பத்து நொடியில் வந்த
பாசக் காதலால்
பாலூட்டி வளர்த்தவளும்
பாசத்தோடு தோள் சுமந்தவனும்
பட்டினியால் சாகவிட்டுப்
பறந்து சென்ற
கதைகள் இங்கு தொடர்கிறது.

◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர்

## தளபாட விற்பனை நிலையம்

A-9 வீதி, கிளிநொச்சி. (நீதிமன்றம் முன்பாக)

# DAMRO Furniture

South Asia's largest Furniture Manufacturer

## Piyestra

*Affordable Furniture For Your Home & Office*

தளபாடங்களின்
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட
ஏக விநியோகத்தர்கள்



- அலுவலக மற்றும் வீட்டுப் பாவனைத் தளபாடங்கள்,
- இலத்திரனியல் உபகரணங்கள்,
- மரத்தளபாடங்கள்



இரசனைக்கு ஏற்றதான தரமான நியாயமானதும்
குறைந்த விலைக்கும் பெற்றுக்கொள்ளும் ஒரே காட்சி அறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகீரதன்

## அரிசி ஆலை

உரிமையாளர்:
ப.விமலாதேவி



சுத்தமானதும், தரமானதுமான
சிவப்பு நாடு, சிவப்புப்பச்சை அரிசிகளை
சில்லறையாகவும், மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஒரே இடம்.

பகீரதன்
அரிசி ஆலை

சந்தையடி, கண்டாவளை.
தொ.பெ: 021 320 0009


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 116 ஆவது ஆண்டு நிறைவைக் காணும் கிளி/காண்டாவளை மகா வித்தியாலயம்

திருமதி லதீஸ்வரி பத்மாகரன்
ஆசிரியர், கிளி/கண்டாவளை ம.வி.

ஆலயங்களும் பாடசாலைகளும் காலம் செல்லச் செல்லப் புனிதம் அடை கின்றன. பல ஆயிரக்கணக்கான சமூக உறுப்பினர்களை உருவாக்குகின்ற பாட சாலைகள் அச்சமூகத்தால் போற்றப்பட வேண்டியனவே. இந்தவகையில் பாட சாலைச் சமூகத்தின் நிகழ்கால, எதிர்கால வாழ்வியற் தேவைகளை நிறைவுசெய்யவல்ல செயற்பாடுகளைக் கொண்ட பாடசாலை "சக்தி மிகு பாடசாலை" (Dynamic School) எனப்படுகிறது. தனது கல்விச் சமூகத்தின் பொருளாதார அறிவியல், மானிடப் பண்பி யல், ஆன்மீகம் சார்ந்த தேவைகளை நிறைவு செய்யக்கூடிய திறன்களை உருவாக்கும் விதத்தில் பாடசாலையும், கலாசாரமும், கல்விப் பாரம்பரியமும் அமைதல் வேண்டும். இத்தகைய அரிய பணியைச் செய்வதில் அதன் உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட மனித வளத்தினூடாக மனித வளத்தினை அபிவி ருத்தி செய்கின்ற சக்திமிகு களநிலைச் செயற் பாட்டிலேயே பாடசாலையின் உயிர்ப்பு நிலையும் அதன் முன்னேற்றமும் தங்கியுள்ளது எனலாம்.

இத்தகு ஒரு சூழலை உருவாக்கிக் கொள்வதிலே கிளி/காண்டாவளை மகா வித்தி யாலயமும் அன்று தொட்டு இன்றுவரை தனது காலச்சுவட்டில் நூறு ஆண்டு கடந்த பழைமையை நிலைநிறுத்தியுள்ளது. கிளி நொச்சி மாவட்டத்தில் புகழ்பூத்த பல கிராமங்களுள்ளும் மிகப்புராதன கிராமமாக விளங்கும் கண்டாவளை, கண்டவர்களை வளையவைக்கும் கண்டாவளை மண்ணையும் செந்நெல் அரிசிச் சோற்றுடன் கூடிய இன்னோரன்ன வளங்களையும் தன்னகத்தே கொண்டு அழியாச் சிறப்புடன் விளங்கு கின்றது. இத்தகைய எழில்கொஞ்சும் இயற்கை வளங்களுக்கு மத்தியிலே சுமார் 9 1/2 ஏக்கர் நிலப்பரப்பு விஸ்தீரணத்தில் கிளி/காண்டா வளை மகா வித்தியாலயம் இவ்வூரின் பிரதான வீதியருகே வானுற வளர்ந்து நிற்கும் தென்னங் கீற்றுகளுக்கிடையிலும் நூறு ஆண்டு பழை மை வாய்ந்த நிழல்தரு விருட்சங்களுக் கிடை யிலும் பச்சைக்கம்பளம் விரித்தாற் போன்ற நிலப்பரப்பிலும் இயற்கை வனப்பு மிக்க பாடசாலையாகக் காட்சி தருகிறது. கடந்து வந்த காலங்கள் சாதனைகளில் மேலோங்கியும் வேதனைகளில் துவண்டு விடாமலும் நாட்டின் அசாதாரண சூழலிலும் கூட வலு விழந்து போகாமல் இன்று 05.10.2012 இல் தனது 116 ஆவது ஆண்டை நிறைவுசெய்து நூற்றிப்பதினேழாவது ஆண்டிலே காலடி எடுத்துவைக்கின்றது என்றால் அதனை யாரும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

1896.10.05 இல் திரு. எஸ். ஆறுமுகம் எனும் பெரியாரால் "ஆறுமுக வித்தியா சாலை" எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1925.09.01 இல் அரசினால் பொறுப்பேற்கப்பட்டு திரு.எஸ்.நல்லதம்பி அதிபர் அவர்களின் தலைமையில் "பரமேஸ் வரா வித்தியாலயம்" என்ற பெயருடன் இயங்கிவந்தது. பின்னர் நாளடைவில் மாணவர் தொகை அதிகரிக்க அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாக இருந்து 1981 ஆம் ஆண்டு காலப்பகுதியில் க.பொ.த. சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் வரை வகுப்புக்களைக் கொண்ட அரசினர் வித்தியாலயமாக விளங்கியது. இவ்வாறு காலவோட்டத்தில் தரமுயர்ந்து வந்த இப்பாடசாலை தொடர்ந்து 1990 வரை சாதாரணதரப் பாடசாலையாக விளங்கி உயர்தரம் கற்கத் தகுதிவாய்ந்த மாணவர்களை உருவாக்கி வந்தது. எனினும் மாணவர்கள் உள்ளூரில் உயர்கல்வி கற்க வாய்ப்பின்றி நகரப்புறங்களை நாடி தமது க.பொ.த. உயர்தரக் கல்வியைப் பலசெலவுகளுக்கு மத்தியில் பெற்றுவந்தனர். இத்தகு குறையைக் கூர்ந்து அவதானித்த அப்போதைய அதிபர் திரு.க. வைரமுத்து அவர்கள் இப்பாடசாலையில் க.பொ.த உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு முழுமூச்சாகப் பாடுபட்டார். இதன்பிரகாரம் 1992 ஆம் ஆண்டிலே க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு இருமாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பும் ஏற்பட்டதைத் தொடர்ந்து இப்பாடசாலை கிளி/கண்டாவளை மகா வித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டு இன்றுவரை 1C தரப் பாடசாலையாக விளங்குகிறது.

இவ்வாறாக, இப்பாடசாலை தனது வளர்ச்சியில் வீறுநடைபோட்டு வந்த வேளையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் இப்பாடசாலை கல்லூரியாக எழுச்சி பெறுவதற்குத் தடையாக அமைந்தது. எனினும் இப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என எல்லோரது முயற்சியாலும் நாட்டில் ஏற்பட்ட பலத்த பொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை என்பவற்றுக்கு மத்தியிலும் 1996.10.05ஆம் நாளின் பாடசாலை நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நூற்றாண்டு விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பரிசளிப்பு நிகழ்வு, கலைவிழா என முழுநாள் நிகழ்வாக இடம்பெற்ற இவ்விழாவிலே அப்போதைய அதிபர் திரு. சி. மாணிக்கராசா அவர்களால் "கண்டாவளை வரலாறு" எனும் வரலாற்று நூல் நூற்றாண்டுச் சிறப்பு மலராக வெளியிடப்பட்டது. இக்கிராமத்தின் தொன்மையையும் பாடசாலையின் வரலாறுகளையும் எடுத்தியம்பும் முதல் நூலாக அரியதொரு பொக்கிஷமாக இந்நூல் விளங்கியது. பாடசாலையின் வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையாக நூற்றாண்டு நினைவை யொட்டிய நூற்றாண்டு மண்டபமும், அதிபர் ஆசிரியர்களின் நினைவாகக் குருபக்தியை மேம்படுத்த அமைக்கப்பட்ட நினைவுத் தூபியும் எனப் பாடசாலையின் வரலாற்றில் ஏற்பட்ட பொற்காலம் என்றே கூறலாம்.

இங்ஙனமாக பல தசாப்தங்களாகவே இப்பாடசாலையிலிருந்து மாணவர்கள் தேசிய மட்ட விளையாட்டுக்களிலும் தமிழ்த்தினப் போட்டிகளிலும் மற்றும் கலைநிகழ்வுகளிலுமெனப் பங்குபற்றிச் சிறப்புக்களைப் பெற்று வந்தனர். அதுமட்டுமின்றி பொதுப்பரீட்சைகளிலும் நூறுவீத சித்தியைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்ததோடு மட்டுமல்லாமல் பல்கலைக்கழகங்களுக்கும் சென்று உயர்பட்டங்களைப் பெற்றனர். எனினும் நாட்டில் அடிக்கடி ஏற்பட்ட போரியல் சூழல் மாணவர்களின் கல்வியைச் சிதறடிக்கச் செய்தது. மாறி மாறி ஏற்பட்ட இடப்பெயர்வுகளுக்கு மத்தியில் மாணவர்கள் தமது அடிப்படைக் கல்விக்காகப் போராட வேண்டியவர்களாக இருந்தார்கள். கல்வி வாய்ப்பின்மைகளும் வசதியீனங்களும் தொடரும் சூழ்நிலையில் மாணவர்களிடம் ஏற்படும் அதிருப்தி, விரக்தி, வெறுப்பு என்பன சமூகத்தில் எதிர்மறையான பின்விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்றவகையில் இளைய தலைமுறை இடைவிலகலுக்கு உள்ளாகி புலம்பெயர்தலை எதிர்கொண்டது. இதன்விளைவாகக் காலப்போக்கில் மாணவர்களின் தொகை பாடசாலையில் வீழ்ச்சி கண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் மக்களின் இடப்பெயர்வு மாறி மாறி இடம்பெற்றவேளையிலே பாடசாலை மட்டும் இயன்றவரை இயங்கு நிலையிலேயே காணப்பட்டது. அதுமட்டு மின்றி இடம்பெயர்ந்துவரும் மக்களுக்குப் புகலிடமாகக் கூட அமைந்தது. 2007, 2008 ஆம் ஆண்டுகளில் நாட்டின் பலபாகங்களிலு மென யாழ்ப்பாணம், மன்னார் போன்ற இடங்களிலுள்ள மக்களின் புகலிடமாக மைதானச் சூழலும் மாணவர்களின் கல்விக் கூடமாக மரநிழல்களும் என இப்பாட சாலையில் இடையறாத கல்விச்செயற்பாடு நிகழ்ந்து வந்தது. 2008 ஆம் ஆண்டிலே யாழ்/ செம்பியன்பற்று சி.சி.த.க.பாடசாலை, கிளி/மாசார் அ.த.க.பாடசாலை, கிளி/கண்டா வளை மகா வித்தியாலயம் என முக்கூட்டுப் பாடசாலையாக இப்பாடசாலை இணைப்புப் பெற்று விளங்கியது.

பாடசாலை வளாகம் எங்கும் வெள்ளைக்கொக்குகளாய் வலம்வந்த பள்ளிச் சிறார்களின் எதிர்காலக்கனவு பொய்த்துப் போகவே திடீரென 2009 இல் ஏற்பட்ட ஒட்டுமொத்த இடப்பெயர்வு உயிர்களையும் உடமைகளையும் காவுகொண்டது. ஊரிழந்து, உறவிழந்து, உயிரிழந்து, உடமைகளை இழந்து கூடற்ற குருவிகளாய் மரநிழல்களிலும் வீதியோரங்களிலும் பல கிராமங்கள் தாண்டி வாழநேரிட்டபோது முதுபெரும் சொத்தாம் எம் பாடசாலையின் ஆவணங்களும் அழிவுக்கு உள்ளாகிப் பாடசாலையும் கட்டட ங்களும் சிதைவுண்டு அழிவுற்றுக்கிடந்தது. ஒரு ஆண்டு இடைவெளிக்குள் எத்தனை மாற்றங்கள்! வன்னிப் பெருநிலப் பரப் பிலிருந்து இறந்தவர்கள்போக எஞ்சியோர் வவுனியா நலன்புரிநிலையங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிப் பதற்குக் கல்வி என்ற திறவுகோலே மிகப் பிரதானமானது என்பதறிந்து புகலிடங் களிலும் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டன. இதன் பிரகாரம் அந்நலன்புரி நிலையங்களில் கிளி/கண்டாவளை மகா வித்தியாலயமும் காப்பாற்றப்பட்ட சில ஆவணங்களைக் கொண்டு இயங்குவதில் புத்துயிர்ப்புப் பெற்றது. நலன்புரி நிலையங் களில் தங்கவைக்கப்பட்டவாறே மாணவர்கள் பாடசாலையின் பெயரால் பரீட்சைகளை எழுதும் சூழல் ஏற்படுத்தப்பட்டது.

மீண்டும் 03.05.2010 இல் மீள்குடி யேற்றத்தின் பொருட்டு பாடசாலை மீண்டும் தனது சொந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட இருந்தது. இழப்புக்கள் என்ற வடுவைவிட்டு நீங்காத நெஞ்சத்தவராய் மக்களும் மாணவர் களும் அதிகாரிகளுமென எல்லோருமே ஏதிலிகளாய் நாதியற்று நின்றவேளை அழிபாடுகளுக்கு உள்ளான இப்பாடசாலை யைப் பொறுப்பேற்பதில் சிரமங்கள் காணப்படவே சொல்லொணாத் துயரங்கள் மத்தியிலும் மனத்தைரியத்தை வரவழைத்துத் தனக்கு அறிவூட்டிய பாடசாலையைத் தத்தெடுக்கப் புதிய அதிபர் நியமனத்துடன் முன்வந்தார், இன்றைய அதிபர் திருமதி கோமதி மதியழகன் அவர்கள். பெண்ணாக இருந்து பூமித்தாயின் பொறுமைபோன்று பாடசாலையின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் படிப்படியான நுணுக்கங்களைக் கையாண்டு பாடசாலையைப் பழைமைநிலைக்குக் கொண்டுவருவதில் பௌதீகவளத்திலும் ஆளணிவளத்திலும் அதீத அக்கறை செலுத்தி வந்தார்.

இதன்விளைவாக மீள்குடியேற்றத் தின் பிற்பாடு ஆரம்பத்தில் 13 பிள்ளைகளுட னும் 05 ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப் பட்ட இப்பாடசாலை இன்று 215 மாணவர் களையும், 21ஆசிரியர்களையும் கொண்டு காணப்படுகிறது. இடப்பெயர்வு நிலமையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரியுண்டுபோய் பச்சயமற்றுக்கிடந்த இப் பாடசாலையிலே ஆரம்பத்தில் மாணவர்கள் மனவடுக்கள் நீங்காதவர்களாக உளச்சுமையுடன் காணப்பட்டார்கள். இவர்களின் உளக் குறையைப்போக்கும் பொருட்டும் உடல் வலுவைக் கூட்டும் பொருட்டும் இல்ல மெய் வல்லுநர் விளையாட்டுப்போட்டி நடாத்தப் பட்டது. இதில் மாணவர்களின் உற்சாகம் தூண்டப்பட்டதோடு பெற்றோர், ஆசிரியர், பழையமாணவர், நலன்விரும்பிகள் என எல்லோரது கூட்டுறவும் பலப்படுத்தப் பட்டது.

இதற்கமைவாகப் பச்சயமற்றுக் கிடந்த பாடசாலையின் இயற்கை வளங்கள் மீண்டும் உயிர்ப்புப் பெறும்வகையில் பாடசாலை வேலி உட்படப் பயன்தருமரங் கள் பாதுகாக்கப்பட்டன. யுனிசெப், குழந்தைகள் நிதியம் போன்ற நிறுவனங்களின் உதவி பெறப்பட்டு ஆரம்பப்பிரிவு கட்டட நிர்மாண வேலைகள், பூங்கா புனரமைப்பு, நீர்த்தாங்கி வசதி என்பன சீர்செய்யப்பட்டன. மேலும் இந்திய உதவியுடன் ஏனைய கட்டட வேலைகள் புனரமைக்கப்பட்டன.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைப் பொறுத்தவரை 2011இல் அதிகளவிலான புகுமுகமாணவர் வருகை, தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் ஒரு மாணவன் சித்தி, க.பொ.த. சாதாரணதரத்தில் 85% சித்தி, க.பொ.த. உயர்தரத்தில் இருமாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு என கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்பித்தல் செயற் பாடுகளைப் பொறுத்தவரை உள்ளூரிலிருந்து ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க வெளி மாவட்டத்திலிருந்தான வருகை மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாகாணமட்டத்தில் வெற்றி எனப் பாடசாலை முன்னேற்றத்தை நோக்கி மீண்டெழும் நிலையே காணப்பட்டுள்ளது. இடப் பெயர்வுக்கு முன்னராகக் கல்வி அமைச்சினால் 2007 இல் "தூய்மையான பாடசாலை" எனச் சான்றிதழ் பெற்றமைக்கு ஏற்ப இந்த ஆண்டிலும் மத்திய சுற்றாடல் துறை அமைச்சின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் கோட்ட மட்டத்தில் சுத்தத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலையாகக் காணப்படுகிறது. மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கில் மாற்றம் காணும் நோக்கில் பாடசாலையின் தூரதர்சன நோக்கும், பணிக்கூற்றும் செவ்வனே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆசிரியர்களின் வாண்மைச் செயற்பாடுகளில் உயர் கல்வி நாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது. குறிப்பிட்ட வீதத்தினர் பட்டப்படிப்புக்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஆண்டில் அகில இலங்கைச் சுற்றுலா ஒன்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் என அதிபரின் மேற்பார்வையில் வழிநடாத்தப்பட்டுள்ளது.

இங்ஙனமாகப் பாடசாலையின் கல்வி முயற்சிகள் மறுமலர்ச்சி பெற்றுவரும் போக்கு எல்லோரது கவனத்தையும் ஈர்க்கவே இப் பாடசாலையை இன்னும் மேலாக உயர்த்த வேண்டும் எனும்நோக்கில் ஒரு விழிப்புணர்வுச் செயற்பாடாக மாணவர்களின் ஊக்கத் திற்கு ஒரு உந்துதலாக இந்த 116 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் "வளை கதிர்" எனும் சஞ்சிகை வெளியீடும் மாணவர்களின் சாதனைகளை வெளிக்கொணரும் பரிசளிப்பு நிகழ்வும் ஒழுங்குசெய்து சிறப்பாக இடம் பெற்றுள்ளது. இப்பாடசாலையை முன்னிட்டு, பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக் களுக்காக ஐந்துக்கும் மேற்பட்ட ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. அவை பாடசாலையின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக, நூறு வயதையும் பதினாறு ஆண்டுகளையும் கடந்துவிட்ட இப் பாடசாலையின் அபிவிருத்திக்காகப் பல முனைகளிலிருந்தும் தீவிரமாகச் செயற்பட வேண்டியுள்ளது. இதுபற்றிய விழிப்புணர்வு பாடசாலைச் சமூகத்தால் மட்டுமல்ல பிரதேச, உள்ளூர் மட்டத்திலும் எழுச்சி பெற வேண்டும். அப்போதுதான் இப்பாடசாலை தரமான கல்வியை வழங்கும் தரமான பாடசாலையாக மென்மேலும் வளர்ச்சிபெற முடியும்.

◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பான தமிழ்ச்சமூகம் இப்படியும் சீரழிவதா?

செல்வி நடனவதி முருகேசு, ஓய்வுபெற்ற ஆசிரியர், தர்மபுரம்.

ஒழுக்கம், பண்பாடுகள் நிறைந்த தமிழ்ச் சமூகத்தைக் காணமுடிந்த காலம் இப்போது இல்லாது போய்விட்டது. பொருளாதாரத்தடை, மின்சாரத்தடை, தொழில் உற்பத்தி, போக்குவரத்துச்சிக்கல் இப்படியான காலகட்டத்தில் பிள்ளைகள் ஒழுக்கத்துடன் வளர்க்கப்பட்டார்கள். கல்வியறிவு புகட்டினார்கள். அறிவால் உயர்ந்து பல்கலைக்கழகம் வரை சென்றார்கள். தொலைக்காட்சி வசதிகள், சினிமாத் தியேட்டர்கள் குறைவு. அறிவுப்பசி மட்டுமே பிள்ளைகள் கொண்டிருந்தார்கள். மதுபோதை, புகைப்பிடித்தல் இவைகளும் அற்ப சொற்பமாகவே காணக் கூடியதாக இருந்தது. பல இழப்புக்கள் மத்தியிலும் பண்பாடு ஒழுக்கநெறிகள் பாதுகாக்கப் பட்டன.

முகாம் வாழ்க்கை, உறவுகள் இழப்பு, இருப்பிட இழப்பு என விரக்தியின் விளிம்பில் தவித்த மக்களைத் தொலைக்காட்சி ஆசைகள் திசைதிருப்பி வைத்தன. மளமளவெனச் சமூகச் சீரழிவுகளை ஏற்படுத்தும் குடிபோதை, அரைகுறை ஆடைகள், ஆபாசப்படங்கள் அறிமுகமாயின. கணினி, கையடக்கத் தொலைபேசிகள் ஊடாக முறையற்ற தொடர்புகளை வைத்திருப்பதும் தொடர்கிறது. நாளைய சந்ததியினரை நிச்சயம் காப்பாற்றியாக வேண்டும்.

இறைநம்பிக்கை, பக்தி உணர்வுகளை வெளிப்படுத்தும் அறநெறிப்பண்புகள், நல்லொழுக்கம் வளர ஆக்கபூர்வமான செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும். இழந்த உயிர்களை நாம் மீண்டும் பெறமுடியாது. இழந்த வளங்களை, எதிர் காலத்தை நிச்சயமாக சிறப்பானதாக ஆக்க வேண்டும். நல்ல சமுதாய அமைப்பை உருவாக்கவேண்டும். சமூகச் சீரழிவுகள் சமுதாயத்தைப் பாதிக்குமென உணரும்போது விழிப்புணர்ச்சி நிச்சயம் ஏற்படத்தான் செய்யும்.

ஒரு தடவை மகாத்மா காந்திஜியைப் பார்க்கச்சென்ற ஒருவர் அவரிடம் இவ்வுலகில் மன்னிக்கமுடியாத பாவம் என்று நீங்கள் எதைக் கூறுவீர்கள் என்று கேட்டபோது காந்திஜி புன்முறுவலுடன் ஒன்றல்ல மொத்தம் ஏழு (07) பாவங்கள் உள்ளன. அவை

1. கொள்கைப்பிடிப்பு எதுவும் இல்லாத அரசியல்
2. நேர்மை எதுவுமில்லாத வியாபாரம்
3. ஒழுக்கம் இல்லாத கல்வி
4. பெற்றோர் மற்றும் குருவை மதிக்காமை
5. மனச்சாட்சி இல்லாத இன்பம்
6. மனிதாபிமானம் எதுவுமில்லாத விஞ்ஞானம்
7. தியாகம் இல்லாத இறைவழிபாடு.

என்று கூறிமுடிக்க வந்தவர், திருப்தியுடன் எழுந்து சென்றாராம். எனவே விழிப்புணர்ச்சிச் செயற்பாடுகள் மனிதனைப் பண்பாளனாக்கும் என்பதைப் புரியக்கூடியதாகவுள்ளது. வாழ்வாங்கு வாழ்ந்து பெருமை தேடிச் செல்லவேண்டிய பலர் குடிப்பழக்கத்தால் தம்மையும் அழித்து, தம்வீட்டின் பெருமை, நாட்டின் பெருமை ஆகிய அனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் அழித்துக்கொண்டு உணர்வற்ற நிலையில் நடைப்பிணங்களாக எம் கண்ணெதிரே காட்சி தருகின்றனர். இவர்களை
"துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சு உண்பார் கள்உண் பவர்"

என்று வள்ளுவர் செத்த பிணங்களாகக் காட்டுகிறார். சான்றோராலும், மக்களாலும் மதிக்கத்தக்கவர்களாக நடந்து கொள்ள வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டுமென்ற வினாவுக்கு வள்ளுவர் தரும் பதில் இதுதான்
"உண்ணற்க கள்ளை உணில்உண்க - சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்."

எனவே மனச்சாட்சி இல்லாத இன்பம் வேண்டிப் பண்பான வாழ்க்கையைச் சீரழிக்கும் சமூகம் வந்ததை எண்ணாமல் வருவதை எண்ணி வளமுடன் வாழ இறைவனை வேண்டி முயற்சியினைத் தொடரின் நாளை நமதே!

◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமோசனம்

திருமதி விஜிசுரேஷ்
நன்னடத்தை உத்தியோகத்தர், கண்டாவளை.

அப்பொழுதெல்லாம் பொழுது விடிந்தால் கண்ணனுக்கு அன்றைய நாளினை எவ்வாறு கடத்துவது என்ற நினைவே பெரும் சுமையாக மனதை உறுத்தும். அன்று சற்று வித்தியாசமான மனநிலை, அதிகாலையே எழுந்துவிட்டான். ஆனால் படுக்கையை விட்டு எழும்புவதற்கு விருப்பம் வரவில்லை.

எப்பொழுதும் வயலுக்குத் தேநீர் கொண்டு போக நேரமாகிவிட்டது என திட்டி படுக்கையிலிருந்து எழுப்பும் தாத்தா நேற்றைய சம்பவத்திற்குப் பிறகு சரியாக முகம் கொடுத்துப் பேசவில்லை. அதனைவிடப் பாட்டியின் பார்வை மிகக் கொடூரமாக இருந்தது. அவன் மனநிலையை தனது ஊடு பார்வை மூலம் அலசி ஆராயமுயன்று தோற்றுப்போன அந்தப் பார்வையால் பாட்டியினது முகம் படுபயங்கரமாக இருந்தது.

இத்தனைக்கும் இவர்களை மாற்றியது நேற்றைய சம்பவம்தான். அவனுக்கும் அது ஒரு மாற்றம். மாற்றம் என்பதைவிட அவனது வாழ்வில் புதிய விடியலுக்கான அறிகுறி எனலாம். இவ் விடியல் இத்தனை சீக்கிரம் அவனுக்குக் கிடைக்கும் என அவன் எதிர் பார்க்கவில்லையென்றே கூறவேண்டும். கண்ணன் நன்றாகப் படிக்கக்கூடிய ஒரு சிறுவன். சிறு வயதுக்குரிய குறும்பும் விளை யாட்டுத் தனமும் நிறைந்தவன்.

அவனுக்கு முந்தையநாள்த்தான் பாடசாலை விடுமுறை. எனவே அவனது மனது முழுக்க சித்தி வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை. அது நிறைவேறுவது போல சித்தியின் தொலைபேசி அழைப்பு வந்தது. ஆனால் அவ் உரையாடலினால் தாத்தா மிகவும் கோபமாகி இருந்தார். தாத்தா கதைத்ததிலிருந்து தாத்தா நாளை சித்தியைச் சந்திக்க அழைத்துப் போவதாக அறிந்து, அன்று முழுக்க தன் தங்கைகளைச் சந்திக்கும் ஆவலால் தூக்கமின்றி அவர்களின் நினைவை மீட்டுக் கொண்டிருந்தான்.

கண்ணன் பெற்றோரை யுத்தத்தில் இழந்திருந்தான். அதன்பின்னர் கண்ணனின் ஒரு சகோதரி தாயின் கோரிக்கைக்கு அமை வாக சிறுவர் இல்லத்தில் இணைக்கப் பட்டார். அதன்பின் தாய் எங்கோ மறுமணம் செய்து வசிப்பதாக யாரோ கூறக்கேட்டு அறிந்தான்?

பெற்றோரற்ற கண்ணனும் இளைய சகோதரியும் சித்தியின் நிழலில் தங்கி யிருந்தனர். சித்தியின் குடும்பத்திலும் யுத்தத்தின் வடு ஆழப்பதிந்து இருந்தது. இதன்காரணமாக கண்ணன் வயதான ஒரு பணக்காரத் தாத்தாவுக்கு வளர்ப்புப் பேரனாகக் கைமாறப்பட்டான். தாத்தாவிற்கு ஒரேயொரு மகன். அவன் வெளிநாட்டிற்கு சிறுவயதிலேயே சென்று இன்று நல்ல நிலையில் இருக்கின்றான். தனித்துவிட்ட முதியவரும் மனைவியும் அன்பு, பாசத்தை விடப் பணத்தை அதிகம் விரும்பினர். அதனால் மகனின் வெளிநாட்டுப் பண வருகையால் தமது சொத்துக்களை மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கி வந்தனர். இன்று வயோதிபமாகும் நேரத்தில் அவர்களுக்கு ஓர் துணை அவசியமாகியது. வேலையாட்கள் பலர் இருந்தாலும் கூட தம்மை இறுதிக்காலத்தில் பராமரிக்க எவருமில்லாத நிலையில் இக் கண்ணன் இவர்களுக்கு விலை ஏதும் இன்றிக் கிடைத்தான்.

அவன் இப்போது வேறு மாவட்டம். சித்தியும் சகோதரியும் வேறு மாவட்டம். தாத்தா அவர்கள் வீட்டுக்குச் செல்லவோ தங்கைகளுடன் தங்கவோ, அனுமதிப்ப தில்லை. கண்ணன் விதியின் விளையாட்டுக் கள் அனைத்தையும் கடந்து வந்தவன். தாத்தா குடும்பத்துடனான கண்ணனின் வாழ்வில் கண்ணனுக்கு மிஞ்சியது அடிகாயத்தின் தழும்புகளும் அன்புக்கான ஏக்கமும் தான்.

கண்ணன் நேற்று தாத்தாவுடன் மோட்டார் வண்டியில் சித்தி வீட்டுக்குப் போவதாக நினைத்துத்தான் சென்றான். ஆனால் சென்றபின்பு தான் தெரிந்தது அது பிரதேச செயலகம் என்று.

அங்கு இருந்த அதிகாரி ஒருவர் சித்தியையும் தாத்தாவையும் தனித்தனியே அழைத்து விசாரணை செய்தார். பின்பு கண்ணனையும் அழைத்து விசாரித்தனர். அப்போது கண்ணன் தனது சோகநிலை மையை அழுகையுடன் தெரிவித்தான். தானும் தங்கைகளும் சேர்ந்து வாழவே விரும்புவ தாகவும் கூறினான்.

அதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட சில உத்தியோகத்தர்களும் தாத்தாவும் சித்தியும் கண்ணனும் இணைந்த கலந்துரை யாடலின் விளைவாக அனைவரும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டே 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்புப் பராமரிப்புத் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும் என்பதனையும், சட்ட அனு மதியின்றி யாரும் யாருடைய பிள்ளை களையும் வைத்திருக்க முடியாது எனவும் சிறுவர்களை (உடல், உள, பாலியல், அனாதை யாகக் கைவிடல் போன்ற) துஷ்பிரயோகத் திற்கு உட்படுத்த முடியாது; எனவும் குடும்ப அங்கத்தவர்கள் ஒரே குடும்பச் சூழலிலேயே வாழமுடியும் எனவும் கருத்துக்கள் தெரி விக்கப்பட்டன.

அடுத்த நடவடிக்கை பற்றிய இக் கலந்துரையாடலின் இறுதியில் கண்ணன் அவனுடைய சகோதரர்களுடன் சித்தியின் பராமரிப்பில் விடவேண்டும் என முடிவு செய்யப்பட்டது. தனது சகோதரிகளுடன் சேர்ந்து வாழும் மகிழ்வுடன் துள்ளலுடன் நடந்தான் கண்ணன்.

சம்பளமில்லாத உதவியாளனை இழந்துவிட்டோமே என்ற ஏக்கத்தில் தாத்தா வின் முகம் கறுத்துவிட்டது. அதிகாரிகளை வெறுப்புடன் நோக்கியவர் "இந்தக் காலத்தில் நல்லதுக்குக் காலம் இல்லை" என்று முணு முணுத்தபடி தன் ஏமாற்றத்தினை மறைத்தபடி சென்றார்.

சித்தி தனது குற்ற உணர்வு நீங்கி அவர்களது எதிர்கால வாழ்விற்கு ஓர் ஒளிக்கீற்று தெரிகின்ற திருப்தியுடன் காத் திருந்தார். காலம் கடந்தேனும் அவள் மனந்திருந்தியதில் எல்லோருக்கும் மகிழ் ச்சியே என்றாலும், சிறுவர்களுடன் கடமை புரியும் அதிகாரிக்கு சிறுவர்களின் உயர்நலன் கருதி அடுத்த கட்டமாகத் தான் என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனை மனம் இலேசான மாதிரி ஓர் உணர்வு.

◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கத் தமிழ்

பெ. புண்ணியராஜ்
கூகை மாவடி, கண்டாவளை.

பல்லவி

தங்கத்தமிழின் மடியினிலே தவழ்ந்து வந்தோம்
நாங்கள் என்றும் தவழ்ந்து வந்தோம்
சங்கத்தமிழன் வழியினிலே வாழ்வு கண்டோம்
நாங்கள் என்றும் வாழ்வு கண்டோம்
வாழ்க... தமிழே வாழ்க. (2)

(தங்கத்தமிழின்)

சரணம்

செம்மொழியின் சிறப்புதனை
எம்மொழியும் அறிந்திடுமே
அம் மொழியின் மகிமைதனை } (2)
எம்மொழியும் மறைத்திடுமோ
வாழ்க... தமிழே வாழ்க. (2)

(தங்கத்தமிழின்)

மண்ணின் மணம் கமழ்ந்திடவே
கன்னித்தமிழ் உயர்ந்திடுமே
விண்ணைத்தொடும் அளவினிலே } (2)
வண்ணத் தமிழ் வளர்த்திடுவோம்
வாழ்க... தமிழே வாழ்க. (2)


(தங்கத்தமிழின்)

◆◆◆

(இவ் ஆக்கம் 2012 ஆம் ஆண்டின் பிரதேசமட்ட தேசிய கலை இலக்கியப் போட்டியில் திறந்தபிரிவில் பாடலாக்கப்போட்டியில் முதலிடம் பெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவு

ம. சங்கீதா,
கால்ஏக்கர், உமையாள்புரம்.

அந்திவானம் செக்கச் செவேல் என்று சிவந்து கிடந்தது. தங்கத்தகடு போல் மின்னிய சூரியன் அடிவானத்தில் ஒளிந்து கொண்டான். அவன் ஏன் இப்படி ஒளித்துக் கொண்டான். ஓகோ... காலை விடிந்தது முதல் அவன் போகும் திசையெல்லாம் திரும்பித் திரும்பிப் பார்ப்பாளாம் சூரியகாந்தி. அவளைப் பார்த்து சலித்தான் போலும்...

திடீரென்று "அம்மா" என்று ஒலித்த தீனமான அழுகுரல் அவள் சிந்தனையைக் கலைத்தது. ஓடிப்பிடித்து விளையாடியதில் கீழே விழுந்து முழங்காலில் இரத்தம் கசிந்தது. அந்தக் குழந்தைக்கு அவள் இட்ட பெயர் துளசி. துளசியின் சிவந்த மேனியில் தோன்றிய சின்னக்காயம் பெரிதாய்த் தோன்றியது. அவள் அம்மாவிடம் ஐயையோ! என்று ஓடியதில் கையிலிருந்த திருநீற்றுப் பிரசாதம் எல்லாம் சிதறி விழுந்துவிட்டது. அவள் குழந்தையைத் தூக்கி அணைத்துக் கொண்டாள்.

அவளுக்கு இந்த உலகமே அந்தக் குழந்தைதான். அந்தக் குழந்தையை விட்டால் அவளுக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொள்ள வேறுயாருமேயில்லை. துளசிக்கும் அவள் அம்மா என்றால் ரொம்ப இஷ்டம். அம்மாவின் கண்கள் கலங்கியிருந்தால் அவளுக்கு பொறுமை இருக்காது. அவளும் அழ ஆரம்பித்து விடுவாள். எனவே அந்தப் பிஞ்சுக் குழந்தையின் முகத்தில் வாட்டத்தைக் காணவிரும்பாத அவள் அம்மாவும் என்னதான் ஆயிரம் வேதனைகள் உள்ளமெல்லாம் முள்ளாகக் குத்தினாலும் உள்ளுக்குள்ளேயே அடக்கிக் கொள்வாள்.

அம்மாவிற்குப் பெயர் செவ்வந்தி. பெயருக்கேற்றாற் போல அவள் ஒரு மஞ்சள் நிற அழகி. வால்போன்று வளைந்த அவள் இமைகளுக்குக் கீழிருக்கும் கருவிழிகள் ஆயிரம் கதை சொல்லும். அவளுக்குத் தப்பாமல் பிறந்திருந்தாள் அவள் மகள் துளசி. அவளும் ஒரு குட்டி தேவதைதான். ஆனால் அவள் அழகை ரசிக்க அவள் அம்மாவைத் தவிர அவளுக்கும் யாருமில்லை.

துளசி அப்பாவை அறிந்ததில்லை. அவள் அம்மா ஒரு இளம் விதவை. 24 வயதில் அவளுக்கு விதவைப்பட்டம். ஆனால் செவ்வந்திக்கு அதைப் பற்றி எந்தக் கவலையுமில்லை. ஏனென்றால் நம் நாட்டில் இளம் விதவைகள் ஏராளம். அதில் அவளும் ஒருத்தி அவளைப் போல எத்தனையோ விதவைகளைப் பார்த்து அவள் மனம் கல்லாகிப் போனது.

தினம் தினம் சந்திக்கும் போராட்டங்களும், சோதனைகளும் அவள் மனதை நன்றாகப் பதம்பார்த்து விட்டன. ஆனாலும் தனியொருத்தியாக அந்த ஊரில் அவள் பிள்ளையை வளர்க்கப்படும் பாடு அதை சொல்லிட முடியாது. அதிலும் செவ்வந்தியின் அழகு அவளுக்கு முதல் எதிரி.

அன்றொரு நாள் அடைமழை வானத்தில் பொத்துக்கொண்டு பெய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வந்தியின் ஓலைக் குடிசை ஒழுக ஆரம்பித்தது. சிறிதுநேரத்தில் வீடெல்லாம் ஈரமாகிப் போனது. கிடுகுக்குமேலே போட்டிருந்த தறப்பால் எழும்பிப் பறந்தது. செவ்வந்தி மடித்திழுத்து நிறுத்திப்பார்த்தாள் முடியவில்லை. ஒரு பக்கம் மடிக்க மறுபக்கம் பறந்தது. எப்படியும் இன்னொருவரின் உதவியோடுதான் அதைப்பிடித்துக் கட்ட முடியும். எனவே அந்தரத்திற்குப் பக்கத்து வீட்டு சிவகாமியின் புருஷன் சுந்தரத்தைக் கூப்பிட்டாள்.

சுந்தரமும் வந்து கயிற்றை இழுத்துக் கட்டி விட்டான். ஆனால் பின்னாலேயே சிவகாமியும் வந்து விட்டாள். "என்னங்க என்னங்க இஞ்ச என்ன செய்துகொண்டு நிக்கிறீங்க" என்று கேட்டபடியே வந்தவள் ஒரு பக்கத்திற்கு தானும் கயிறுகட்டி உதவினாள். மழை "சோ" என்று கொட்ட ஆரம்பித்தது. சிவகாமி கையோடு புருஷனையும் அழைத்துக் கொண்டு போய்விட்டாள். செவ்வந்தி வீட்டுக்குள் நுழைந்து நனைந்த ஆடையை மாற்றிக் கொண்டாள். குழந்தைக்கு சோற்றோடு சொதியையும் விட்டுப் பிசைந்து சாப்பாட்டை ஊட்டி விட்டாள். ஏனென்றால் குழந்தை கொட்டாவி விட்டபடியே கண்ணயர்ந்து கொண்டிருந்தது. சாப்பிடாமல் நித்திரை கொண்டு விடுவாளோ. நித்திரை கொண்டால் பிறகு எழுப்பிச் சாப்பாடு கொடுப்பதென்பது நடக்காத காரியம். ஏனென்றால் துளசி சரியான பிடிவாதக்காரி அவள் அம்மாவைப்போல. எனவே வெறும் வயிற்றோடு படுப்பதைக் காட்டிலும் சொதியும் சோறுமாக இருந்தாலும் வயிறார உணவு கொடுத்தால் குழந்தை ஆரோக்கியமாக இருக்கும் என்பது அவளது எண்ணம். தரம் - 10இல் விஞ்ஞான பாட ஆசிரியரும் அதைச் சொல்லிக் கொடுத்தது அவளுக்கு ஞாபகம் வந்திருக்க வேண்டும்.

அதைத்தான் செவ்வந்தியும் இப்போது செய்து வருகிறாள். ஏனென்றால் மூன்று வேளையும் போசாக்கான உணவை அவள் எதிர்பார்க்க முடியாது. எனவே கிடைப்பதை மூன்று வேளையும் கட்டாயம் வயிறார சாப்பிடவேண்டும் என்பதில் கவனமாயிருந்தாள். தான் சாப்பிட வேண்டும் என்பதை விட குழந்தைக்குக் கொடுக்க வேண்டும் என்பதில் அவள் கவனமாயிருந்தாள்.

செவ்வந்தியின் குழந்தை மடியிலேயே உறங்கி விட்டிருந்தது. செவ்வந்தி குழந்தையின் மிருதுவான முகத்தை அன்போடு தடவி விட்டாள். அவள் குழந்தைக்கு இன்னும் தோடு குத்தவில்லை. அவள் மனம் வேதனையால் துவண்டது. "என் கணவர் இருந்திருந்தால் என்பிள்ளை இப்போது உடல் முழுக்க நகை அணிந்திருப்பாளே" எண்ணும்போது அவளிடமிருந்து நீண்ட பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

கணவர்தான் இல்லை. என் தந்தையாவது இருந்திருந்தால் என்பிள்ளையை எப்படியெல்லாம் பாராட்டிச் சீராட்டியிருப்பார். அவரையும் சுனாமி விழுங்கிவிட்டது. என் குழந்தையின் முகம் எப்படியிருக்கும் என்று கூட அவருக்குத் தெரியாது.

ஆனால் என் அம்மா தோளிலும் மார்பிலும் சுமந்துதான் வளர்த்தார். என்ன பிரியோசனம். இவர்தான் உன் அம்மம்மா என்று கைநீட்டிக் காட்டுவதற்கிடையில் கொடிய டெங்குக் காய்ச்சல் அவர் உயிரைக் குடித்துவிட்டது. அவள் அம்மாவும் போன பிறகு அவளுக்குச் சொந்தம் என்று சொல்லிக் கொள்ள யாருமில்லை.

செவ்வந்தி படுக்கையை விரித்து குழந்தையைக் கிடத்தினாள். கதவைப்பூட்ட வாசலுக்குப் போனாள். சுந்தரத்தின் வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைப்பை வாசலில் விழுந்து கிடந்தது. "ஓகோ தறப்பால் கட்டும்போது விழுந்து விட்டது போல" அதைக் கொடுத்து விட்டுவர ஓடினாள். சிவகாமி சுந்தரத்திடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். "என்னங்க அவள் ஒரு விதவை. நான்கு வருசம் புருஷனில்லாம வாழுறா"... அவளோட உணர்வுகளைப் பற்றி உங்களுக்குப் புரியாது. அவள் உதவிக்குக் கூப்பிட்டா உடனேயே ஓடிப்போறது எனக்கும் பிடிக்கல. இந்த அம்பிளைகளையே நம்பமுடியாது. அவ வேற மூக்கும் முழியுமா இருக்கிறா. எங்க தப்பு நடந்திடுமோ என்று எனக்குப் பயமா இருக்கு. அதவிட நேத்து பரிமளா அக்கா, "என்ன உன் புருஷன் அடிக்கடி செவ்வந்தி வீட்ட போய் வாறான்" என்று கேட்டா. எனக்கு என்னமோ மாதிரி இருந்தது. அது உங்களுக்கும் கெட்டபேர். எனக்கும் அவமானம். அதனால இனி அங்க போகாதீங்க சொல்லிப் போட்டன் என்று சொல்லிவிட்டு விருக்கென எழுந்து போய்விட்டாள்.

செவ்வந்தியின் காதுகளில் தேள் கொட்டியது போன்றிருந்தது. கொண்டு போன சுந்தரத்தின் வெற்றிலைப்பை அவள் கையைவிட்டு நழுவியது. அவள் கண்கள் குளமாகியது. என் வீட்டுக்கு ஆண்கள் வந்தாலே நான் கெட்டவளாகிப் போய்விடுவேனோ?. நான் எப்படி இந்தச் சமுதாயத்தில் வாழப்போகிறேன். நான் மறுமணம் செய்து கொள்ளலாமா? செய்தால்தான் இந்த அவப் பெயர்களில் இருந்து தப்பலாம். ஆனால் என்னைப் போன்றவர்களைத் திருமணம் செய்ய யார் வரப்போகிறார்கள். இன்னொருத்தியின் வாழ்க்கையைக் கெடுக்காமல் வாறவருக்கும் வாழ்க்கை கொடுப்பது போல் அமையவேண்டும். அப்படியொருவன் வருவானோ? வருவான். செவ்வந்திமுகம் மாறியது. புது மலர்ச்சி முகத்தில் தோன்றியது. அவள் முகத்தில் இது நாள்வரை படர்ந் திருந்த துன்பத்திரை விலகியது. முகத்தை நிமிர்த்தி மிடுக்குடன் நடந்தாள். அவள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள். அடிவானில் மூன்றாம்பிறை சற்றுத் தெளிவாகவே தெரிந்தது.

◆◆◆

(இச்சிறுகதை இவ்வாண்டுக்கான பிரதேசமட்ட தேசிய கலைப் இலக்கிய போட்டியில் திறந்தபிரிவில் முதலிடம் பெற்றது)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நங்கை நீ"

வேல்மகள்
புளியம்பொக்கணை.

உள்ளம் உவகை கொள்ள - பெண்
சேயாய் மடியில் மலர்ந்தவளே!
பனைகொண்டிளைத்த தடுக்கதனில் - படுத்து
உடல் புரட்டி ஊர்ந்தவளே!

மழலை மொழிபேசி மகிழ்வித்து,
தவழ்ந்து தத்தியடி, வைத்து,
அகவை ஐந்தினிலே அடம்பிடித்து,
ஆசானிடம் அகரமுதலும் பெற்றாய்.

பருவம் பத்துவரை துள்ளி விளையாடி - சின்ன
பட்டு சட்டை உடன் எம்
உள்ளமெல்லாம் உவப்பூட்டி யன்று
பள்ளியில் துள்ளி வந்தாய் !

பக்குவ பருவ வயதுதனில் - பெண்ணின்
பண்டைப் பண்பாடு காத்து,
நாளும் கோளும் நயமுறப் பார்த்து,
ஊரும் மகிழ உறவுகள் கூட,
பாலும் அறுகும் பாங்குடன் வைத்து - மஞ்சள்
நீராட்ட மகிழ்வு கொண்டாடினாய்.

தங்கமும் வெள்ளியும் தரமுடன் சூட்டி
மங்கையாய்ப் பார்த்துனை மகிழ்ந்துகொண்டாட - நீ
அன்பையும் பண்பையும் அடக்கமொடு பணிவையும்
அணிகலனாய்க் கொண்டாடினாய்.

நற்கதலி தோரணங்கள் வாசலிடை கோலமிட
கற்புடை நாயகியாய் - நீ
நடந்தாய் மணப்பந்தல் !
கூறை உடுத்தி, குங்குமத்தால் பொட்டிட்டு,
பூமாலை சூடி, மணமகன் உடனிருந்து
மறையவர் ஓதும் மந்திரம் ஒலிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலதாலி மகிழ்வோடு ஏற்று
அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து
இல்லறம் என்னும் நல்லறம் தன்னில்
இணைந்திட்டாய் அன்று!

வைகறைப் பொழுதில் துயிலெழும் பெண்ணே - பதியின்
பாதம் பணிந்தெழுந்து
எண்ணிலாத் தெய்வங்கள் கைகூப்பித் தொழினும் - என்
கண்கண்ட தெய்வம் கணவனே என்றாய்!
தாய்மையுற்று சேய்களும் பெற்று - பூவுலகேற்றும்
பூவையாய்த் தரணியில் திகழ்வாய் நீயே !

◆◆◆





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியா ஓர் அனுபவப் பகிர்வு

திரு.ச. சந்திரன்
கிராம அலுவலர், பிரமந்தனாறு.

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களிலும் 2009 - 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற கிராம அலுவலர்களுக்கான முகாமைத்துவப் போட்டியில் 25 மாவட்டங்களிலும் முதலிடம் பெற்றுக்கொண்ட கிராம சேவையாளர்களுக்கான கல்வி பயிற்சி வகுப்பு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக UNDP நிறுவன நிதி அனுசரணையுடன் மலேசியா, கோலாலம்பூர் நகரில் மலேசிய கிராம அபிவிருத்தி அமைச்சின் அரச பயிற்சி நிறுவனம் (INFRA) மூலம் கிராம அபிவிருத்தி மற்றும் வறுமை நீக்கம் தொடர்பான கருத்தரங்குகள் 2012.02.12 - 2012.02.25 வரை நடைபெற்றன. இப் பயிற்சி வகுப்பில் எமது பிரதேசத்தின் சார்பாகக் கலந்துகொண்ட நான் அங்கு அனுபவரீதியாக அறிந்துகொண்ட சமூக, பொருளாதார, கலாசார விழுமியங்களைப் பகிர்ந்துகொள்ள விளைகிறேன்.

மலேசிய கோலாலம்பூர் நகரானது அனைத்துத் தரப்பினராலும் கவரத்தக்க மிகவும் அழகான நகரமாகும். இங்கு பல் வேறுபட்ட கலாசார பண்பாட்டுக் கோலங்களைக் காணக்கூடியதாக உள்ளது. அத்தோடு இங்கு பல மொழிகள் பேசப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. இப்பிரதேசத்தின் பிரதான மொழியாக "மலே" பேசப்படுகின்றது. அத்தோடு இரண்டாம் மொழியாகத் தமிழ்மொழி பேசப்படுகின்றது.

இங்குள்ள வரவேற்பு முறைமைகளைப் பார்ப்போமாயின் எமது வரவேற்பு முறைகளைப் போன்று கைகுலுக்குதல், கை கூப்பி வணக்கம் தெரிவித்தல் போன்ற வரவேற்பு முறைகள் காணப்படுகின்றன. ஆடை அணிகலன்கள் அந்நாட்டுக் கலாசாரத்திற்கு அமைவாகக் காணப்பட்டாலும், எமது கலாசார உடைகளும் அங்கு அணிவது குறிப்பிடத்தக்கது.

இங்கு அரச ஆட்சிகள் மாறிக் கொண்டு வருகின்றபோதிலும், அரச கொள்கைகள் மாற்றமடைவதில்லை. இங்கு மக்கள் தமது தொழில்களைப் பதிவுசெய்து நேரடியாகவே பொருட்களை ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் அனுமதிகள் வழங்கப் பட்டுள்ளன. இங்கு திறந்த பொருளாதாரக் கொள்கை பின்பற்றப்பட்டு வருகின்றது.

சமூக பொருளாதார நிலைகளாக மக்கள் பங்கேற்புடனான திட்டங்களைத் தயாரித்து அரச அங்கிகாரத்துடன் நிலையான நீண்ட பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குதல் இந்நாட்டின் முக்கியமான செயற்பாடாகக் காணப்படுகிறது. அதாவது 2020ஆம் ஆண்டு நாடு முழுமையான அபிவிருத்தி அடையவேண்டும் என்னும் குறிக்கோளின் கீழே அனைத்துச் செயற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

மலேசிய மக்களின் வாழ்க்கை முறைமையானது ஒரு கூட்டுக்குடும்ப முறையாகவே காணப்படுகின்றது. இங்கு அனைத்துச் செயற்பாடுகளும் பலர் ஒன்றாகவே சேர்ந்து கூட்டு முயற்சிகளின் மூலமே செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு அபிவிருத்தியின் உயர்விற்கு இக் கூட்டு முயற்சியே முக்கிய பங்கு வகிக்கின்றது.

இப்பிரதேச மக்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் எமது பிரதேச மக்களின் உணவுப் பழக்கங்களிலும் இருந்து முற்றாக வேறு பட்டுக் காணப்படுகின்றன. மரக்கறி வகைகள் கூடுதலாகப் பச்சையாக வெட்டியே உணவு தயாரிக்கப்படுவதோடு, சமையல் முறைகளும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. எனினும் பழவகைகள் நாம் உண்ணும் பழவகைகள் அனைத்தையும் காணமுடிகின்றது.

எமது பிரதேசங்களில் காணப்படும் ஒவ்வொரு சமயத்தவருக்கும் வெவ்வேறு தெய்வ வழிபாடுகள் போன்று, இங்கும் ஒவ்வொரு சமயத்தவருக்குமான வழிபாட்டுத் தலங்கள் காணப்படுகின்றன. எமது சைவசமய விழுமியப் பண்புகள் இங்கும் கடைப்பிடிக்கப் படுகின்றன. ஆலய அமைப்புக்கள், சிலைகள், சிற்ப உருவங்கள், கிரியை முறைகள், ஆலயக் கடமைகள் என்பன எமது பிரதேசங்களில் காணப்படுவது போன்றே காணப்படுகின்றன.

இங்கு மேற்கொள்ளப்படும் வாழ் வாதாரத் தொழில் முயற்சிகளாக விவசாயம், கால்நடை வளர்ப்பு, வியாபாரம், சிறுகைத் தொழில் மற்றும் சுயதொழில் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன. உற்பத்தி நடவடிக்கைகளாக பன்னவேலைப் பொருட் கள், கைப்பணிப் பொருட்கள், சிறு வியாபாரப் பொருட்கள், கழிவுப் பொருட்களில் கைப்பணிப் பொருட்கள் செய்தல். பிரம்பில் கதிரை, கூடைகள், பூச்சாடிகள் செய்தல், ஆடைகள் தைத்தல் என்பன காணப்படு கின்றன. இங்கு உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதோடு, அவற்றை ஏற்றுமதிப் படுத்துவதிலும் முக்கிய கவனம் செலுத்தப்படு கின்றது.

இங்குள்ள இயற்கையான பொருட் கள் பல நாடுகளின் பல்வேறுபட்ட செயற் பாடுகளுக்காக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் பூக்கள், பழங்கள், உணவுப் பொருட்கள் என்பன அதிகளவில் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மலேசியாவில் பெண்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்துவதில் அக்கறை செலுத்தப்படுகின்றது. இங்கு அதிகளவில் பெண்களே பல தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். பெண்களுக்கான சுயதொழில்கள், பயிற்சிகள், தொழில்நுட்ப உத்திகள் என்பனவற்றை ஏற்படுத்திக் கொடுப் பதோடு, இவர்கள் உற்பத்தி செய்யும் பொருட் களை விற்பனைப்படுத்தக்கூடிய வழிமுறை களையும் ஏற்படுத்திக்கொடுப்பதோடு, வேலையற்ற பெண்களுக்கு அமைப்புக்களி னூடாக வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்து பெண்களின் வாழ்வாதாரத்தைச் சுயமாகவே உயர்த்துவதற்கு இந்நாட்டு அரசாங்கம் பல முயற்சிகள் செய்து வரு கின்றது.

பொழுதுபோக்குச் செயற்பாடுகளாக நேரத்தை வீண்விரயம் செய்யாமல் ஏற்றுமதி செய்யக்கூடிய கைப்பணிப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், தட்டுக்கள், பூக்கள், பூச்சாடிகள் பின்னுதல், கடதாசி, காட்போட்மட்டை போன்ற கழிவுப் பொருட்களில் அழகிய ஆக்கப்பொருட் களைச் செய்து ஏற்றுமதிப்படுத்தி வரு மானத்தைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இந்நாட்டில் உள்ள அனைத்துத் தேவைகளும் அதிகளவில் இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் கொண்டே நிறைவேற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. இங்கு இறக்குமதியை விட ஏற்றுமதியே அதிகளவில் நடைபெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கிராமங்களில் காணப்படுவது போன்று பல்வேறுபட்ட கிராம அமைப்புகள் காணப்படுகின்றன. இவ் அமைப்புகள் பல்வேறுபட்ட செயற்பாடுகளைச் செய்து வருகின்றனர். அதாவது மக்களின் வருமான முயற்சிகளை ஊக்குவித்தல், வேலையற்ற வர்களுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல், சுய தொழில்களை ஊக்குவித்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்து வருவ தோடு, அமைப்பின் வருமானத்தை உயர்த்து வதற்குக் கால்நடை வளர்ப்பு, விவசாயப் பண்ணைகள், கைப்பணிப் பொருட்கள் உற்பத்திகள், உணவுப் பொருட்கள் உற்பத்தி, பூமரக்கன்றுகள் நட்டு பூக்கள் ஏற்றுமதி, வீட்டு வாடகை முறைமை, சுழற்சி முறைக்கடன்கள் போன்ற வருமான வழிகளைப் பெறும் தொழில் முயற்சி செயற்பாடுகளை மேற் கொண்டு வருகின்றனர்.


இவ்வாறான ஒரு செயற்பாட்டினை எமது கிராமத்தில் உள்ள ஒரு அமைப்பிற்கு பயிற்சி வழங்கிச் செயற்படுத்தும் நோக்கில் "பிரமந்தனாறு கிராம முதியோர் சங்க" உறுப்பினர்களுக்கு விவசாயப் பண்ணைகள் அமைத்தல் தொடர்பான சில பயிற்சிகளை வழங்கியுள்ளேன். அவர்கள் விவசாயப் பண்ணை ஒன்று அமைத்து, அதனூடாக அமைப்பிற்கான வருமானத்தினையும் தமக்கான வருமானத்தினையும் பெற்றுவருவ தோடு, பல விவசாய உத்திகள், விற்பனைப் படுத்தல் உத்திகளையும் கையாண்டு வருகின்ற னர்.

இவ்வாறாக மலேசிய அரசாங்கம் சமூக பொருளாதார விழுமியச் செயற்பாடு களில் மக்களைப் பங்குபற்றச் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் அக்கறை செலுத்துவதோடு தமது நாட்டின் அபிவிருத்தியையும் உச்சக் கட்டத்திற்கு நகர்த்திச் செல்லும் விதம் மிகவும் வியந்து நோக்கத்தக்கதாகும்.









◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த முப்பது வருடங்களாக வன்னி விவசாயிகளின் நன்மதிப்பைப் வென்ற
கேலிஸ் அக்குறோ நிறுவனத்தினர் தமது உற்பத்திப் பொருட்களை
ஒரே கூரையின்கீழ்ப் பெற்றுக்கொள்ள
அங்கீகாரம் பெற்ற விற்பனை முகவர்

# கதிர்வேளான்

HAYLEYS AGRO

* விவசாய இரசாயனாங்கள்
* உரவகைகள்
* விசேட உரவகைகள்
* விதைப் பொருட்கள்
* கால்நடை மருந்துகள்
* அறுவடை இயந்திரங்கள்
* தெளிகருவிகள்
* (இவற்றுடன்) பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு
* சம்பந்தமான ஆலோசனைகளும் வழங்கப்படும்.

A9, வீதி,
கரடிப்போக்கு, கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயை

காளிமுத்து சுதாகரன்
உமையாள்புரம்.

மங்கள வாத்தியங்கள் முழங்க மணவாளக் கோலத்தில் அலங்கரிக்கப்பட்ட காரில் இருந்து மணமகன் இறங்குகின்றான். தோழன் தாம்பாளத்தின் மேல் மணமகனை நிறுத்தி, கால் கழுவி மாலை அணிவித்து வரவேற்கின்றான். அவ்வேளை கல்யாணத் துக்கு வந்த சாந்தி "வெளிநாட்டு மாப்பிள்ளை யாம்" என வதனியிடம் சொன்னாள். வசந்தி அதற்கு "ஓம் ஓம் ஒரு நாளிலேயே நிச்சய மாகியதுதான் இந்தக் கல்யாணம் என்றாள். இவர்களது வார்த்தை சுதாவின் காதில், "வெந்த புண்ணில் வேல் பாய்வதைப் போல் இருந்தது." "கடவுளே இவன் எப்படிப்பட்ட வனோ தெரியாது நீ தான் இவளுக்குத் துணை நிற்க வேண்டுமென வேண்டிக் கொண்டாள். அவர்கள் கூறிய அந்த "ஒரு நாளில்" என்பது அவளுக்குப் பெரும் சங்கடத்தினை ஏற்படுத் திக்கொண்டிருந்தது. ரோஜாச் செடி மேல் விழுந்த சேலையை எடுக்கவும் முடியாமல் விடவும் முடியாமல் தவிப்பது போல் தனக்கு நடந்து முடிந்த அந்தப் பந்தத்தை வெளியில் சொல்லமுடியாமல் மனம் துன்பப்பட்டுக் கொண்டிருந்தது. இத்துன்பியல் நிலையில் முன்னைநாள் நினைவுகள் திரையிடப்பட்ட படமாக மனத்திரையில் ஓடலானது.

சுந்தரம் விவசாயம் செய்யும் நடுத்தரக் குடும்பக்காரன். இவனுக்கும் கனகத்திற்கும் அன்புக்கொன்று ஆசைக்கொன்று என இரு பிள்ளைகள். மூத்தவள் சுதா. இளையவன் சுதன். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த ஏர் பிடித்து உழைத்து முன்னுக்கு வந்தவரே சுந்தரம். தன் பிள்ளைகளை எதுவித குறையு மின்றிப் படிப்பித்தார். பெண்ணுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் நாற்குணமும் ஒன்று சேர்ந்து செதுக்கிய அழகிய சிற்பமாகச் சுதா விளங்கினாள். வந்தாரை வரவேற்கும் வன்னி மண்ணின் மகிமை கூறும் குடும்பமாகச் சுந்தரம் குடும்ப மும் பெயர்பெற்றது.

சுதாவின் அழகும், குணமும் அனை வரையும் கவர்ந்தது. இதனால் அவள் படிக்கின்ற காலத்தில் அவளைத் தமது மனைவியாக அடையவேண்டுமென ஒரு தலைப்பட்சமாக விரும்பாத ஆண்களே இல்லை. இப்படியான ஆண்களின் காதல் என்ற மாயை வலைக்குள் விழாது பல்கலைக் கழகப் பட்டத்தினைப் பெற்று வெளியேறி னாள் சுதா. சுதாவிடம் முடிவு கேட்கும் ஆண்கள் முகம் சுருங்கும் வண்ணம் "எனது பெற்றோர் எவனை தனக்கு மாப்பிள்ளை என்கின்றனரோ அவன் தான் எனது முதற் காதலன்" எனப் பதில் கூறி நிற்பாள். இப்படித் தன் குடும்ப கௌரவத்திற்குக் குலவிளக்காகத் திகழ்ந்தாள். இந்த நிலையில் பெற்றோர் சுதாவுக்கு வரன்தேடும் படலமும் தொடங்கி யிருந்தனர்.

அன்று புதன்கிழமை சுந்தரம் வீட்டுக்குப் புரோக்கர் மாணிக்கம் வந்திருந் தார். "சுந்தரம் ஒரு நல்ல சம்பந்தம் வந்திருக் குது பொருத்தம் நல்லா இருக்குது" என்றார். சுந்தரம் "குடும்பம் எப்படி, பொடியன் நல்லவனா?" என்றார். நல்லவன் என்பதைப் புரோக்கர் தனது தலை அசைவு மூலம் யாடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிக் கைப்பையில் இருந்து படத்தை எடுத்துக் கொடுத்தார். படத்தை வேண்டும் போது பல்லி கத்தியது. மாணிக்கம் "உச்சிப் பல்லி சொல்லுது அச்சமில்லை" என்றார். பார்ப்பதற்குச் சாந்தமான முகத்துடன் காதில் கடுக்கனுமாகப் பிரமாண்டமான கட்டடத் தின் முன் காருக்கருகில் மாப்பிள்ளை ரவி நின்றிருந்தான்.

படத்தையும் ஆளையும் பார்த்தால் வெளிநாடுதான் எனத் தன் மனதில் தோன்றி யதை கேட்கும் முன்பே புரோக்கர் "வெளி நாட்டு மாப்பிள்ளை இரண்டு கம்பனி சொந்தமாக இருக்குது. கல்யாணம் முடிந்த தும் சுதாவையும் உடனே கூட்டிக்கொண்டு போவதாக இருக்கிறார்" என ஆசை வார்த்தை களால் சுந்தரத்தை நனைய விட்டார். சுந்தரம் தனது மகளை ஓர் வெளிநாட்டு மாப் பிள்ளைக்கே கட்டிக் கொடுப்பதாகச் சொல்லித் திரிந்தவருக்கு வீடு தேடியே வந்திருப்பது இறைவன் செயல் என எண்ணிக் கொண்டார். "ஓர் பிள்ளைக்கு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் செய்து கொடுப்பது என்பது ஓர் ஆலயத்தைக் கட்டிக் கும்பாபி ஷேகம் செய்வதற்குச் சமம்" என்பார்கள். அந்தளவு கஷ்டத்தினை கடவுள் தனக்குக் கொடுக்கவில்லை என எண்ணியபோது அவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வந்தது. கல்யாணத்துக்குச் சம்மதம் தெரி வித்தார்.

அன்று மாலை ரவி தொலைபேசியில் சுந்தரத்துடன் வெகுநேரமாகக் கதைத்துத் தனது ஆசை வார்த்தைகளால் தனது வெளி நாட்டு மாயை வலைக்குள் விழுத்தி விட்டான். "மாமா நான் ஓரிரு நாள் தான் இங்கு நிற்க முடியும். சுதாவுக்கும் விசா அலுவல்களைப் பார்க்கிறன்". என்றவனுக்குச் சுந்தரம், "நாங்களும் இப்பவே ரெயினில் புறப்படுகின் றோம்" என்றார். வீட்டாரை வெளிக்கிட சொல்ல, சுந்தரத்தின் மனைவி கனகம் "என்னப்பா திடீரென விசாரிக்காமல் போறதோ?" என்றாள். மாணிக்கம் தானே சொன்னவர் நல்ல இடமென்று, "அவர் எங்களுக்குத் தீங்கு செய்யமாட்டார் தானே" என்றார். பெற்றோரின் விருப்பத்திற்கு சுதாவும் சம்மதம் தெரிவித்த நிலையில், இரவு உறவுக்காரர் சிலருடன் சுந்தரம் குடும்பம் கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

ரவி பெண் வீட்டார் தங்குவதற்கு ஓர் வாடகை வீட்டை வேண்டி அலங்காரம் செய்து கொண்டான். கல்யாணத்துக்கு வேண்டிய பொருட்களை எல்லாம் வகை தொகையாக வேண்டி வைத்துக் கொண் டான். பெண் வீட்டார் வந்து இறங்கினர். அவர்களை இன்முகத்துடன் நாலைந்து பேர் வரவேற்றனர். ரவி, "மாமா நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் எல்லா வசதி களும் செய்து தருவார்கள். நான் விசா அலுவலா வெளியில் போய்வாறன்" என சகஜமாகப் பேசிவிட்டுச் சென்றான்.

வெள்ளிக்கிழமை காலை இந்து ஆலயம் ஒன்றில் அந்தணர் முன்னிலையில் அக்கினி சாட்சியாகக் கொட்டு மேளம் முழங்கத் தாலி கட்டி, அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து பல்லாண்டு வாழ்கவென அறுகரிசியிட்டு நடந்தேறியது. ரவி-சுதா கல்யாணம். அலங்கரிக்கப்பட்ட காரில் மணமக்கள் ஏறினர். வாடகை வீட்டை நோக்கி கார் சிட்டாய் பறந்தது. மதியவிருந்து முடித்து எல்லோரும் மனமகிழ்வுடன் கலகலப்பாக இருந்தனர்.

இரவு சுதா கையில் பாலை ஏந்திய வளாகக் கனவுகள் பலதையும் சுமந்தபடி ரவியின் அறையைத் திறந்தாள். கொலுவிருந்த அம்மன் எழுந்தருளியது போல் இருந்த அவளை வைத்த கண் வாங்காமல் பிரமித்த பார்வையுடன் ரவி பார்த்தபடி இருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருவரும் சகஜமாகத் தமது அன்பினைப் பறிமாறியவர்களாகச் சந்தோசமாக இருந்த னர். ரவி எழுந்து வெளியில் சென்றவேளை ஐந்து தடவைகள் வெளிநாட்டில் இருந்து கோல் வந்தது. ஆறாவது தடவை கோல் வந்த போது சுதா தனது கணவனின் போன் தானே என அதனை எடுத்தாள். மறுமுனையில் "ஹலோ அப்பா..." என்றதும் சுதா "நீங்க யாரு" என்றாள். "ஓ வேலைக்கார அன்ரியா அப்பா ரவியிட்ட குடுங்கோ, அம்மா கதைக்க வேணுமாம்" என்ற வார்த்தை கேட்ட சுதா இடியோசை கேட்ட நாகமாக உறைந்து போனாள்.

"கனவுகாணும் வாழ்க்கையாவும் கலைந்து
போகும் கோலங்கள்
துடுப்புக் கூட பாரம் என்று தரையைத்தேடும்
ஓடங்கள்" ...

என்ற இளையராஜாவின் மெல்லிய இசை அறையை நிறைத்தது.

◆◆◆





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்ப வளர்ச்சியால் தொலைந்துபோகும் எமது வாழ்வு

*சி. சிவச்செல்வன்*
கல்மடுநகர்.

இன்றைய நிலையில் எமது தொழில் நுட்பத் துறை பாரிய அளவில் வளர்ச்சி கண்டிருக்கின்றது என்பது எவராலும் மறுக்க முடியாத ஒன்றாகும். இந்தவகையில் எமக்கு இதன்மூலம் பாரிய நன்மைகள் ஏற்பட்டிருக் கின்ற போதும் குறிப்பாக மருத்துவம், போக்குவரத்து, தொடர்பாடல், அன்றாட வேலைகள் போன்றவற்றில் மனிதனின் வாழ்வினை இலகுபடுத்தியிருக்கின்றது என்பது உண்மையானது.

இத் தொழில்நுட்பத்துறையின் மூலம் மருத்துவத்தில் பல சாதனைகளைச் செய்கின்ற போதிலும் இன்றைய மனிதர்கள் தமது அன்றாட வாழ்க்கையில் இவ் நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பல வியாதிகளுக்கு உள்ளாகின்றார்கள் என்பதனை எவரும் புரிந்து கொள்ளவில்லை. குறிப்பாக எமது பிரதேசத் தில் முக்கிய தொழிலாக விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அக்காலத் தில் மனிதன் பல நாட்களாகப் பாடுபட்டு, பதப்படுத்தி பயிரை விதைக்கின்றான். அதன் மூலம் அவனது உடலுறுப்புக்களின் அசைவின் தன்மையின் அடிப்படையில் மிக ஆரோக்கிய மான மனிதர்களாக வாழ்ந்து வந்தார்கள். வயல் வெட்டுவது என்றால் நாட்கணக்கில் வயலில் நின்று அதனை வெட்டி சூடு மிதிப்பது வழமை. அதனால் அவர்களது உடம்பில் வியர்வை மூலம் உடம்பின் சமநிலையினைப் பேணி நோய்களின்றிய வாழ்வினை வாழ்ந்தார்கள். இன்று இத் தொழில்நுட்பத் தினூடாக இச் செயற்பாடுகளினைச் செய்வதன் மூலம் அவர்களது உடம்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டு இளம் வயதினிலே நோய்வாய்ப்புக்கள் உண்டாகியுள்ளமை யினை நாம் அவதானிக்கக் கூடியதாக இருப்பதுடன், மருத்துவ அறிக்கைகளும் அதனையே சுட்டிக்காட்டி நிற்கின்றமை மிகவும் வேதனையினை உருவாக்குகின்றது.

தற்போது நவீனமுறை போக்குவரத்து வசதிகளின் ஊடாகவும் பாதை அபிவிருத்தி யின் மூலமாகவும் எமது போக்குவரத்தில் துரித மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் தற்போது நடைபெறுகின்ற விபத்துக்களைப் பார்க்கின்றபோது இத் தொழில்நுட்பத்தின் தேவைப்பாடு எமக்கு வேண்டியது தானா? எனச் சிந்திக்கத் தோன்றுகின்றது. மனிதன் தன் வாழ்வில் ஏற்பட்டுள்ள சுமையினைக் குறைப்பதற்கான கடும் பிரயத்தனத்தினைத் தான் செலுத்துகின்ற வாகனங்களில் காட்டு கின்றமையினாலும், பல இன்னல்களைக் கண்டு துவண்டுபோன மனங்களுடன் வாகனங்களை செலுத்துபவர்களின் அசண் டையீனப் போக்கினாலும் இவ் விபத்துக்கள் ஏற்படுகின்றது. இவற்றினைக் கட்டுப்படுத்து பவர்களின் திறமையினையும் நாம் குறைத்து மதிப்பிடமுடியாது. இருந்தபோதிலும் தங்களின் செயற்பாட்டிற்கு அப்பால் செல்வ தாகத் தெரிவித்துத் தப்பித்துக் கொள்வது தான் மிகவும் வேதனைக்குரிய குற்றமாக தெரி கின்றது.

தொழில்நுட்பத்தினால் எமக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் எதிரி கைத்தொலை பேசிகள். இன்று எவரது கைகளிலும் இவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைக் காணலாம். இவை எல்லா வழிகளிலும் எமக்கு மிகவும் உறுதுணையாக இருக்கின்றது என்பது யாராலும் மறுக்க முடியாதது. ஆனால் அதே அளவிலும் கூடியதாக மனித சமுதாயத்தினைச் சீரழிக்கப் புறப்பட்டுள்ள சாதனம் என்று கூறினாலும் மிகையாகாது. இன்று பாடசாலை மாணவர்களிடமும் தொலைபேசிகள் காணப்படுகின்றது. இடம்பெயர்விற்கு முன்னர் எமது மாவட்டத்தில் காணப்பட்ட கல்வி நிலையுடன் ஒப்பிட்டு பார்க்கின்றபோது தற்போது எவ்வாறான நிலையில் உள்ளது என்பதனை நாங்கள் கண்கூடாகப் பார்க்கின்றோம். இதற்குப் பிரதான காரணங்களில் ஒன்றாக இத் தொலைபேசிப் பாவனைகள் காணப்படுகின்றது. தற்போதைய நவீன தொழில்நுட்பங்களின் மாற்றங்கள் காரணமாக சமூகச் சீர்கேடான படங்களும், அவற்றினைப் பரப்புகின்ற செயற்பாடுகள் காரணமாகவும் சிறுவர் துஸ்பிரயோகங்கள் இன்று மலிந்து காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி சிறு வயதினிலேயே கற்பமாக்கப்படுகின்ற சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தற்போது உண்மையில் நடைபெற்ற சம்பவம் ஒன்று. கைத்தொலைபேசி மூலம் காதல் கொண்டு சந்திப்பினை மேற்கொள்வதற்காக எனகூறி, வேறு மாவட்டத்திற்கு வரவழைத்தபோது இரண்டு பாடசாலை பெண் பிள்ளைகள் உறவினர்களிடம் சொல்லாது சென்று பின் தனிமையில் விடப்பட்ட சம்பவம் வவுனியாவில் இடம் பெற்றுள்ளது. பொலிஸாரினால் இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அவர்கள் துன்புறுத் தலுக்கு உட்பட்டுள்ளதாகத் தெரிவித்து; பெற்றோர்களிடம் ஒப்படைத்த சம்பவம், எமது கலாசாரத்தின் உச்சக்கட்ட அழிவின் தன்மையினை விளக்குகின்றது. இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக எமது கலாசார விழுமியங்கள் அனைத்தும் அழிவுப் பாதையில் சென்று கொண்டிருப்பது என்பது கசப்பான உண்மை. வெளிநாட்டுக் கலாசாரம் என்ற அடிப்படையில் இன்று எம்மையே நாம் ஏமாற்றிக்கொண்டு நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே, மனிதர்களாகப் பிறந்த நாங்கள் தப்புச் செய்யும் முன்னர் பல நிமிடங்கள் அல்ல ஓர் நிமிடம் சிந்திப்போம். இல்லாவிடின் அற்ப சந்தோசங்களிற்காக ஆயுள் முழுவதும் துன்பப்பட வேண்டி நேரிடும். தப்புச் செய்ய முன்னர் சிந்தியுங்கள். தப்புச் செய்த பின்னர் வருந்திப் பலன் இல்லை. எனவே இச்செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தாங்களாகவே திருந்தாத விடத்து எமது சமுதாய கலாசாரம் சீரழிந்து போகின்றமையினைத் தடுப்பது என்பது கானல்நீரினைப் போலவே அமையும். இது தொடர்பான பாதிப்புக்களை ஒவ்வொரு வரது மனங்களிலும் பதியக்கூடியவாறு எம்மால் எடுக்க முடிந்த அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டியது எமது கடமையாகும்.

தற்காலத்தில் காணப்படுகின்ற அபார தொழில்நுட்ப வளர்ச்சி எமக்குப் பக்கபலமாக இருக்கின்றபோதும் அவற்றினை பயன்படுத்துகின்ற விதங்களின் தன்மைகளின் காரணமாகவும், எமது வாழ்க்கை முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அவற்றினைப் பற்றிய அறிவுகள் இன்மையினால் வளர்க்கப்படுகின்ற பிள்ளைகளின் செயற்பாடுகளின் ஊடாக எமது கலாசாரத்தில் பாரிய அழிவுகள் ஏற்பட்டு எமது வாழ்க்கை தொலைந்து போகின்றது என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டும்.

◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பிரமந்தனாறு"

செல்வி தேனுகா கணேசலிங்கம்,
பட்டதாரி பயிலுநர், பிரதேச செயலகம், கண்டாவளை.

இயற்கைவளம் கொழிக்கும் வன்னிப் பெருநிலப்பரப்பிலே கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்தின் ஓர் எல்லைக் கிராமமாகவும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் முனைவுப் பகுதிகளை இணைத்து நிற்கின்ற ஓர் எழில் கொஞ்சும் பசுமையான கிராமமாக பிரமந்தனாறு எனும் சிற்றூர் விளங்குகிறது. இது வடக்கே சுண்டிக் குளத்தையும், தெற்கே புன்னை நீராவியையும், கிழக்கே மயில்வாகன புரத்தையும் அயற்கிராமங்களாகவும் கொண்டு விளங்குகிறது.

இக் கிராமமானது 1972.04.18 அன்று படித்த வாலிபர் திட்டமாக உருப்பெற்றது இத் திட்டத்தின் கீழ் உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கென ஒருவருக்குத் தலா ஒன்றரை ஏக்கர் நிலம் வீதம் 605 பேருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு மொத்தமாகத் தொளாயிரத்து மூன்று ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு இந்நிலங்களுக்கு பிரமந்தனாற்றுக் குளத்தினூடாகச் சிறப்பான முறையில் நீர்ப் பாசனம் செய்யப்பட்டது. இக்கிராமத்திற்குப் பிரமந்தனாறு எனும் பெயர் வந்ததற்குப் பல காரணங்கள் இருக்கின்றது. ஒன்று பிற இடங்களின் மண் இப்பகுதிக்கு ஆற்றினால் அரித்துக்கொண்டு வரப்பட்டு ஒதுக்கப் பட்டதால் பிற மண்ணைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற காரணத்தைக் கருதியே இப்பெயர் வழங்கப்பட்டிருக்கின்றதென்றும், இன்னொரு காரணம் ஜீவராசிகளையெல்லாம் படைக்கின்ற பிரமனால் இவ்விடமும் படைக்கப்பட்டதால் அவனை நினைவுகூரும் முகமாக அவனது பெயர் ஆற்றுடன் சேர்க்கப் பட்டுள்ளதெனவும், மற்றும் பிரபந்தன் என்னுமோர் அரசன் இப்பகுதியில் கோட்டை அமைத்து வந்ததற்கான சான்றுகள் இருப்பதால் அவரது பெயர் இவ்வூருக்கு வழங்கப் படுகிறது என்பதும் பலரதும் பலவாறான கதைகளாகும்.

ஆரம்ப காலத்தில் இக்கிராமமானது யானைக்காடு என்று கூறினாலும் இங்கு நீர்வளமும், நிலவளமும் சிறந்து விளங்கியதால் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் இங்கு வந்து குடியேறிப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு அதாவது சுவைச்சரக்குப் பயிர்களான வெங்காயம், மிளகாய் போன்ற வற்றை அதிகமாகப் பயிர்செய்து அதிக விளைச்சலையும் வருமானத்தையும் பெற்றுக் கொண்டனர். ஆரம்ப காலத்தினை விட ஓரிரு ஆண்டுகளின் பின் நிலவளத்தின் தன்மையை அறிந்த மக்கள் மேலும் பல பாகங்களிலிருந்தும் வந்து காடுகளையெல்லாம் வெட்டிக் களனிகளாக்கினர். இவ்வாறு வாழ்ந்துவரும் நாளில் பயிர்ச் செய்கை மூலம் கிடைக்கின்ற அதிக விளைச்சலையும் உயர்வையும் கண்டு ஆசை கொண்டு பயிர்ச் செய்கை மட்டுமன்றி தென்னை, கமுகு, போன்ற நிரந்தரப் பயிர்களையும் நாட்டி தமது நிரந்தர வாழ்விடங்களையும் அமைத்துக் கொண்டனர். அன்றுமுதல் இன்றுவரை இங்கு வாழ்மக்களின் வாழ்வாதாரத்திற்குப் பிரமந்தனாற்றுக் குளத்து நீர்ப்பாசனமே உறுதுணையாக விளங்குகிறது. மேலும் பிரமந்தனாறு வாழ்மக்களுக்கு இறை துணைபுரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளத்திற்குப் பக்கத்திலே ஒரு கற்பக விநாயகர் ஆலயமும் அதற்கப்பால் ஒரு கிறிஸ்தவ ஆலயமும் அமைந்திருப்பது இக்கிராமத்தின் சிறப்பிற்குக் காரணம் என்று கூறலாம். அந்த அளவிற்கு இக்கிராமத்தின் ஆன்மீக முன்னேற்றம் உயர்ந்தோங்கி வருகிறது.

இங்கு வாழ்மக்கள் பொருளாதார விடயங்களில் மட்டுமல்ல ஏனைய கல்வி சமூகப் பண்பாட்டு விடயங்களிலும் முன்னின்று உழைத்தனர். ஆரம்ப காலத்திலே இங்குள்ள மக்கள் தமது பிள்ளைகளின் கல்வி அறிவை வளர்ப்பதற்குப் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கி வந்தனர். கல்விச் செல்வத்தைப் பெறுவதற்காக இக்கிராமத்திலிருந்து வடக்கே யாழ்ப்பாணம் சென்றும் ஏனையோர் பல தூரங்கள் நடந்து சென்று அயற்கிராமங்களிலும் தமது கல்வியைப் பெற்றனர். இவ்வாறாக இருந்துவரும் நாளில் இக்கிராமத்திற்கென ஒரு பாடசாலையை அமைக்க வேண்டுமென்று பலரது விருப்பத்தின் பேரில் 1989.11.15 அன்று ஒரு ஆரம்பப் பாடசாலையை ஆரம்பித்து வைத்தனர். பின்பு படிப்படியாகக் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் என உயர்ந்து மாணவர்களின் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேற்றினைக் கருத்திற் கொண்டு பத்து ஆண்டுகளின் பின்னர் உயர்தரப் பாடசாலை எனத் தரம் உயர்த்தப் பட்டு பிரமந்தனாறு மகா வித்தியாலயம்" என்ற பெயருடன் மிளிர்ந்து கொண்டிருக்கின்றது. இப்பாடசாலையிலே கல்வி கற்ற பலர் உயர்தரப் பரீட்சையிலே சித்தி பெற்று இலங்கையின் பல பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்று பல காரியாலயங்களிலும், பாடசாலைகளிலும் தொழில் புரிகின்றார்கள். இப்பாடசாலை கல்விச் செயற்பாட்டில் மட்டமல்ல இணை பாடவிதானச் செயற்பாடுகளிலும் கூடப் பல சாதனைகளைப் புரிந்து வருகிறது.

இக்கிராமத்தில் மேலும் பல துறைசார்கலைகளும் காணப்படுகின்றது. கோயிற் சிற்பக்கலை வல்லுநர் இக்கிராமத்திலேயே வாழ்ந்து வருவதனால் சிற்பக்கலை மிளிர்ந்து வருகின்றது.

மேலும் இங்கு மக்கள் தமது தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக ஒரு பொதுநோக்கு மண்டபமும் பொதுமக்களின் நன்மை கருதி கிராம அலுவலர் அலுவலகம், கூட்டுறவுச் சங்கம், மாதர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கமக்கார அமைப்பு போன்றன இக்கிராமத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் முக்கிய காரணமாக அமைகின்றன. எனவே எம் கிராமம் உழைப்பாளர் பலரின் உண்மை உழைப்பினால் விரைவில் மிகவும் மேம்பாடான கிராமமாக மிளிரும் என எதிர்பார்ப்போம்.

◆◆◆




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாவளைப் பிரதேச கலாசாரப் பேரவையால் கலை இலக்கியப் பணிகளில் ஈடுபட்டுவரும் சேவையாளர்கள் மற்றும் கலைஞர்களுக்காக வருடந்தோறும் வழங்கப்படுகின்ற கலை ஒளி விருதை 2012 ஆம் ஆண்டு பெறும் கலைஞர்கள் விபரம்



திரு. மு.செல்லத்துரை
(கூத்து - அண்ணாவி)
நாகேந்திரபுரம்,
புளியம்பொக்கணை.



திரு. ம.வேலாயுதபிள்ளை
(எழுத்தாக்கம்)
கலவெட்டித்திடல்,
புளியம்பொக்கணை.



திரு ஆ.பாலசுப்பிரமணியம்
(கூத்து - அண்ணாவி)
தட்டுவன்கொட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச கலை இலக்கிய மன்ற செயற்குழுக்கள்



புத்தொளி கலை இலக்கிய மன்ற செயற்குழுவினர்
கோரக்கன்கட்டு.



கண்ணகி அம்பாள் கலாமன்ற செயற்குழுவினர்
தட்டுவன்கொட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணகை கலாமன்ற செயற்குழுவினர்
புளியம்பொக்கணை.



முத்தமிழ் கலாமன்ற செயற்குழுவினர்
கண்டாவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலா உணவகம்

சுகாதார முறைப்படி சுத்தமாகவும் தரமமானதாகவும் தயார்செய்யப்பட்ட மதிய உணவுடன் கொத்து, முட்டைக்கொத்து மற்றும் சிற்றுண்டி வகைகளையும் சுவைத்து மகிழ்ந்திட நாடுங்கள்.

ஓடருக்கு சிறந்தவகையில் உணவுகளைச் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

முல்லை வீதி,
வெளிக்கண்டல்.


"வளை ஓசை" மலர் அழகுற வெளிவருவதற்கும்,
கலாசார விழா சிறப்புறவும்
அனுசரணை வழங்கிய அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்.



பிரதேச கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம், கண்டாவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசார விழா சிறப்புற வாழ்த்துகிறோம்

# SINGER® Plus




வட்டி இல்லா* கொடுப்பனவு முறை

விசேட* கழிவு

மாற்றீடு* கொடுப்பனவு

3 வருட* உத்தரவாதம்

விசேட* பரிசுகள்

**A9 Road, Karadipokku Junction, Kilinochchi. 021 567 5677**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைச்சி வடக்கு பநோ.கூ.சங்கம்-பரந்தன்
தலைமைச் செயலகம்
HEAD OFFICE

# KARACHCHI NORTH MULTI-PURPOSE CO-OPERTIVE SOCIETY LTD
## PARANTHAN.

Regd No:Pa/47 Of 10.02.1971

## Our Best Services

### 1.Distributors

a.Ole Marketing (Pvt) Ltd. (Pepsi Soft Drinks)-Kilinochchi District.
b.Unilever Sri Lanka Ltd-Mother Union-Northern Province.
c.Tokyo Cement Company (Lanka) PLC-Kilinochchi District
d.Ceylon Petroleum Corporation-Dealer.

### 2.Consumer service.
### 3.Hotel Services.
### 4.Rice Mill.
### 5.Cooperative Rural Bank Service.
### 6.Social Service.





புளியம்பொக்கனை அரிசி ஆலை திறப்பு விழாவின் போது


புளியம்பொக்கனை அரிசி ஆலையில் நெல் கொள்வனவின் போது


லங்கா எரிபொருள் நிரப்பு நிலைய திறப்புவிழாவின்போது


புளியம்பொக்கனை அரிசி ஆலையில்.



உமையாள்புரம் கிளை திறப்பு விழாவின் போது

T.P.No:024 324 8302, Fax No:021 228 0037 E-mail: Karachchinorthmpcsltd@gmail.com

Harikanan, jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org